நிமிர்வோம்
தடைகளைத் தகர்த்து...

திராவிடர் விடுதலைக் கழக மாத இதழ்
ஏப்ரல் 2019 / ரூ.20
www.dvkperiyar.com
nimirvomdvk@gmail.com

ஆசிரியர் குழு
கொளத்தூர் மணி
விடுதலை இராசேந்திரன்

வினியோகப் பொறுப்பு
சூலூர் பன்னீர்செல்வம்

இதழ் வடிவமைப்பு
வெல்கின் கணினி
மா. தேன்ராஜ்

அலுவலக முகவரி
95, டாக்டர் நடேசன் சாலை
அம்பேத்கர் பாலம்
மயிலாப்பூர், சென்னை 600 004
தொலைபேசி எண்:
044-24980745

அனைத்துத் தொடர்புகளுக்கும்
இரா. உமாபதி
72992 30363

# அய்ந்தாண்டு அடக்குமுறைக்கு பாடம் புகட்ட வேண்டிய தருணம்

மோடியின் தலைமையிலான பா.ஜ.க. ஆட்சி கடந்த 5 ஆண்டுகளாக அதிகாரத்தைப் பயன்படுத்தி பார்ப்பனிய சர்வாதிகாரத்தையே கட்டவிழ்த்துவிட்டது. மீண்டும் வேதகாலம் திரும்பி விட்டதாகவே பார்ப்பனியம் பூரித்தது. தமிழ்நாட்டில் பெரியார் இயக்கமும் – அதன் வழி வந்த ‘திராவிட அரசியலும்’ உருவாக்கிய உரிமைகள் அனைத்தும் படிப்படியாகப் பறிக்கப்பட்டன. தமிழ்நாடா? வடநாடா? என்று வியக்க வைக்கும் நிலைக்கு அனைத்து துறைகளிலும் வடநாட்டார் குவிக்கப்பட்டனர். ஆளுநர் அதிகாரம் பெற்றவர்களாக்கப்பட்டனர். பெரியார் சிலைகளை உடைக்க வேண்டும் என்று பேசக் கூடிய துணிவைப் பார்ப்பனர்கள் பெற்றனர். நீட் திணிப்பு, இந்தித் திணிப்பு, சமஸ்கிருதத் திணிப்பு, வாழ்வுரிமையைக் குலைக்கும் நச்சுத் திட்டங்கள் திணிப்பு என்று அடுக்கடுக்கான படையெடுப்புகள் நடந்தன. தமிழ்நாட்டில் ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு தமிழக அரசின் அதிகாரத்தை பா.ஜ.க. தனது பொம்மலாட்ட ‘வலையத்துக்குள்’ கொண்டு வந்தது. ஆளும் கட்சியை உடைப்பது; இணைப்பது; மிரட்டுவது என அத்தனை அஸ்திரங்களையும் பயன்படுத்தியது.

கருத்துரிமைகள் நசுக்கப்பட்டன. தமிழ்நாட்டில் சமூக செயல்பாட்டாளர்கள் மக்கள் பிரச்சினைக்காக மதவெறி சக்திகளை எதிர்த்துப் போராடிய இயக்கங்கள் கடும் ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டன. தேசியப் பாதுகாப்புச் சட்டங்களும் குண்டர் சட்டங்களும் பாய்ந்தன. தூத்துக்குடியில் நச்சு கக்கும் ஸ்டெர்லைட் ஆலை வேண்டாம் என்று போராடிய அப்பாவி மக்கள், காவல்துறையின் துப்பாக்கிச் சூடு என்ற பெயரில் குறி வைத்துக் கொல்லப்பட்டனர். எட்டு வழிச் சாலைக்காக நிலத்தைப் பறிகொடுக்க மறுத்த மக்களும் நெடுவாசல், கதிராமங்கலத்தில் நச்சுத் திட்டங்களை எதிர்த்துப் போராடிய மக்களும் அடக்கி ஒடுக்கப்பட்டனர். பெரியார் சிலை, காந்தி சிலைக்கு மாலை போடுவதுகூட குற்றம் என்று அரசு வழக்கு தொடர்ந்தது. இராமரதம் என்ற பெயரில் அரசியல் யாத்திரைக்கு தமிழக அரசு பாதுகாப்பு அளித்தது. இப்படி ஏராளமாகப் பட்டியலிட முடியும்.

இந்த அடக்குமுறைகள் உரிமை பறிப்புகளுக்கு நீதி கேட்கும் ஒரு வாய்ப்பே இந்தத் தேர்தல் களம். கடந்த அய்ந்து ஆண்டுகளாக திராவிடர் விடுதலைக் கழகம் தொடர்ச்சியாக முன்னெடுத்த பரப்புரை இயக்கங்களின் தொடர்ச்சியாகவே இந்தத் தேர்தல் களமும் வந்து சேர்ந்திருக்கிறது. தேர்தல் அரசியலில் ஈடுபடாத மக்கள் இயக்கங்கள் சந்தித்த அடக்குமுறைகளுக்கும் கொடுத்த விலைக்கும் நீதி கேட்கும் நேரம் இது.

பா.ஜ.க. ஆட்சியையும் அதன் சுட்டுவிரல் அசைவுக்கு ஆடிக் கொண்டிருக்கும் தமிழக இறையாண்மையை அடகு வைத்துவிட்ட அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக்கும் மக்கள் சக்தியின் வலிமையை வாக்குகள் வழியாக உணர்த்திக் காட்ட வேண்டிய தருணம் இது!

அந்தப் பார்வையில் இந்த ‘நிமிர்வோம்’ இதழை தேர்தல் சிறப்பிதழாகக் கொண்டு வந்திருக்கிறோம்! வாசகர்களின் ஆதரவு கிடைக்கும் என்று நம்புகிறோம்!



# தன்னாட்சி அமைப்புகளை சீர்குலைத்த மோடி

தேர்தல் ஆணையம் சி.பி.அய். – திட்டக் குழு – உச்சநீதிமன்றம் என்ற அரசியல் சட்டம் அங்கீகரித்த தன்னாட்சி அமைப்புகளை சீர்குலைத்தது மோடியின் ஆட்சி.

கடந்த 5 ஆண்டுகளில் மோடி ஆட்சி – அவற்றின் அடையாளங்களை அழித்தது – தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தது – இந்திய வரலாற்றில் இதற்கு முன் இதுபோன்ற சீர்குலைவு எப்போதும் நடந்தது இல்லை.

**திட்டக்குழு – நிதிஅயோக்காக மாற்றப்பட்டது**

இந்தியாவில் சுதந்திரத்துக்குப் பிறகு பன்முகத் தன்மை கொண்ட மாநிலங்களுக்கு அதற்கேற்ற திட்டங்களை உருவாக்கவும் அது குறித்து சுதந்திரமான விவாதங்கள் உரையாடல்களுக்கு வழி வகுக்கும் திட்டக்குழு உருவாக்கப்பட்டது. பல்வேறு துறைகளைச் சார்ந்த நிபுணர்கள் இதில் இடம் பெற்றிருந்தனர். அரசின் தலையீடுஇல்லாத சுயேட்சை அமைப்பாக செயல்பட்டு வந்தது. மோடி பிரதமர் பதவியேற்று 2014ஆம் ஆண்டு அவரது ‘முதல் சுதந்திர நாள்’ உரையில் திட்டக்குழு ஒழிக்கப்பட்டு, அதற்கு பதிலாக ‘இந்தியாவை மாற்றியமைக்கும் தேசிய நிறுவனம்’ (National Institution for Transforming Inida (NITI)) - என்ற அமைப்பை உருவாக்கப் போவதாக அறிவித்தார். துறைசார் நிபுணர்களுக்கு பதிலாக அரசு அதிகாரவர்க்க நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது. நாட்டின் பிரச்சினைகளை ஆராயக் கூடியவர்கள் அதில் இடம் பெறவில்லை. பொருளாதார ஆய்வுகளோ புள்ளி விவரங்களோ திரட்டப்படவில்லை. சுகாதாரம் - விவசாயம் - வேலை வாய்ப்புகள் குறித்து திட்டமிடக்கூடிய நிபுணத்துவம் இல்லாத அமைப்பாக அது முடங்கிப் போனது. கார்ப்பரேட் நிறுவனங்களுக்கும் அரசுக்கும் இடைத் தரகராக செயல்படும் அமைப்பாகியது.

**தேர்தல் ஆணையம்**

தேர்தல் ஆணையம் - அரசியல் சட்டத்தின் கீழ் தன்னாட்சியுடன் செயல்படுவதற்காக உருவான அமைப்பு - பா.ஜ.க. ஆட்சியின் ‘கைபொம்மையாக’ மாறிக் கிடக்கிறது. ஆளும் பா.ஜ.க.வின் விருப்பு வெறுப்புக்கேற்ப தேர்தல்களை நடத்தி வருகிறது இந்த அமைப்பு. இதற்கு ஏராளமான சான்றுகளை பட்டியலிட முடியும். பா.ஜ.க. ஆட்சியின் நலனுக்காகவே 2019ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலை ஏழு கட்டங்களாகப் பிரித்து நடத்துகிறது. ஆணையம் மத்திய பாதுகாப்புப் படைப் பிரிவுகளை பல்வேறு பகுதிகளுக்கும் பிரித்து அனுப்புவதை ஒரு காரணமாகக் கூறுகிறது. தேர்தலுக்கான அறிவிப்பை முன்கூட்டியே அறிவிக்காமல், மத்திய அரசின் சில ஓட்டுக்கான அறிவிப்புகளுக்காகவே மார்ச் 10ஆம் தேதி வரை காத்திருந்து அரசுக்கு நீண்ட அவகாசம் கொடுத்தது. தேர்தல் அறிவிப்பு வெளியிட்டதற்குப் பிறகு அரசு புதிய திட்டங்களை அறிவிக்கக் கூடாது என்பது தேர்தல் நடத்தை விதி.

- 2017ஆம் ஆண்டு குஜராத்-ஹிமாச்சலப் பிரதேச மாநில சட்டசபைகளுக்கு தேர்தல் நடந்த போது தேர்தல் தேதி அறிவிப்புகளில் ஆணையம் பா.ஜ.க.வின் நலனுக்காக முறைகேடாக செயல் பட்டது. இரண்டு மாநிலங்களுக்கும் வாக்கு எண்ணிக்கைக்கு ஒரே தேதி தான் என்றாலும், குஜராத் தேர்தலை அறிவிக்காமல், இமாச்சலப் பிரதேச தேர்தல் தேதியை மட்டும் அறிவித்தார்கள். குஜராத் மாநில அரசு வாக்காளர்களிடம் ஓட்டு வாங்க சில புதிய திட்டங்களை அறிவிக்க வேண்டும் என்பதற்காகவே முறைகேடாக இந்த கால அவகாசம் தரப்பட்டது.
- 2018 ஜனவரியில் தேர்தல் ஆணையத்தின் தலைவராக இருந்தவர் ஜோதி. டெல்லியில் ஆளும் ஆம் ஆத்மி கட்சியின் 20 சட்டமன்ற உறுப்பினர்களை பதவி நீக்கம் செய்து அறிவித்தார். வருமானம் வரக் கூடிய பதவிகளை வகித்தார்கள்

என்பது குற்றச்சாட்டு. இது குறித்து அந்த சட்டமன்ற உறுப்பினர்களிடையே எந்த விளக்கமும் கேட்காமலேயே தேர்தல் ஆணையம் பதவியைப் பறித்தது என்பதுதான் இதில் முக்கியமானது. பாதிக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் டெல்லி உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்கள். தேர்தல் ஆணையம் பதவி பறிப்பு உத்தரவை மறுபரிசிலனை செய்ய வேண்டும் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. தீர்ப்புக்குப் பிறகு, ஆம் ஆத்மி கட்சியின் 20 சட்டமன்ற உறுப்பினர்கள் பதவியை உறுதி செய்யாமல் பா.ஜ.க. ஆட்சிக்கு சாதகமாக வேண்டுமென்றே ஒரு ஆண்டு காலம் வரை இதில் எந்த முடிவையும் எடுக்காமல் கிடப்பில் போட்டது தேர்தல் ஆணையம்.

- தமிழ்நாட்டில் ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு அ.இ.அ.தி.மு.க.வின் ஓ.பி.எஸ். அணி, சசிகலா அணிக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தியது. முதலமைச்சர் பதவியில் தன்னைத் தொடர சசிகலா அனுமதிக்காமல், அவரே முதல்வர் பதவியைப் பறித்துக் கொண்டார் என்பதே ஓ.பன்னீர் செல்வத்தின் ஆத்திரம். சசிகலா முதல்வராக தேர்வு செய்யப்பட்டாலும் பதவி ஏற்க முடியவில்லை. சொத்துக் குவிப்பு மோசடி வழக்கில் அவருக்கு சிறைத் தண்டனை உறுதியானது. எடப்பாடி பழனிச்சாமியை சசிகலா முதல்வராக்கினார். தி.மு.க. நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்தது. ஓ. பன்னீர்செல்வம் ஆதரவு எம்.எல்.ஏ.க்கள் 11 பேர் சொந்தக் கட்சிக்கு எதிராக வாக்களித்தனர். நியாயமாக கட்சிமாறல் தடுப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியவர்கள். ஆனால் நடவடிக்கை எடுக்கவில்லை. எடப்பாடி பழனிச்சாமிக்கு எதிராக அவரது தலைமையை மாற்ற வேண்டும் என்று ஆளுநரிடம் புகார் தந்த 18 எம்.எல்.ஏ.க்கள் பதவியைப் பறித்து உத்தரவிட்டார் சபாநாயகர். இந்தத் தேர்தலை உடனே நடத்தாமல் காலம் தாழ்த்தி, அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக் கவிழாமல் பா.ஜ.க. ஆணைக்கேற்ப செயல்பட்டது தேர்தல் ஆணையம். வேறு வழியில்லாமல் இப்போது நாடாளுமன்றத் தேர்தலோடு 21 சட்டமன்ற தொகுதிகளுக்கும் தேர்தல் ஆணையம் தேர்தல் அறிவித்திருக்க வேண்டும். ஆனால் 18 சட்டமன்ற தொகுதிகளுக்கு மட்டுமே அறிவித்தது. 3 சட்டமன்ற தொகுதிகளில் தேர்தல் வழக்கு இருப்பதாக சமாதானம் கூறியது. 21 சட்டமன்ற தொகுதிகளுக்கும் தேர்தல் நடத்தப்பட்டு அதில் எதிர்க்கட்சி வெற்றி பெற்று விட்டால் அ.இ.அ.தி.மு.க. மெஜாரிட்டிக்கு நெருக்கடி வந்துவிடும் என்பதால் அதில் 3 தொகுதிகளை பாதுகாப்பாக தேர்தல் நடத்தாமல் ஒதுக்கி வைப்பதே தேர்தல் ஆணையத்தின் நோக்கம். இப்போது சென்னை உயர்நீதிமன்றமும் உச்சநீதிமன்றமும் வழக்கு நிலுவையில் இருப்பதைக் காரணம் காட்டி தேர்தலைத் தள்ளிப் போடுவது சரியான காரணம் அல்ல. ஏற்கனவே வழக்கு நிலுவையில் உள்ள தொகுதிகளில் தேர்தல் நடந்திருக்கின்றன என்பதை சுட்டிக்காட்டி யிருக்கிறது. தேர்தல் ஆணையத்தின் முகத்திரை கிழிந்து தொங்குகிறது.

- ஜெயலலிதா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது மூன்று இடைத் தேர்தல்கள் நடந்தன. அதில் ஒன்று திருப்பரங்குன்றம் இடைத் தேர்தல். அ.இ.அ.தி.மு.க. வேட்பாளருக்கு அவர் கட்சி வேட்பாளர் என்று சான்றளித்து ஜெயலலிதா கட்சியின் பொதுச் செயலாளர் என்ற முறையில் வேட்புமனுவில் கையொப்பமிட வேண்டும் என்பது தேர்தல் விதி. ஜெயலலிதாவால் கையொப்பமிட முடியவில்லை; விண்ணப்பப் படிவத்தில் அவரது கை நாட்டுப் பெற்றுள்ளதாகக் கூறி, கட்சி சார்பில் சமர்ப்பித்தார்கள். அது ஜெயலலிதாவின் கை விரல் ரேகை தானா என்பதை முறையாக உறுதிப்படுத்தாமல் சமர்ப்பித்த விண்ணப்பத்தை தேர்தல் ஆணையம் ஏற்றுக் கொண்டது. இப்போது சென்னை உயர்நீதிமன்றம் இது மோசடி (fraud) என்று தீர்ப்பளித்துள்ளது. தேர்தல் ஆணையம் எந்த பதிலும் கூறாமல் வாய்மூடி நிற்கிறது.

- இப்போது அறிவிக்கப்பட்ட நாடாளுமன்றத் தேர்தல் அறிவிப்பிலும் தேர்தல் ஆணையம் நேர்மையாக செயல்படவில்லை. மிகப் பெரும் மாநிலமும் அதிக நாடாளுமன்ற உறுப்பினர்களை தரக் கூடியதுமான உ.பி.யில் 7 கட்டங்களில் தேர்தல் நடக்கப் போகிறது. பீகார், மேற்கு வங்க மாநிலத்துக்கு நான்கு கட்டத் தேர்தல்கள். ஜம்மு காஷ்மீர் மாநிலத்துக்கு நாடாளுமன்றத் தேர்தலுடன் சட்டமன்றத் தேர்தலையும் நடத்த வேண்டும். ஆனால் சட்டமன்றத்துக்கான தேர்தல் அறிவிக்கப்படவில்லை. ஒவ்வொரு மாநிலத்துக்கும் ஒரே சீரான அணுகுமுறை பின்பற்றப்படவில்லை.

- ஊழல் ஒழிப்புக்கான ‘லோக்பால்’ அமைப்புக்கு தலைவரை நியமிக்கக் கோரி உச்சநீதிமன்றம் தொடர்ந்து வலியுறுத்தியபோது அதைக் கண்டுகொள்ளாத பிரதமர் மோடி, தேர்தல் தேதி அறிவிப்புக்குப் பிறகு ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி ஒருவரை (பிளாக்கி சந்திர கோஷ்) இப்பதவிக்கு நியமித்து ஊழல் ஒழிப்புக்கு தமது ஆட்சி தயாராக இருப்பதாக வாக்காளர்களுக்கு உணர்த்த விரும்புகிறார். தேர்தல் நடத்தை விதிகளுக்கு எதிரான இந்த முறைகேட்டை தேர்தல் ஆணையமும் ஒத்துக் கொண்டது.

- கருநாடக மாநில சட்டமன்றத்துக்கு தேர்தல் ஆணையம் தேதி அறிவிப்பதற்கு முன்கூட்டியே பா.ஜ.க.வின் இணையதளத்தில் அதற்கான அறிவிப்பு வந்தது. இப்படி ஏராளமாக பட்டியலிட முடியும்.

### சி.பி.அய். நம்பகத் தன்மை குலைப்பு

5 ஆண்டு மோடி ஆட்சியில் சீர்குலைக்கப்பட்ட மற்றொரு அமைப்பு சி.பி.அய். என்ற மத்திய புலனாய்வுத் துறை. மத்திய கண்காணிப்பு ஆணையம் என்ற சுயேட்சை அதிகாரம் கொண்ட அமைப்பின் கண்காணிப்பில் செயல்படும் புலனாய்வுத் துறை சி.பி.அய்.

ஊழல் ஆட்சியான காங்கிரசை வீழ்த்த வேண்டும் என்று கூறி ஆட்சிக்கு வந்தார் மோடி. ஆனால் காங்கிரஸ் தலைமையிலான அய்க்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் சி.பி.அய். இயக்குனராக நியமிக்கப்பட்ட ரஞ்சித் சின்கா என்பவரை மட்டும் அப்படியே பதவியில் தொடர அனுமதித்தது மோடி ஆட்சி. ரஞ்சித் சின்கா, பல ஊழல் வழக்குகளின் விசாரணையில் முறைகேடாக தலையிட்டவர் என்ற குற்றச்சாட்டுக்குள்ளான ஒரு அதிகாரி. உச்சநீதிமன்றமே இந்த அதிகாரியின் முறைகேடுகளைக் கண்டித்த நிலையிலும் அவர் பதவிக் காலம் முடியும் வரை பதவியில் தொடர அனுமதித்தது மோடி ஆட்சி. அதற்குக் காரணம் என்ன தெரியுமா? இஷ்ரத் ஜஹான் போலி என்கவுண்டர் வழக்கில் முக்கிய குற்றவாளியான அமீத்ஷாவை தனது ஜூனியர் அதிகாரிகளின் கருத்துகளைப் புறந்தள்ளிவிட்டு அவர் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யாமல் காப்பாற்றியவர் என்பதால்தான். அதற்கு மோடி ஆட்சி தந்த வெகுமதிதான் பதவி நீடிப்பு.

ரஞ்சித் சின்கா பதவி ஓய்வுக்குப் பிறகு இயக்குனர் பதவிக்கு வந்த அனில் குமார் சின்காவும் அமீத் ஷாவைக் காப்பாற்றும் முயற்சிகளில் தொடர்ந்து ஈடுபட்டார். 2014 டிசம்பர் மாதம் விசாரணை நீதிமன்றம் அமீத் ஷாவை விடுவித்ததை எதிர்த்து சி.பி.அய். மேல்முறையீட்டுக்குச் சென்றிருக்கவேண்டும். அப்படி செய்யாமல் அமீத் ஷாவை காப்பாற்றினார் அனில் குமார் சின்கா.

பல்வேறு வங்கிகளில் கடன் வாங்கி, பல ஆயிரம் கோடி மோசடி செய்த விஜய் மல்லையா தேடப்படும் குற்றவாளி என்று அறிவிக்கப்பட்ட நிலையில் 2015இல் அவர் பாதுகாப்பாக இலண்டனுக்கு தப்பி செல்ல உதவியது சி.பி.அய்.

- 2016ஆம் ஆண்டு பி.கே. பன்சால் என்ற மூத்த அதிகாரி (60), அவரது மகன் யோகேஷ் (31) இருவரும் கிழக்கு டெல்லியில் உள்ள அவரது வீட்டில் தற்கொலை செய்து கொண்டார்கள். பன்சால் கார்ப்பரேட் கம்பெனிகள் தொடர்பான ஊழல் வழக்குகளை விசாரிக்கும் பிரிவுக்கு தலைமை இயக்குநராக இருந்தவர். ஒரு ஊழல் வழக்கு விசாரணையில் தாம் ஈடுபட்டிருந்தபோது சி.பி.அய். தன்னை அவமதித்து சித்திரவதை செய்தது என்றும், அதன் காரணமாகவே தற்கொலை செய்து கொள்வதாகவும் கடிதம் எழுதி வைத்திருந்தார். அதற்கு முன்பே தனது கணவருக்கு சி.பி.அய். தரும் அவமானங்களைத் தாங்கிக் கொள்ள முடியாமல் அவரது மனைவி சத்யபாலா, மகள் நேகா இருவரும் தற்கொலை செய்து கொண்டனர்.
- குஜராத்தில் 2002இல் மோடி முதல்வராக இருந்தபோது இஸ்லாமியர்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்துவிட்ட இனப் படுகொலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்காகப் போராடியவர் சமூகப் போராளி டீஸ்தா செதால் வாட் அதற்காக 2015ஆம் ஆண்டு 16 பேர் அடங்கிய சி.பி.அய். குழு வெளிநாட்டுப் பணம் அவருக்கு வருவதாகக் கூறி மும்பையில் அவரது வீட்டுக்குள் சோதனை நடத்தியது; தொடர்ந்து அவரை அலைக் கழித்தது.
- அய்க்கிய முற்போக்குக் கூட்டணியின் இரண்டாவது காலகட்ட ஆட்சி காலத்தில் இமாச்சல பிரதேச முதல்வராக இருந்தவர் வீரேந்திரா சிங். அவர் வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்ததாகக் கூறி அவரது டெல்லி வீட்டில் சி.பி.அய். சோதனை நடத்தியது. சோதனை நடத்திய நாள் அவரது வீட்டில் மகளுக்குத் திருமணம் நடந்த நாள்.

அனில்குமார் சின்காவின் பதவிக் காலம் 2016 டிசம்பரில் முடிவடையும் நிலையில் இயக்குனர் பதவிக்கு வர வேண்டியவர் அடுத்த நிலையில் இருந்த ஆர்.கே. தத்தா. அவர் தங்களது முறைகேடுகளுக்கு ஒத்துழைக்க மாட்டார் என்று கருதிய மோடி ஆட்சி, அவரை உள்துறை அமைச்சகத்துக்கு இடமாற்றம் செய்தது. மூத்த அதிகாரி இடமாற்றம் செய்யப்பட்டதால், கூடுதல் இயக்குனராக இருந்த நாகேஷ் அஸ்தானா என்பவர் தற்காலிக இயக்குநராக நியமிக்கப்பட்டார். சி.பி.அய். இயக்குநர்களை தேர்வு செய்வதற்கு உயர்மட்டக் குழு ஒன்று இருக்கிறது. அதில் பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி ஆகியோர் இடம் பெற்றிருப்பார்கள். இயல்பாக இயக்குனராக வேண்டிய ஆர்.கே. தத்தா, நிலக்கரி ஒதுக்கீடு தொடர்பான வழக்கை விசாரித்து வந்தவர் என்பதோடு உச்சநீதிமன்றம் இந்த விசாரணையில் தொடர்புடைய அதிகாரிகளை இடமாற்றம் செய்யக்கூடாது என்று உத்தரவிட்டிருந்தது. ஆனாலும் நியாயமான விசாரணையை நடத்தி வந்த அந்த அதிகாரியை உச்சநீதிமன்ற உத்தரவையும் மதிக்காமல் அவர் சி.பி.அய். தலைமைப் பொறுப்புக்கு வந்து விடாமல் தடுக்க இடமாற்றம் செய்தார்கள். 2017 பிப்ரவரியில் அவர் ஓய்வு பெற்றார்.

அவரைத் தொடர்ந்து அசோக் குமார் வர்மா என்ற இயக்குனரை உயர்மட்டக் குழு நியமித்தது.

இந்த நியமனத்தை விரும்பாத மோடி, குஜராத்தைச் சார்ந்த அஸ்தனா என்பவரை மத்திய கண்காணிப்பு வாரியத்தின் வழியாக சிறப்பு இயக்குனராக நியமித்தார். இவர் ஏற்கனவே ஊழல் குற்றச்சாட்டுக்கு உள்ளானவர் என்பதால் இயக்குனர் வர்மா, சிறப்பு இயக்குநராக நியமிக்கப்பட்ட அஸ்தனாவின் நியமனத்தை எதிர்த்தார். வர்மா மீது எதிர் ஊழல் குற்றச்சாட்டை அஸ்தனா சுமத்தவே சி.பி.அய். அமைப்பு சந்தி சிரித்தது. ஒரு நள்ளிரவில் மோடி ஆட்சி இருவரையும் நீக்கி நாகேஸ்வரராவ் என்பவரை இடைக்கால இயக்குநராக நியமித்தது. (இயக்குநர் பதவி என்றால் மட்டுமே உயர்மட்டக் குழு நியமிக்க முடியும்; இடைக்கால இயக்குநரை அரசே நியமிக்கலாம்) பிரச்சினை உச்சநீதிமன்றம் போனது. வர்மா முறையான இயக்குநர் என்று அறிவித்த உச்சநீதிமன்றம் அதற்கு அடையாளமாக ஒரு நாள் மட்டும் அவர் இயக்குநராக இருக்கலாம் என்று கூறவே, அவர் தன்மானத்தோடு பதவியை இராஜினாமா செய்வதாக அறிவித்து விட்டார். சி.பி.அய். என்ற அமைப்பை இப்படி யெல்லாம் தனது சொந்த நலனுக்கு பந்தாடியது மோடி ஆட்சி.

**உச்சநீதிமன்றத்திலும் குறுக்கீடு**

மோடி ஆட்சி உச்சநீதிமன்றத்தையும் விட்டு வைக்கவில்லை. தலைமை நீதிபதியாக இருந்த தீபக் மிஸ்ரா, முக்கியத்துவமான வழக்குகளை விசாரிக்க நியமிக்கும் நீதிபதிகளில் பாரபட்சம் காட்டுகிறார் என்று மூத்த நீதிபதிகள் ஜெ. செலமேஸ்வரர், ரஞ்சன் கோகாய், மதன் பி. லோகுர், குரியன் ஜோசப் ஆகிய நீதிபதிகள் தலைமை நீதிபதிக்கு எதிராக பத்திரிகை யாளர்களுக்கு பேட்டி அளித்தனர். உச்சநீதிமன்ற வரலாற்றில் இப்படி ஒரு சம்பவம் நிகழ்ந்ததே இல்லை.

அமீத் ஷாவுக்கு எதிராக செயல்பட்ட காரணத்துக்காக உச்சநீதிமன்ற நீதிபதிக்கு பரிந்துரைத்த கோபால் சுப்ரமணியம் என்பவரை நீதிபதியாக்க மறுத்த மோடி ஆட்சி, அமீத் ஷா மீதான குற்றப் பத்திரிகையை தள்ளுபடி செய்த காரணத்தால் தலைமை நீதிபதியான சதாசிவத்துக்கு அவர் பதவி ஓய்வு பெற்றவுடன் கேரள ஆளுநர் பதவியை வழங்கியது.

**– இரா**

# மோடியின் வீண்விரயச் செலவுகள்

அய்ந்தாண்டுகளில் (1825 நாட்களில்) மோடி மேற்கொண்ட பயண நாள் :

வெளிநாட்டுப் பயணம் : 192 நாட்கள்

உள்நாட்டுப் பயணம் : 389 நாட்கள்

ஒவ்வொரு 10 நாட்களுக்கும் ஒருமுறை – வெளிநாட்டுப் பயணம்

ஒவ்வொரு 3 நாட்களுக்கு ஒருமுறை உள்நாடு / வெளிநாட்டுப் பயணம்


பயணச் செலவு : ரூ.2021 கோடி

**வெளிநாட்டுப் பயணங்கள்**

பெரும்பான்மையாக – ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் சென்றுள்ளார் (அப்போது இந்தியாவில் கடும் கோடை) வெளிநாட்டுப் பயணங்களில், உடன் வெளியுறவு அமைச்சர் செல்வதில்லை. மாறாக, அதானி, அம்பானி போன்ற தொழிலதிபர்கள் சென்றுள்ளார்கள்.

**மோடி அரசின் ஊதாரித்தனமான விளம்பரம், பயணம், திட்டச் செலவுகள்**

1. 90000 கோடி புல்லட் விரைவு இரயில்
2. 4800 கோடி விளம்பரச் செலவு
3. 3600 கோடி சிவாஜி சிலை
4. 2989 கோடி பட்டேல் சிலை
5. 202 கோடி மோடி பயணச்செலவு
6. 4200 கோடி கும்பமேளா செலவு
7. 7304 கோடி கங்கையை சுத்தம் செய்த செலவு (2 வருடங்களில் மட்டும்)



புரட்சிப் பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.org
ஆண்டுக் கட்டணம் ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 9841489896 – periyarmuzhakkam@gmail.com




# அனிதாவின் உயிர்பறித்த 'நீட்'

**தமிழ்நாட்டின் ஒருமித்த குரலை உதறித் தள்ளி 'நீட்'டை திணித்தது மோடி ஆட்சி. நீட் தேர்வை இரத்து செய்வோம் என்கிறது, காங்கிரஸ் தேர்தல் அறிக்கை.**

மருத்துவத் துறையில் இந்தியாவுக்கே வழி காட்டும் மாநிலம் தமிழ்நாடு. தமிழ் நாட்டைப்போல் மிகச் சிறந்த மருத்துவர்கள் வேறு மாநிலத்தில் இல்லை. ஒடுக்கப்பட்ட சமுதாயத்தில் பிறந்து, முதல், இரண்டாம் தலைமுறையாக இடஒதுக்கீட்டில் இடம் கிடைத்து படித்த நமது மருத்துவர்கள் மருத்துவத் துறையில் ஆற்றல் மிகுந்த நிபுணர்கள். இதய அறுவை சிகிச்சையிலிருந்து உறுப்பு மாற்று சிகிச்சை வரை இந்தியாவின் தலைசிறந்த மருத்துவர்களை நாம் பெற்றிருக்கிறோம். அது நமது தமிழ் நாட்டின் பெருமை. இப்போது அந்தத் தனித் தன்மையை ஒழிக்க வந்தது 'நீட்' தேர்வு.

- 2006ஆம் ஆண்டிலேயே நாம் நுழைவுத் தேர்வை ஒழித்து விட்டோம். அது நமது கிராமப்புற மாணவர்களுக்கு பெரும் தடை என்பதை உணர்ந்தோம்.
- 'ப்ளஸ் டூ' வரை கடுமையாக உழைத்து மதிப்பெண்களைப் பெறும் நமது பிள்ளைகள், நல்ல மதிப்பெண் பெற்று மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைக்கப் போகிறது என்ற நம்பிக்கையுடன் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கி இருந்தபோது 'நீட்' தேர்வு எனும் பேரிடியை மத்திய மோடி ஆட்சி நம் மீது திணித்தது. "ப்ளஸ் டூ மதிப்பெண்களை குப்பையில் போடு; நாங்கள் ஒரு தகுதித் தேர்வு நடத்துவோம்; இதில் தேர்ச்சிப் பெற்றால்தான் மருத்துவக் கல்லூரிக்கு போகலாம்" என்கிறது மத்திய மோடி ஆட்சி.

  சி.பி.எஸ்.ஈ. என்ற மத்திய அரசு பாடத் திட்டத்தில் நடத்தப்படுவது இந்தத் தேர்வு, அந்தப் பாடத் திட்டத்தில் படிப்பவர்கள் தமிழ்நாட்டில் 15 சதவீதம் பேர். அதுவும் பார்ப்பனர், பணக்காரர், உயர்சாதி, மேட்டுக்குடி வர்க்கத்தினர். 85 சதவீதம் நமது மாநில அரசு பாடத் திட்டத்தின் கீழ் படிக்கும் ஒடுக்கப்பட்ட சமூகத்தின் மாணவர்கள், நமது மாணவர்கள் 'நீட்' தேர்வு முறைக்கு பழக்கப்படா தவர்கள். எனவே ப்ளஸ் டூ தேர்வில் மதிப்பெண் பெற்றும் நீட் தேர்வில் தேர்ச்சிப் பெற முடியவில்லை.
- 2016 மார்ச்சில் தமிழகத்தில் 12ஆம் வகுப்புக்கான பொதுத் தேர்வில் நமது மாநில பாடத் திட்டத்தின் கீழ் தேர்வு எழுதிய மாணவர் 8,33,682. மத்திய பாடத் திட்டமான சி.பி.எஸ்.ஈ.யின் கீழ்த் தேர்வு எழுதியோர் 13,265. தமிழகத்தில் 2 சதவீதம் கூட மத்திய பாடத் திட்டத்தின் கீழ் தேர்வு எழுதவில்லை. ஆனால், நீட் தேர்வினால் மாநில பாடத் திட்டத்தில் படித்த 98 சதவீத மாணவர்களின் கல்வி உரிமை மறுக்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாட்டில் 24 அரசு மருத்துவக் கல்லூரிகள் உள்ளன. இந்தியாவிலே இங்குதான் அதிக மருத்துவக் கல்லூரிகள் உள்ளன. ப்ளஸ் டூ தேர்வு மதிப்பெண் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப் படும் நமது தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட சமுதாய மாணவ மாணவிகளின், ஓர் ஆண்டுக்கு கல்வி கட்டணம் ரூ.20,000 தான். ஆனால் 'நீட்' தேர்வு எழுத ஒவ்வொரு மாணவரும் தனிப் பயிற்சி மய்யத்துக்கு செல்ல வேண்டும். அங்கு ரூ.50 ஆயிரம், ஒரு இலட்சம் என்று கட்டணம். கிராமப்புற மாணவர்களுக்கு ஒடுக்கப்பட்ட மக்களுக்கு இது எவ்வளவு பெரிய சுமை? 'பிளஸ் டு' தேர்வுக்காக இரவு பகல் பாராமல் படித்து முடித்த களைப்பு நீங்கும் முன்பே நீட் தேர்வுக்கு பயிற்சி என்றால், அவர்களுக்கு எவ்வளவு மன

அழுத்தம்?

- தமிழ்நாட்டில் எம்.பி.பி.எஸ். பட்டப் படிப்பு களுக்கான இடங்களில் 15 சதவீத இடங்களையும் மேல்பட்டப் படிப்பான எம்.டி., எம்.எஸ். போன்ற படிப்புகளுக்கான இடங்களில் 50 சதவீத இடங்களையும் மத்திய அரசு கோட்டா என்ற பெயரில் இடங்களைப் பறித்துக் கொள்கிறது. மேல் பட்டப்படிப்புக்கு மேலே படிக்கும் உயர் சிறப்புப் படிப்பு களும் உண்டு. டி.எம்., எம்.சி.ஏ.எச். போன்ற இத்தகைய உயர் சிறப்புப் படிப்புக்கான இடங்கள் இந்தியாவிலேயே நமது தமிழ்நாட்டில் தான் மிக அதிகம். (192 இடங்கள்) மற்ற மாநிலங் களில் ஒற்றைப் படை எண்ணிக்கையில் தான் இருக்கிறது. இந்த இடங்கள் அனைத்தையும் 'பகிரங்கப் போட்டி'க்கு உள்ளாக்கி பிற மாநிலத்துக்காரர்களை நம்முடைய அரசு செலவின் கீழ் படிக்க கதவு திறந்துவிட்டு விட்டார்கள். உதாரணமாக சென்னை எழும்பூர் குழந்தைகள் மருத்துவமனையில் உயர் சிறப்புக்கான மருத்துவப் படிப்புக்கான இடங்கள் 8இல் 6 இடங்களை வட மாநிலத்தவர் பிடித்துக் கொண்டுள்ளனர். கல்லீரல் மருத்துவத்துக்கு அதி உயர் மருத்துவப் படிப்புக்கான இடங்கள் இரண்டு. இரண்டுமே நமது மக்களுக்குக் கிடைக்கவில்லை. பிற மாநிலத்தவருக்கு போய் விட்டது. நமது செலவில் நாம் உருவாக்கிய மருத்துவக் கல்லூரிக்கான இடங்கள் நமது மாணவர்களுக்கு கிடைக்காமல் 'அகில இந்திய கோட்டா' என்று வெளி மாநிலத்துக்காரர்கள் தட்டிப் பறித்துக் கொண்டு போய் விடுகிறார்கள். எனவேதான் அகில இந்திய கோட்டாக்களே வேண்டாம்; எங்கள் மாநிலத்தில் நாங்கள் உருவாக்கும் மருத்துவக் கல்லூரிக்கான இடங்களில் எங்கள் மாணவர்கள் படிக்க வேண்டும்; அவர்கள் சேவை எங்கள் தமிழ் நாட்டுக்கே வேண்டும் என்று குரல் கொடுத்தோம்.

எங்கள் மருத்துவக் கல்லூரி மாணவர்கள் சேர்க்கையை நாங்களே நடத்திக் கொள்ள வேண்டும். டெல்லி ஆட்சி திணிக்கும் நீட் தேர்வு வேண்டாம்; இதனால் மாநிலப் பாடத் திட்டத்தில் படித்து வரும் எங்கள் நாட்டு மாணவர்கள் இடங்களைப் பெற முடியவில்லை.

இப்போது நீட் தேர்வில் வெளிநாடுகளில் வாழும் பார்ப்பன உயர்ஜாதி மற்றும் தொழிலதிபர் வீட்டுப் பிள்ளைகள், வெளி நாட்டுக்காரர்களாக குடியுரிமைப் பெற்றுக் கொண்டு சொகுசு வாழ்க்கை வாழும் இந்தியர்கள். (இவர்கள் பெரும்பாலும் பார்ப்பனர்கள்) இந்தியாவிலேயே பிறக்காத வெளிநாட்டுக்காரர்கள் அனைவருமே நீட் தேர்வு எழுதி, மருத்துவக் கல்லூரிகளில் இடம் பிடிக்க வழி திறந்து விட்டார்கள். நீட் தேர்வை உலகத் தேர்வாக்கிவிட்டோம் என்கிறது, மோடி ஆட்சி! என்னடா கொடுமை!

அரியலூரிலிருந்து மருத்துவம் படிக்க வரும் மாணவர்கள் அமெரிக்காவிலிருந்து வரும் மாணவர் களோடும், ஆடுதுறையிலிருந்து மருத்துவம் படிக்க வரும் நமது ஒடுக்கப்பட்ட சமுதாயத்துப் பெண், ஆஸ்திரேலியாவிலிருந்து விமானத்தில் வந்து இறங்கி நீட் தேர்வு எழுத வரும் மாணவர்களோடும் போட்டி யிட்டு தேர்வு எழுதி வெற்றி பெற வேண்டும் என்பது எந்த ஊர் நியாயம்?

**காங்கிரஸ் தேர்தல் அறிக்கை**

இப்போது நீட் தேர்வை இரத்து செய்வோம் என்று தி.மு.க. தனது தேர்தல் அறிக்கையில் கூறியிருக்கிறது. காங்கிரஸ் கட்சி 'நீட்' தேர்வை இரத்து செய்வோம் என்று அறிவித்துள்ளதோடு மாநில அரசுகளே அதற்கான தகுதி தேர்வுகளை முடிவு செய்து கொள்ளலாம் என்றும் அறிவித்துள்ளது. பள்ளிக் கல்வி முழுமையாக மாநிலப் பட்டியலுக்கு மாற்றப்படும் என்றும் காங்கிரஸ் தேர்தல் அறிக்கை கூறுகிறது. கல்வியை மாநிலப் பட்டியலுக்கு மாற்ற வேண்டும் என்ற தமிழகத்தின் உரிமை கோரிக்கையை பாதியளவு ஏற்றுக் கொண்டுவிட்டது காங்கிரஸ். உயர் கல்வி மட்டும் பொதுப் பட்டியலில் இருக்கும் என்று அந்த அறிக்கை கூறுகிறது.

'நீட்' தேர்வு உச்சநீதிமன்றம் வழியாக அமுல்படுத்தப்படுவதால் அதை மாற்றவே முடியாது என்று காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கையை கடுமையாகத் தாக்குகிறது. உச்சநீதிமன்றத் தீர்ப்பிலிருந்து தமிழ் நாட்டுக்கு பாரதிய ஜனதா கட்சி விதி விலக்குக் கோர நாடாளுமன்றங்களும் சட்டத் திருத்தங்களும் இருக்கின்றன என்பதை பா.ஜ.க. மறைக்கப் பார்க்கிறது. தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளை மதிக்கவே மறுக்கும் பா.ஜ.க. ஆட்சியோடு கூட்டணி வைத்துள்ள அ.இ.அ.தி.மு.க. 'நீட்'டை இரத்து செய்வதாக தேர்தல் அறிக்கையில் கூறுவது கண்துடைப்பு தான்!

**நீட் தேர்வில் நடந்த ஊழல்**

2017 நவம்பரில் முதுகலை பட்டப்படிப்புக்காக நடந்த நீட் தேர்வுகளில் மோசடி நடந்துள்ளதாக தில்லி போலீசார் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தனர்.

நீட் தேர்வு நடத்தும் பொறுப்பை அமெரிக்காவைச் சேர்ந்த ப்ரோமெட்ரிக் நிறுவனத்திடம் எந்தவொரு டெண்டரும் கோராமல் வழங்கியது தேசிய தேர்வாணையம் (National Board of Examinations). ஒப்பந்தத்தைப் பெற்றுக் கொண்ட புரோமெட்ரிக் நிறுவனம், அதை சி.எம்.எஸ் நிறுவனத்திற்கு வழங்கியது.

சி.எம்.எஸ் நிறுவனம் (மருத்துவ மற்றும் மருத்துவ சேவைக்கான மய்யம்) காண்டிராக்ட் அடிப்படையில் பல்வேறு உள்ளூர் நிறுவனங்களிட மிருந்து ஊழியர்களை நியமனம் செய்துள்ளது.

இந்நிலையில் நடைபெற்ற தேர்வில் பல்வேறு முறைகேடுகள் நடந்திருப்பது கண்டுபிடிக்கப் பட்டது.

புரோமெட்ரிக் முறையில் எழுதப்படும் தேர்வுகளுக்குப் பயன்படுத்தப்படும் கணினிகளுக்கு இணைய இணைப்பு இருக்கக் கூடாது என்பது விதி. இந்த விதி பல்வேறு தேர்வு மையங்களில் மீறப்பட்டது.

கணினிகளில் ஆம்மி அட்மின் (Ammy admin) எனும் இரகசிய மென்பொருளை நிறுவி, அவற்றின் திரைகளை (Desktop Screen) வெளியிடங்களில் இருந்து இயக்கும் வசதியை ஏற்படுத்திக் கொடுத்துள்ளனர்.

இவ்வாறு ஹேக் செய்யப்பட்ட கணினியில் தேர்வெழுத இலஞ்சம் பெற்றுள்ளனர்.

இக்கணினிகளில் தேர்வெழுத வரும் மாணவர்கள், வெறுமனே கணினிகளின் முன் அமர்ந்திருக்க வேறு ஒரு இடத்தில் இருந்து அக்கணினிகளின் திரையை இயக்கி (Remote Access) ஏஜெண்டுகளால் ஏற்பாடு செய்யப்பட்ட வேறு நபர்கள் தேர்வை எழுதியுள்ளனர்.

நீட் தேர்வுகளுக்காக பயன்படுத்தப்பட்ட கணினிகளில் இரகசிய மென்பொருட்களை நிறுவி மோசடியில் ஈடுபட்டவர்கள், தேர்வு முடிந்த உடனேயே அவற்றில் உள்ள ஆதாரங்களை முற்றிலுமாக அழித்துள்ளனர்.

சில மையங்களில் நேரடியாகவே இணைய இணைப்பு கொண்ட கணினியில் தேர்வை எழுத அனுமதிப்பதற்கு இலஞ்சம் பெற்றுள்ளனர்.

இலஞ்சம் கொடுத்த மேட்டுக்குடி குலக் கொழுந்துகள், நீட் தேர்வில் கேட்கப்படும் கேள்விகளுக்கான பதில்களை இணையத்தில் தேடி எழுதியுள்ளனர். ஒரு சில மையங்களில் தேர்வு மைய நிர்வாகிகளே, கேள்விகளுக்கான விடைகளை துண்டுத் தாள்களில் எழுதி மாணவர்களிடம் கொடுத்துள்ளனர். ●

## கஜா புயல்: ஆறுதல் கூற வராத பிரதமர்

கடந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் நாகை, திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களை கஜா புயல் கடுமையாகத் தாக்கியது. டெல்டா பகுதி மக்களின் வாழ்வாதாரமும் முற்றிலும் சிதைந்தது. மக்கள் தங்கள் வீடுகளையும், உடைமைகளையும் இழந்து தவித்தனர். விவசாயிகளின் உற்பத்தி பாழானது. இந்தத் துயரிலிருந்து முழுமையாக மீண்டு வர டெல்டா மாவட்டங்களுக்கு 3 மாதங்களுக்கு மேல் ஆனது. உலக நாடுகளின் தலைவர் கூட தமிழக டெல்டா மக்களுக்கு ஆறுதல் தெரிவித்தனர்.

இந்த நாட்டின் பிரதமர் மோடியோ தமிழகத்தின் பக்கம் அப்போது எட்டிப்பார்க்கவும் இல்லை, ஆறுதல் சொல்லி ஒரு அறிக்கையும் விடவில்லை. ஆனால் தேர்தல் நெருங்கியுள்ள இந்த சமயத்தில் பிரச்சாரத்துக்காக மதுரை, திருப்பூர், சென்னை மற்றும் திருநெல்வேலி என 4 முறை வந்துவிட்டார். இன்னும் 2ஆம் கட்ட பிரச்சாரத்துக்கும் தமிழகம் வர திட்டமிட் டிருக்கிறார். ஓட்டுக்கு கேட்க வரத் தெரிந்த மோடிக்கு, தமிழக மக்கள் துயரத்தில் இருந்த போது வரத்தான் மனம் இல்லை என்றாலும் தமிழகம் கேட்ட நிதியையாவது ஒதுக்கியிருக்க லாம். ஆனால் அதிலும் தமிழ்நாட்டுக்கு மிகப்பெரிய வஞ்சனை.

கஜா புயலால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களை மீட்டெடுக்க நிவாரண நிதியாக மத்திய அரசிடம் தமிழக அரசு ரூ.15,000 கோடி கேட்டது. தமிழ்நாட்டுக்கு ஏற்பட்ட இழப்பு என்னவோ ரூ.25,000 கோடிக்கு மேல் இருக்கும். ஆனால் மத்திய அரசு முதல் கட்டமாக ரூ.353.7 கோடியும் அடுத்ததாக டிசம்பர் 31ஆம் தேதி ரூ.1,146.12 கோடியும் அறிவித்தது. கேட்ட தொகையும், அறிவிக்கப்பட்ட தொகையும் எந்தவிதத்திலாவது பொருந்துகிறதா? அந்த சமயத்தில் தமிழகத்துக்கு மத்திய அரசு வழங்க வேண்டிய ஜிஎஸ்டி நிலுவைத் தொகையே ரூ.8,684 கோடி இருந்தது. ஆனால் அதைக்கூட உடனடியாக விடுவிக்கவில்லை.

மோடிக்கு ஆட்சிக்கு வந்த காலத்திலிருந்தே தமிழகத்துக்கு இந்த அவலம்தான் நீடித்து வருகிறது. 2016ஆம் ஆண்டு வர்தா புயல் பாதிப்பில் ஏற்பட்ட இழப்பை ஈடுசெய்திட, தமிழக அரசு மத்திய அரசிடம் கோரியது ரூ.22573 கோடியே 26 லட்சம். ஆனால் மத்திய அரசு வழங்கியது வெறும் ரூ 1793 கோடியே 63 லட்சம் மட்டுமே. 2017ஆம் ஆண்டு ஒக்கி புயல் பாதிப்பு ஏற்பட்ட போது தமிழக அரசு கோரியது ரூ.9302 கோடியாகும். ஆனால் மத்திய அரசு வழங்கியது வெறும் ரூ.413 கோடியே 55 லட்சம் மட்டுமே.

**ஜி.எஸ்.டி. வரிவிதிப்பு முறையை காங்கிரஸ் ஆட்சி கொண்டு வர முயற்சித்தபோது அதை கடுமையாக எதிர்த்த பா.ஜ.க.வும், மோடியும் பிறகு, அதிகாரத்துக்கு வந்த பிறகு தீவிரமாக அமுல்படுத்தினார்கள். அதனால் சிறு, குறு தொழில்கள் மூடப்பட்டன. இப்போது காங்கிரஸ் தேர்தல் அறிக்கை இந்த பாதிப்புகளை சரி செய்வதாகக் கூறுகிறது.**




# சிறு தொழில்களை முடக்கிய ஜி.எஸ்.டி

'ஒற்றை ஆட்சி; ஒற்றைப் பண்பாடு' நோக்கி நாட்டை இழுத்துச் செல்லும் மத்திய பார்ப்பனிய ஆட்சி - நீட் வழியாக மாநில கல்வி உரிமையை பறித்ததுபோல், 'ஜி.எஸ்.டி.' வழியாக மாநிலங்களின் வரி விதிப்பு உரிமையையும் பறித்துவிட்டது.

இந்திய அரசியல் சட்டம் இந்தியா வின் மாநிலங்களின் உரிமைகளில் வரிவிதிப்பு உரிமைகளையும் வழங்கியிருக்கிறது. நாடு முழுதும் ஒரே வர்த்தக சந்தை - ஒரே வரி என்று கூறி மோடி மத்திய சரக்கு மற்றும் சேவை ஜி.எஸ்.டி. வரியை அமுல்படுத்திவிட்டார்.

அம்பானி, அதானி போன்ற பெரும் பணமுதலைகள் இதை ஆதரிக்கிறார்கள் என்பதிலிருந்தே இது யாருக்கு சாதகமானது என்பதை புரிந்து கொள்ளலாம். இந்த ஜி.எஸ்.டி. சிறிய நடுத்தர நிறுவனங்கள், வர்த்தகர்கள் சாமான்ய மக்கள் தலை மீது சுமையை ஏற்றியிருக்கிறது. ஜவுளி, பீடி, மருந்துத் தொழில்கள், கட்டுமானம், போக்குவரத்து, தையல், தீப்பெட்டித் தொழில்கள், சிறு தொழில்களை கடுமையாக பாதித்திருக்கிறது.

- 2010ஆம் ஆண்டு காங்கிரஸ் ஆட்சி இத்திட்டத்தைக் கொண்டு வர முயன்றபோது அதை கடுமையாக எதிர்த்தது இதே பா.ஜ.க.தான். இதற்காக 3 மசோதாக்களை நாடாளுமன்றத் தில் சமர்ப்பித்தபோது அதைத் திரும்பப் பெற வைத்தது பா.ஜ.க. குஜராத் முதல்வராக இருந்த மோடி, தனது மாநிலத்தில் ஜி.எஸ்.டி.யை உயிரைக் கொடுத்தாவது தடுப்பேன் என்று வீரவசனம் பேசினார். அதே பா.ஜ.க. வரித் துறையில் புரட்சி செய்து விட்டதுபோல் இப்போது தம்பட்ட மடிக்கிறது. இப்போது ஜி.எஸ்.டி. வரி விதிப்பில் உருவாகியுள்ள பாதிப்புகளை உணர்ந் திருப்பதாக காங்கிரஸ் தேர்தல் அறிக்கை கூறுகிறது. வரி விதிப்பு முறை மாற்றி அமைக்கப்படும் என்றும் காங்கிரசின் தேர்தல் அறிக்கை கூறுகிறது.
- மாநிலங்களின் தனித்துவங்களை அழிக்கும் முயற்சிகளில் ஒன்றாகவே பா.ஜ.க. இப்போது இதை அமுல்படுத்தியது.
- சிறு தொழில்களுக்கு 5 சதவீத சேவை வரியிலிருந்து ரூ.1.5 கோடி வரை விற்பனை செய்வோருக்கு விலக்கு தரப்பட்டிருந்தது. இப்போது இந்த இலக்கை 20 இலட்சமாக குறைத்து விட்டார்கள்.
- திருப்பூரில் பின்னலாடைத் தொழிலில் பெரும் நிறுவனங் களிடம் சிறு சிறு வேலைகளை 'ஜாப் ஆர்டர்' எடுத்து வேலை செய்து வந்த

7 இலட்சம் தொழி லாளர்கள் இப்போது வேலை இழக்கும் நிலை உருவாகியுள்ளது. காரணம் ‘ஜாப் ஒர்க்’ எடுத்து செய்யும் வேலைக்கு 18 சதவீத வரி விதித்து விட்டார்கள். ஜாப் ஒர்க் செய்வோருக்கு கூலியை உயர்த்தித் தர முடியாது என்று பெரும் நிறுவனங்கள் தாங்களாகவே அந்த வேலைகளை செய்து கொள்ள முடிவு செய்து விட்டன. இதனால் ‘ஜாப் ஒர்க்கை’ நம்பி திருப்பூர் வந்த ஏழை குடும்பங்கள் ஊரை விட்டே வெளியேறத் தொடங்கி விட்டன. பா.ஜ.க.வை தீவிரமாக ஆதரிக்கும் ‘தினமணி’ நாளேடே (ஜூலை 17) இந்த செய்தியை கட்டுரையாக வெளியிட்டுள்ளது.

- குடிசைத் தொழிலான கடலை மிட்டாய்க்கு 5 சதவீத வரி; ஆனால் பீசாவுக்கு வரி இல்லை.
- ஆயுர்வேத மருந்துகளுக்கு வரி போட்டு விட்டார்கள். கடும் காய்ச்சலுக்கு அரசு இலவசமாக வழங்கி வந்த ‘நில வேம்பு கசாயம்’ - இனி பாட்டிலில் அடைத்து 100 ரூபாய்க்கு விற்கப் போகிறார்கள் என்று கூறுகிறார் மருத்துவர் சிவராமன்.
- ஒரு கோடி ரூபாய்க்கு மேல் விற்கும் சொகுசு கார்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேல் வரி குறைப்பு.
- பெட்ரோலுக்கும் டீசலுக்கும் ஜி.எஸ்.டியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுவிட்டது. அதன் இரகசியம் என்ன தெரியுமா? ஜி.எஸ்.டி. வரி விதிப்புக்குள் பெட்ரோல், டீசலைக் கொண்டு வந்து விட்டால் விலை பாதியாகக் குறைந்து விடும். பெட்ரோலுக்கு 55 சதவீதமும் டீசலுக்கு 57 சதவீதமும் இப்போது வரி போடப்படுகிறது. இதை 18 சதவீதமாக குறைக்க மோடி அரசு தயாராக இல்லை. அதுதான் விலக்கு அளித்ததற்கான இரகசியம். வார இறுதி நாள்களில் குடும்பத்துடன் ஓட்டலுக்கு சென்று சாப்பிடுபவர்களுக்கு போடப்படும் ‘பில்’லைப் பார்த்தாலே ‘ஜி.எஸ்.டி.’யின் சுமை புரியும். இப்போது காங்கிரஸ் தேர்தல் அறிக்கை பெட்ரோல், டீசலை வரம்புக்குள் கொண்டு வருவோம் என்று உறுதியளித்துள்ளது.

இப்படி ஏராளமாக சொல்ல முடியும்; உதாரணத்துக்காக மட்டும் சிலவற்றை சுட்டிக் காட்டினோம்.

ஜி.எஸ்.டி. கட்டமைப்பில் வரி செலுத்துவோர் - இந்த வரிவிதிப்பை அமுல்படுத்துவோர் அனைவருக்கும் தொழில்நுட்பக் கட்டமைப்பு வசதிகள் மற்றும் சேவைகள் வழங்குவதற்காக ‘ஜி.எஸ்.டி.என்.’ என்ற ஒரு அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இது அரசு நிறுவனம் அல்ல; தனியார் அமைப்பு என்பது தான் அதிர்ச்சிக்குரிய செய்தி.

பொதுவாக ‘ஸ்டேட் வங்கி’ போன்ற அரசுத் துறை வங்கிகளிடம் தான் அரசு நிதி சார்ந்த பொறுப்புகளைக் கையாளும் உரிமைகள் வழங்கப்படும். இப்போது அதிகாரம் வழங்கப் பட்டுள்ள தனியார் அமைப்பில் அரசின் பங்கு 49 சதவீதம். ஆனால் அய்.சிஅய்.சி. வங்கி, ஹெச்.டி.எப்.சி. வங்கி உள்ளிட்ட தனியார் வங்கி மற்றும் அமைப்புகளின் முதலீடு 51 சதவீதம். அரசு முதலீட்டைவிட அதிகம். மத்திய மாநில அரசுகள் ஜி.எஸ்.டி. மூலம் வசூலிக்கும் வரியான பல இலட்சம் கோடி ரூபாய் நிதி நிர்வாகத்தை தனியார் கட்டுப்பாட் டிலுள்ள நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதோடு இந்தியாவின் அனைத்துத் தொழில் நிறுவனங்களின் வர்த்தகம், வணிகம் சார்ந்த அத்தனை தகவல்களும் தனியார் நிறுவனத்துக்குக் கிடைத்து விட வாய்ப்புகளை உருவாக்கித் தந்துள்ளது மோடி ஆட்சி.

தனியார் பிடியில் உள்ள இந்த ‘ஜி.எஸ்.டி.என்.’ நெட் ஒர்க்கிடம் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் யாரும் தகவல் கேட்டுப் பெற முடியாது. மத்திய அரசின் தலைமை கணக்கு அதிகாரியின் (சி.ஏ.ஜி.) கணக்கு தணிக்கையும் செய்ய முடியாது. இது தேசத்தின் நலனுக்கே ஆபத்து. இவ்வளவு அதிகாரங்களை ஒரு தனியார் நிறுவனத்திடம் ஒப்படைக்க லாமா என்று எதிர்ப்பு தெரிவிப்பது யார் தெரியுமா? பா.ஜ.க.வைச் சார்ந்த சுப்ரமணியசாமி, மாநிலங்களவையிலேயே சுப்பிரமணியசாமி இதை எதிர்த்துப் பேசினார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் டி.ராஜா உள்ளிட்டவர்கள் சுவாமியின் கருத்தை ஆதரித்துப் பேசியுள்ளனர். (‘ஜூனியர் விகடன்’ 26.7.2017 இதழ் இது பற்றி விரிவாக செய்தி வெளியிட்டுள்ளது)

●

2016ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 8ஆம் தேதி புழக்கத்தில் இருந்த 80 விழுக்காடு பணத்தை மதிப்பழிப்பு செய்து உத்தரவிட்டார் பிரதமர் மோடி. இதன்படி புழக்கத்தில் இருந்த 500 மற்றும் 1,000 ரூபாய் தாள்கள் அனைத்தும் செல்லாதவையாக்கப்பட்டன. புதிய 2,000 மற்றும் 500 ரூபாய் தாள்கள் அச்சிடப்பட்டு, வங்கிகள் மூலம் விநியோகம் செய்யப்பட்டது. இது சாமானியர்களுக்கும், நடுத்தர குடும்பத்தினருக்கும் எத்தகைய பாதிப்புகளை ஏற்படுத்தியது என்பதை நாம் அனைவரும் மறந்திருக்க மாட்டோம். சாதாரண மளிகைச் செலவுகளுக்குக் கூட வேலைக்குச் செல்லாமல் விடுமுறை எடுத்து ஏடிஎம்களிலும், வங்கிகளிலும் நாள் கணக்காக நிற்க வேண்டியிருந்தது.




# மக்களை வாட்டி வதைத்த பண மதிப்பழிப்பு!

சிறு தொழில்கள் இயக்கம் முற்றிலும் பாதிக்கப் பட்டது. சிறு தொழில்களால் நிரம்பி வழியும் கோவை யும், திருப்பூரும் கடும் பாதிப்புக்குள்ளானது. இப்பகுதி களில் பல்லாயிரக்கணக்கானோர் வேலையிழந்தனர். பலர் தொழிலை விட்டு வெளியேறி தினக்கூலிகளாக மாறினர். ஏடிஎம் வாசல்களிலும், வங்கிகளிலும் காத்துக் கிடந்தவர்கள் உயிரிழந்த பரிதாபத்தையும் கண்டோம். விவசாயத் துறை பணமில்லாமல் தடுமாறியது. விற்ற பொருட்களுக்குப் பணத்தை பெற முடியாமல் விவசாயிகள் தவித்தனர். அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட காசோலைகளை வங்கிகளில் செலுத்திப் பணமாகப் பெற மாதக்கணக்கில் ஆனது.

அந்தச் சமயத்தில் மக்கள் கண்ட அத்தனை துன்பங்களுக்கும், துயரங்களுக்கும் மோடி அளித்த ஒரு பதில், "இந்தத் துன்பங்களை மக்கள் நாட்டுக்காகத் தியாகம் செய்கிறார்கள். மக்கள் இதைப் பொறுத்துக் கொள்ள வேண்டும்" என்பதுதான். மேலும், "வரி செலுத்தாமல் தவறான வழியில் பணத்தைக் குவித்து வைத்திருக்கும் கொழுத்த தொழிலதிபர்கள், நேர்மையற்ற அரசியல்வாதிகள், பாகிஸ்தான் தீவிரவாதிகள் போன்றோரிடமிருக்கும் கறுப்புப் பணத்தை ஒழிப்பதற்காகத்தான் பணமதிப்பழிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது" என்றார்.

மக்கள் தியாகம் செய்தார்கள் என்றே வைத்துக் கொள்வோம். அந்தத் தியாகத்தால் என்ன பயன் விளைந்தது? பணமதிப்பழிப்பு செய்யப்பட்டதன் நோக்கம் நிறைவேறியதா என்பதைப் பற்றி இது வரையில் மோடி வாய் திறக்கவேயில்லை. ஆனால் நாட்டின் மிகப்பெரிய சீர்திருத்தங்களில் ஒன்று 'பண மதிப்பழிப்பு' எனப் பெருமையோடு பேசி வந்தார். இது சீர்திருத்தமா அல்லது சீரழிவா என்பதை இந்திய ரிசர்வ் வங்கியின் அறிக்கைகளே வெளிப்படுத்தி யுள்ளன.

இந்திய ரிசர்வ் வங்கி கடந்த ஆண்டு ஆகஸ்ட் 29ஆம் தேதி வெளியிட்டிருந்த அறிக்கை ஒன்றில், '2016ஆம் ஆண்டு நவம்பர் 8ஆம் தேதி ரூ.15.44 லட்சம் கோடி மதிப்பிலான பழைய 500 மற்றும் 1,000 ரூபாய் தாள்கள் புழக்கத்தில் இருந்தன. அதில், பண மதிப்பிழப்பு நடவடிக்கைக்குப் பிறகு ரூ.15.31 லட்சம் கோடி வங்கி களுக்கு திரும்ப வந்துவிட்டது. இது அப்போது புழக்கத் தில் இருந்த 500 மற்றும் 1,000 ரூபாய் தாள்களின் மதிப்பில் 99.3 விழுக்காடாகும்' என்று தெரிவித் துள்ளது.

எஞ்சியது வெறும் 0.7 விழுக்காடுதான். ரிசர்வ் வங்கியின் மதிப்பீட்டின்படி திரும்ப வராமல் உள்ள பழைய ரூபாய் தாள்களின் மதிப்பு சுமார் ரூ.13,000 கோடி. பணமதிப்பழிப்பு செய்யப்பட்ட காலத்தில் வங்கிகளில் நிலவிய நெருக்கடிகளாலும், புதிய ரூபாய் தாள்கள் விநியோகத்தில் காணப்பட்ட மந்த நிலையாலும் அரசு விதித்த காலக்கெடுவுக்குள் எத்தனை ஏழை, எளிய மற்றும் நடுத்தர மக்களால் பழைய ரூபாய் தாள்களை மாற்றிக்கொள்ள இயலாமல் போனது என்பதையும் அதன் மதிப்பு எவ்வளவு என்பதையும் ஆராய்ந்து கணக்கிட்டால், எஞ்சிய 0.7 விழுக்காடு என்பது இன்னமும் கூட குறையும் அல்லது முழுமையாகப் பூர்த்தியாகலாம்.

ரொக்கப் பரிவர்த்தனைகளின் மூலம்தான் பெரும் பகுதி வர்த்தகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. எனவே பணமதிப்பழிப்பு நடவடிக்கை மிகப்பெரிய பணத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தி 15 லட்சம் வேலையிழப்புகளை உண்டாக்கிவிட்டது என்று டெல்லியைச் சேர்ந்த இந்தியப் பொருளாதாரக் கண்காணிப்பு மையம் கூறியுள்ளது. ஆனால் இந்த எண்ணிக்கை மிகவும் குறைவு; வேலையிழப்புகள் இதைவிட அதிகமாக இருக்குமென்பதே பொருளாதார வல்லுநர்களின் கருத்தாக உள்ளது.

மக்களின் தியாகம் என்ன ஆனது என்பதைப் பார்ப்போம்.

### கறுப்புப் பண ஒழிப்புக்காகவா?

கறுப்புப் பணம் என்பது பெட்டிகளிலும், சாக்குப் பைகளிலும், கண்டெயினர்களிலும் அடுக்கி வைக்கப்பட்டுத் தேவைப்படும்போது எடுத்துக் கொள்ளப்படுவது அல்ல. நேர்மைக்குப் புறம்பாக ஈட்டப்பட்ட வருவாயை நிலம், பங்களா, தோட்டம், நகை, வியாபார நிறுவனங்கள் என வழிகளில் அப்பணம் முதலீடாக மாற்றப்பட்டுவிடுகிறது. கருப்புப் பணம் என்பது பணமாக இருக்காது. அதனால்தான் மோடியால் மதிப்பழிப்பு செய்யப்பட்ட பணம் எங்கும் மறைந்துவிடாமல் கிட்டத்தட்ட முழுமையாக வங்கிகளுக்கு வந்துவிட்டது. பணத்தைச் செல்லாமல் ஆக்கிவிட்டால் அந்தச் சொத்துகள் எதுவும் முடங்கிவிடாது. கொழுத்த தொழிலதிபர்களும், நேர்மையற்ற அரசியல்வாதிகளும் கறுப்புப் பணத்தை சேர்த்திருப்பார்கள் என்று மோடி கூறும் எந்தச் சொத்திற்கும் எள்ளளவிலும் பாதிப்பு ஏற்பட்டிருக்காது. எனவே பணமதிப்பழிப்பின் நோக்கம் கறுப்புப் பண ஒழிப்பு என்பது மிகப் பெரிய பொய்.

### மின்னணு பரிவர்த்தனையை ஊக்குவிக்கவா?

கறுப்புப் பணம் ஒழிப்பு தோல்வியடைந்துவிட்டது என்பதால் பணமதிப்பழிப்புக்கு பல்வேறு காரணங்களைக் கூறி நியாயம் கற்பித்தார்கள். அதில் ஒன்றுதான் மின்னணு பரிவர்த்தனை. ரொக்கப் பணப் புழக்கத்தைக் கட்டுப்படுத்தி, ரொக்கப் பணத்தின் தேவையைக் குறைப்பதுதான் இதன் நோக்கம். "பணமதிப்பழிப்பு நடவடிக்கைக்குப் பிறகு ரொக்கப் பணப் பரிவர்த்தனை குறைந்துள்ளது. ரொக்கப் பரிவர்த்தனைகளில் ஏற்படும் மோசடிகள் குறித்து மக்களிடையே பயம் அதிகரித்துள்ளது. இது பண மதிப்பழிப்பின் வெற்றி அல்லவா?" என்று நிதி ஆயோக் துணைத் தலைவர் ராஜிவ் குமார், மத்திய நிதியமைச்சர் அருண் ஜேட்லி போன்றோர் பிரச்சாரம் செய்தனர்.

இதுவும் எவ்வளவு பெரிய பொய் என்பதைக் காட்ட, ரிசர்வ் வங்கியின் அறிக்கையே போதுமானது. ரிசர்வ் வங்கி கடந்த ஆண்டு ஜூன் இரண்டாவது வாரத்தில் வெளியிட்ட அறிக்கையில், 'ஜூன் 1ஆம் தேதி கணக்குப்படி நாட்டில் ரூ.19.3 லட்சம் கோடி ரொக்கப் பணம் புழக்கத்தில் உள்ளது. இது பணமதிப்பழிப்பு செய்யப்பட்ட காலத்திற்கு முந்தைய ரொக்கப் பணத்தை விட மிக அதிகமாகும். 2016ஆம் ஆண்டு நவம்பர் 5ஆம் தேதி ரூ.17.9 லட்சம் கோடி ரொக்கப் பணம் மட்டுமே புழக்கத்தில் இருந்தது' என்று கூறியிருந்தது.

ரொக்கப் பண புழக்கம் குறையால் மின்னணு பரிவர்த்தனை மட்டும் உயர்ந்தால் அது எப்படி வெற்றியாகும்? அரசின் நோக்கம் ரொக்கப் பணத்தின் தேவையை குறைப்பதுதானே? அது நடக்கவில்லையே? இன்றளவிலும் நாட்டின் 98 விழுக்காடு வர்த்தகம் ரொக்கப் பணத்தை மட்டுமே சார்ந்திருக்கிறது. அதனால்தான் ரொக்கப் பணப் புழக்கம் முன்பைக் காட்டிலும் அதிகரித்திருக்கிறது. எனவே ரொக்கப் பணப் புழக்கம் அதிகரித்துள்ளதை சொல்லாமல், மின்னணு பரிவர்த்தனை அதிகரித்திருக்கிறது; அதனால் பணமதிப்பழிப்பு வெற்றிபெற்றிருக்கிறது என்று கூறுவது மக்களை ஏமாற்றும் வேலை.

### வரி செலுத்துவோரின் எண்ணிக்கையை உயர்த்தவா?

ரிசர்வ் வங்கியின் இத்தகைய அறிக்கைகளுக்குப் பிறகும் பணமதிப்பழிப்பின் தோல்வியை ஒப்புக் கொள்ள மோடியின் மத்திய அரசு தயாராக இல்லை. "பணமதிப்பழிப்பின் முக்கிய நோக்கமே வரி செலுத்துவோரின் எண்ணிக்கையை அதிகரிப்பதுதான். இது இந்தியப் பொருளாதாரத்தை முறைப்படுத்தியுள்ளது. 2014ஆம் ஆண்டின் மார்ச் மாதம் வருமான வரி ரிட்டன் தாக்கல் செய்தவர்களின் எண்ணிக்கை 3.8 கோடியாக இருந்தது. 2017-18 நிதியாண்டின் முடிவில் அந்த எண்ணிக்கை 6.86 கோடியாக உயர்ந்துள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளில் பணமதிப்பழிப்பின் விளைவாக வருமான வரி ரிட்டன் தாக்கல்கள் 25 சதவிகிதம் அதிகரித்துள்ளன" என்று அருண் ஜேட்லி வேறொரு நியாயம் கற்பிக்க முயன்றார்.

2017-18ஆம் நிதியாண்டில் நேரடி வரி வசூல் 17.1 விழுக்காடு அதிகரித்துள்ளது என்பதைக் கொண்டே இந்த வாதத்தை அருண் ஜேட்லி முன்வைக்கிறார். அதற்கு முந்தைய ஆண்டுகளையும் சற்றே ஒப்பிட வேண்டியுள்ளது. பாஜக ஆட்சியில் 2016-17இல் நேரடி வரி வசூல் 14.6 விழுக்காடும், 2015-16இல் 8.9 விழுக்காடும், 2014-15இல் 6.9 விழுக்காடும் வளர்ச்சி கண்டுள்ளன. முந்தைய காங்கிரஸ் அரசின் ஆட்சிக் காலமான 2013-14இல் நேரடி வரி வசூல் 14.3 விழுக்காடு வளர்ச்சியைக் கண்டிருக்கிறது. அதற்கு முந்தைய 2010-11இல் 18 விழுக்காடு வளர்ச்சியைக் கண்டிருந்தது. அப்போது எந்தவிதமான பணமதிப்பழிப்பும் செய்யவில்லை என்பதை நாம் குறிப்பிட வேண்டியுள்ளது. வருமான வரி செலுத்தக் கூடியவர்களை நெறிப்படுத்துவதற்காக ஒட்டுமொத்த மக்களும் தண்டிக்கப்பட்டார்கள் என்பது ஏற்கத்தக்கதல்ல.

### தீவிரவாதிகளைக் கட்டுப்படுத்தவா?

பணமதிப்பழிப்பு நடவடிக்கையால் தீவிரவாதிகளின் கைகளில் உள்ள உள்ள கறுப்புப் பணத்தையெல்லாம் ஒழித்துவிட்டோம், இனிமேல் இந்த நாட்டில் தீவிரவாதத் தாக்குதலே இருக்காது என்று கூறி வந்தார். அப்படியானால் பிப்ரவரி 14ஆம் தேதி காஷ்மீரின் புல்வாமா மாவட்டத்தில் தற்கொலைப் படைத்தாக்குதல் நடத்தப்பட்டு 40 துணை ராணுவப் படை வீரர்கள் உயிரிழந்தது எப்படி? யார் அவர்களுக்கு பணம் கொடுத்தது? எனவே மோடி கூறுவது அனைத்தும் கட்டுக்கதைகள்தான். பணமதிப்பழிப்பு சீர்திருத்தம் அல்ல, மோடி அரசின் மிகப் பெரிய சீரழிவு.

**ந. பிரகாசு**

கடந்த 25 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு வேலை செய்யும் ஆண்களின் எண்ணிக்கை கடுமையான வீழ்ச்சி அடைந்துள்ளதாக 'தி இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளிதழ் ஆய்வறிக்கை ஒன்றை வெளியிட்டு அதிரவைத்துள்ளது.

## மோடியின் 5 ஆண்டு ஆட்சியில்

# வேலை இழந்த 4.7 கோடி பேர்: அதிர வைக்கும் தரவுகள்!

1993-94ஆம் ஆண்டுக்குப் பிறகு நாட்டில் முதன்முறையாக வேலை செய்யும் ஆண் தொழிலாளர்கள் எண்ணிக்கை வீழ்ச்சியடைந் துள்ளதாக 'தி இந்தியன் எக்ஸ்பிரஸ்' தெரிவித்துள்ளது. தேசிய மாதிரி கணக்கெடுப்பு மையத்தின் குறிப்பிட இடைவெளிகளில் எடுக்கப்படும் தொழிலாளர்கள் நிலை (Periodic Labour Force Survey) குறித்த தரவுகளை 'தி இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஊடகம் ஆய்வு செய்துள்ளது. அதில் கூறப்பட்டுள்ள செய்திகளைக் காணலாம்.

2017-18ஆம் ஆண்டில் இந்தியாவில் வேலை செய்யும் ஆண்களின் எண்ணிக்கை 28.6 கோடியாகக் குறைந்து விட்டது. இது கடந்த 25 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு மிகக் கடுமையான சரிவாகும். 1993-94ஆம் ஆண்டில் நாட்டில் வேலை செய்யும் ஆண்களின் எண்ணிக்கை 21.09 கோடியாக இருந்தது. அதன்பிறகு வேலை செய்யும் ஆண்களின் எண்ணிக்கை மெல்ல மெல்ல அதிகரித்து வந்தது. இறுதியாக 2011-12ஆம் ஆண்டில் வெளியான ஆய்வறிக்கையில் வேலை செய்யும் ஆண்களின் எண்ணிக்கை 30.4 கோடியாக உயர்ந்துள்ளது என்று கூறப்பட்டுள்ளது.

அதன்பிறகு அடுத்த 5 ஆண்டுகளில் வேலைவாய்ப்பு பெற்றோரின் எண்ணிக்கை ஏற்ற இறக்கங்களைக் கண்டு வந்தது. 2017-18ஆம் ஆண்டில் வேலை செய்யும் ஆண்களின் எண்ணிக்கை 28.6 கோடியாகக் குறைந்துள்ளது. அதாவது 1.8 கோடி ஆண்கள் வேலைவாய்ப்பை இழந்துள்ளனர். 5 ஆண்டுகளுக்கு முன்பு வேலை செய்த ஆண்களை விட இப்போது குறைந்த ஆண்கள்தான் வேலை செய்வதாக இந்த புள்ளிவிவரங்கள் கூறுகிறது.

1993ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2017ஆம் ஆண்டில் நகர்ப்புறங்கள் மற்றும் கிராமப்புறங்கள் என இருபகுதிகளிலும் வேலைவாய்ப்பு சரிந்துள்ளது. 2011-12ஆம் ஆண்டில் வேலை செய்த ஆண்களின் எண்ணிக்கையில் இந்திய நகர்ப்புறங் களில் 8.9 கோடி பேரும், கிராமப்புறங்களில் 21.4 கோடி பேரும் இருந்தனர். ஆனால் 2017-18ஆம் ஆண்டில் நகர்ப்புறங்களில் வேலை செய்யும் ஆண்களின் எண்ணிக்கை 8.4 கோடியாக வும், கிராமப்புறங்களில் வேலை செய்யும் ஆண்களின் எண்ணிக்கை 20.1 கோடியாகவும் குறைந்துள்ளது. வேலைவாய்ப்பு சரிவு கிராமப்புறங்களில் 6.4 விழுக்காடாகவும், நகர்ப்புறங்களில் 4.7 விழுக்காடாகவும் உள்ளது.

2011-12ஆம் ஆண்டிலிருந்து 2017-18 வரையிலான காலகட்டத்தில் ஆண்-பெண் என இருபாலரில் மொத்தமாகக் கிராமப்புறங்களில் 4.3 கோடி பேரும், நகர்ப்புறங்களில் 0.4 கோடி பேரும் வேலைவாய்ப்பை இழந்துள்ளனர். குறிப்பிட்ட இந்த 5 ஆண்டுகளில் மொத்தமாக 4.7 கோடி பேர் வேலையை இழந்துள்ளனர். இது சவுதி அரேபியாவின் மக்கள் தொகையை விடக் கூடுதலாகும். இதில் கிராமப்புறங்களில் 68 விழுக்காடு பெண்களும், நகர்ப்புறங்களில் 96 விழுக்காடு ஆண்களும் வேலையை இழந்திருக்கிறார்கள். இத்தகைய இழப்புகளின் மூலம் நாட்டின் வேலையின்மை விகிதம் 6.1 விழுக்காடாக உயர்ந்துள்ளதாக தேசிய மாதிரி கணக்கெடுப்பு ஆய்வு கூறுகிறது. இது 2011-12ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2.2 விழுக்காடு கூடுதலாகும்.

> தேசிய மாதிரி கணக்கெடுப்பு மையத்தின் இந்த ஆய்வானது 2017 ஜூலை முதல் 2018 ஜூன் வரையிலான காலகட்டத்தில் நடத்தப்பட்டது. இந்தத் தரவுகள் 2018ஆம் ஆண்டு டிசம்பருக்குள் வெளியிடப்பட்டிருக்க வேண்டும். ஆனால் வேலைவாய்ப்பு தொடர்பான இந்த புள்ளி விவரங்களை மத்திய அரசு வெளியிடவில்லை.

தேசிய மாதிரி கணக்கெடுப்பு மையத்தின் இந்த ஆய்வானது 2017 ஜூலை முதல் 2018 ஜூன் வரையிலான காலகட்டத்தில் நடத்தப்பட்டது. இந்தத் தரவுகள் 2018ஆம் ஆண்டு டிசம்பருக்குள் வெளியிடப்பட்டிருக்க வேண்டும். ஆனால் வேலைவாய்ப்பு தொடர்பான இந்த புள்ளி விவரங்களை மத்திய அரசு வெளியிட மறுப்பதாகக் கூறி தேசிய புள்ளியியல் ஆணையத்தின் செயல் தலைவராக இருந்த பி.சி.மோகனன் மற்றும் மற்றொரு உறுப்பினர் ஜே.வி.மீனாட்சி ஜனவரி மாத இறுதியில் பதவி விலகினர். இது மிகப்பெரிய சர்ச்சையைக் கிளப்பியது. தரவுகள் வெளியீட்டில் அரசியல் அழுத்தங்கள் இருப்பது கவலையளிக்கக் கூடிய செய்தி என்று உலக நாடுகளைச் சேர்ந்த பொருளியல் அறிஞர்கள் 108 பேர் கையொப்பமிட்ட கடிதம் ஒன்றை அரசுக்கு அனுப்பி தங்கள் எதிர்ப்பை தெரிவித்தனர்.

பொருளாதார அறிஞர்கள் பலரும் கணித்ததைப் போலவே பணமதிப்பழிப்பு நடவடிக்கைக்குப் பிறகு நாட்டின் வேலைவாய்ப்பு மிகவும் அதிகமான எண்ணிக்கையில் சுருங்கியுள்ளது என்பதை வெளிப்படுத்தும் விதமாகவே தேசிய மாதிரி கணக்கெடுப்பு மையத்தின் புள்ளிவிவரங்கள் உள்ளன என்பதை 'தி இந்தியன் எக்ஸ்பிரஸ்' வெளிப்படுத்தியுள்ளது. 'தி இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஊடகம் நடத்தியுள்ள இந்த ஆய்வுக்கான தரவுகளை யார் அளித்தார்கள் என்று பெயரை வெளிப்படுத்திக்கொள்ள அவர்கள் மறுத்துவிட்டார்கள் என்றும் அந்த செய்தியில் கூறப்பட்டுள்ளது. பெருமளவில் வேலைவாய்ப்பு இழக்கப்பட் டுள்ளது என்பதையும், குறைந்த எண்ணிக்கையில் புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளது என்பதையும் இந்த தரவுகள் வெளிக்காட்டுகின்றன என்று 'தி இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஊடகம் தெரிவித்துள்ளது. ●

**மத்திய அரசால் நடத்தப்படும் தொழில்நுட்ப உயர்கல்வி நிறுவனங்களுக்கான அய்.அய்.டி. கூட்டு நுழைவுத் தேர்வுகளை ஆங்கிலம், இந்தி தவிர, தொடர்ந்து அய்ந்தாவது ஆண்டாக, குஜராத்தி மாநில மொழிக்கு மட்டும் தனிச் சலுகை அளித்து தேர்வு நடத்தப்படுகிறது.**

# அரசு வேலைகளில் வடவர்களுக்கு கதவைத் திறந்துவிட்ட மத்திய மாநில ஆட்சிகள்!

தமிழக அரசின் வேலை வாய்ப்புகளிலும் தமிழர்களுக்கான உரிமைகளை பறிக்கும் கொல்லைப்புற முயற்சிகள் தொடங்கிவிட்டன. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் கழகம் தமிழ்நாட்டுக்கான வேலை வாய்ப்புகளில் தமிழ் எழுதப் படிக்கவே தெரியாதவராக இருந்தாலும் விண்ணப்பிக்கலாம். தேர்வு பெற்று இரண்டாண்டுகளில் தமிழ் கற்றால் போதும் என்று அறிவித்திருக்கிறது. இதற்காக விதிகளில் மாற்றங்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. நேபாளம், பூட்டான் ஆகிய வெளி நாட்டினரும் தமிழக அரசுப் பணிகளுக்கு விண்ணப்பிக்கலாம் என்று தேர்வாணைய அறிவிப்பு கூறுகிறது என்றால், தமிழ் நாட்டில் வேலை வாய்ப்பின்றி தவிக்கும் இளைஞர்கள் எதிர்காலம் எக்கேடு கெட்டால் என்ன என்றே ஆட்சியாளர்கள் கருதுகிறார்களா? ‘நீட்’ தேர்வின் வழியாக தமிழக உரிமைகள் பாதிக்கப்பட்டது போன்ற அதே செயல்பாடுகள் தேர்வாணைய அறிவிப்பிலும் நுழைந்திருப்பதை நாம் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

தமிழ்நாட்டில் ‘பாலிடெக்னிக்குகளில்;’ விரிவுரையாளர் பதவிக்கு இதேபோல் திறந்த போட்டியில் வடமாநிலத்தவர்களும் தேர்வு செய்யப்பட்டார்கள். கடும் எதிர்ப்புக்குப் பிறகு இதற்கான நியமனங்களை நிறுத்தி வைத்திருப்பதாக ‘அரசு ஆசிரியர் தேர்வு வாரியம்’ இப்போது அறிவித்திருக்கிறது.

இவை மட்டுமல்ல, மத்திய அரசால் நடத்தப்படும் தொழில்நுட்ப உயர்கல்வி நிறுவனங்களுக்கான அய்.அய்.டி. கூட்டு நுழைவுத் தேர்வுகளை (ஐ.ஐ.டி. - ஜே.இ.இ.) ஆங்கிலம், இந்தி தவிர, தொடர்ந்து அய்ந்தாவது ஆண்டாக, குஜராத்தி மாநில மொழிக்கு மட்டும் தனிச் சலுகை அளித்து தேர்வு நடத்தப்படுகிறது. மாநில மொழிகளில் குஜராத் மட்டும் விதிவிலக்கு பெற்றிருக்கிறதா? தமிழ் மொழியிலும் இந்த கூட்டு நுழைவுத் தேர்வுகளை நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை மத்திய அரசு காது கொடுத்து கேட்கத் தயாராக இல்லை. 2013ஆம் ஆண்டு குஜராத்தி மொழியில் (வழக்கமாக நடத்தப்படும் ஆங்கில, இந்தி மொழிகளைத் தவிர) நடத்த வேண்டும் என்று குஜராத் அரசின் கோரிக்கையை உடனே ஏற்றுக் கொண்டு விட்டார்கள். கடந்த 2012 ஆம் ஆண்டு பாட்டாளி மக்கள் கட்சி, அய்.அய்.டி. நுழைவுத் தேர்வு உள்ளிட்ட அனைத்து வகையான நுழைவுத் தேர்வுகளையும் தமிழ் மொழியிலும் நடத்தக் கோரி, சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்தது. நீதிபதி சஞ்சய் கிஷன் கவுல் தலைமையிலான அமர்வு, இந்தக் கோரிக்கையை நடுவண் அரசும், தேர்வாணையங்களும் பரிசீலித்து, கோரிக்கைக்கு சாதகமான முடிவை எடுக்க வேண்டும் என்று தீர்ப்பளித்தது. தீர்ப்பு மதிக்கப்படவில்லை.

தேசிய அளவிலான தேர்ச்சி விகிதங்களில் தமிழ்நாட்டு மாணவர் எண்ணிக்கை மிகவும் குறைந்து வருவதற்கான காரணங்களில் ஒன்று - தமிழில் தேர்வு நடத்தப்படாமையும் ஆகும். இதில் தமிழ்நாடு அரசும் எந்த கவலையும் எடுத்துக் கொள்ளவில்லை என்பதையும் சுட்டிக் காட்ட வேண்டும். அய்.ஏ.எஸ்., அய்.பி.எஸ். போன்ற ‘அனைத்து இந்தியப் பணி களுக்கான’ தேர்வுகளை தமிழில் எழுதும் வாய்ப்புகள் இருக்கும்போது உயர் தொழில்நுட்பக் கல்விக்கான நுழைவுத் தேர்வுகளை மாநில மொழிகளில் எழுத அனுமதி மறுப்பதும், ‘குஜராத்தி’ மொழிக்கு மட்டும் தனி சலுகை காட்டுவதும் என்ன நியாயம்?

இதே அநீதியை மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையமும் தொடர்ந்து இழைத்து வருவதையும் சுட்டிக்காட்ட வேண்டும். 145க்கும் மேற்பட்ட மத்திய அரசு நிறுவனங்களுக்கு, பல கட்ட தேர்வுகளை நடத்தி ஊழியர்களை பணியமர்த்தும் இந்த ஆணையம் 7 மண்டலங்கள், 2 துணை மண்டலங்களுடன் செயல்படு கிறது. மண்டல அளவில் தேர்வுகள் நடத்தப்பட்டதால் மத்திய அரசின் துறைகளில் அந்தந்த மண்டலங்களுக்கு உட்பட்ட மாநிலங்களைச் சார்ந்தவர்களுக்கு வேலை வாய்ப்புகள் கிடைத்தன. 2006ஆம் ஆண்டுக்குப் பிறகு மண்டல வாரியாக நடத்தப்பட்ட தேர்வுகள் நிறுத்தப்பட்டன. அனைத்து இந்திய அளவிலான தேர்வுகளாக மாற்றப்பட்டன. இதனால் இந்தி மொழிக்காரர்களும், வடநாட்டுக்காரர்களுமே மத்திய அரசு வேலை வாய்ப்புகளை பெருமளவில் கைப்பற்றிக் கொண்டனர். உச்சநீதிமன்றம் தந்த தீர்ப்பே இதற்குக் காரணம் என்று கூறினார்கள்.

அதே தீர்ப்பில் மண்டலங்களில் வழங்கப்படும் வேலை வாய்ப்புகளைப் பாதிக்காமல் அகில இந்திய அளவில் தேர்வுகளை நடத்தலாம் என்று உச்சநீதிமன்றம் பரிந்துரை செய்திருந்தது. ஆனால், மாநில அளவிலான வேலை வாய்ப்புகளை ஒழிக்க வேண்டும் என்ற வாய்ப்புக்காகவே காத்திருந்தவர் களிடம் இந்த பரிந்துரைகளை நிறைவேற்றுவார்கள் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்?

இது தமிழக அரசு தேர்வாணைய

அறிவிப்பைப்போல் இழைத்துள்ள மற்றொரு துரோகம். தமிழக அரசுத் துறைகளான சுகாதாரம், பொதுப் பணி, ஆவின், குடிநீர் வடிகால் வாரியம், மின்சார வாரியம் உள்ளிட்ட துறைகள் மற்றும் நிறுவனங்களில் காலியாக உள்ள 3 இலட்சத்துக்கும் அதிகமான வேலை வாய்ப்புகளை அரசே நேரடியாக நிரப்பாமல் 'அயல்பணிமுறை' (Out sourcing) வழியாக நிரப்பி வருகிறது என்ற அதிர்ச்சியான தகவல் வந்திருக்கிறது.

தனியார் ஏஜென்சிகளிடம் இந்தப் பணி நியமனங் களுக்கான உரிமைகள் வழங்கப்பட்டுவிட்டன. அந்த நிறுவனங்கள் மாத ஊதியம் 25 ஆயிரம், 30 ஆயிரம் எனக் கூறி பணியில் அமர்த்தி, வெறும் ரூ.7 ஆயிரம், 8 ஆயிரம் மட்டுமே ஊதியமாக வழங்கிவிட்டு மீதிப் பணத்தை அந்த நிறுவனங்களும் இடைத் தரகர்களும் பங்கு போட்டுக் கொள்கிறார்கள். நிரந்தரப் பணியோ, அரசு ஊழியர்களுக்கான சலுகைகளோ இல்லாமல், எந்த நேரத்திலும் பணியிழப்பை சந்திக்கும் அவலத் துக்கு தமிழக இளைஞர்கள் தள்ளப்பட்டுள்ளார்கள்.

மாநில அரசும், மத்திய அரசும் போட்டிப் போட்டுக் கொண்டு தமிழ்நாட்டு இளைஞர்களின் வேலை வாய்ப்பு உரிமைகளைப் பறிப்பதோடு மட்டுமல்லாமல், இந்திக்காரர்களுக்கு கதவைத் திறந்து விடும் தீவிர செயல் திட்டங்களையும் தொடங்கி விட்டார்கள்.

## பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீடு புறந்தள்ளப்பட்டது

பிற்படுத்தப்பட்டோருக்கு மத்திய அரசு பதவிகளில் 27 சதவீத இடஒதுக்கீடு வழங்கும் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆணையைப் பிறப்பித்தார், சமூக நீதிக் காவலரான பிரதமர் வி.பி.சிங். 24 ஆண்டுகள் கழிந்த பிறகும் 27 சதவீதத்தில் இன்னும் பாதியளவுகூட பிற்படுத்தப்பட்டோருக்குப் பணிகள் வழங்கப்பட வில்லை என்ற அதிர்ச்சியான தகவல்கள் வெளிவந்துள்ளன.

தகவல் அறியும் சட்டத்தின் கீழ் பெறப்பட்டுள்ள தகவல்கள் அதிர்ச்சியூட்டுகின்றன. 1993 செப்டம்பர் 8ஆம் தேதி பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீடு நடைமுறைக்கு வந்தது. இப்போது என்ன நிலை? மத்திய அரசின் வேலை வாய்ப்புத் துறை அமைச்சகம் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் வெளியிட்டுள்ள தகவலின்படி ஜனவரி 1, 2017 வரை இதுதான் நிலை.

24 மத்திய அமைச்சகங்களில் குரூப் 'ஏ' பிரிவு அதிகாரிகளில் பிற்படுத்தப்பட்டோர் 17 சதவீதம் பேரும் 'பி' பிரிவில் 14 சதவீதம் பேர் மட்டுமே பணியாற்றுகிறார்கள். 'சி' பிரிவு ஊழியர்களில் 11 சதவீதம் பேரும், 'டி' பிரிவில் 10 சதவீதம் பேரும் பணியாற்றுகிறார்கள். 24 அமைச்சகங்கள், மொத்தமுள்ள 37 அரசுத்துறைகளில் 24 துறைகள், சட்ட அங்கீகாரம் பெற்ற 8 அமைப்புகள் (பிரதமர் அலுவலகம், குடியரசுத் தலைவர் செயலகம், பொருளாதாரம் தொடர்பான அமைப்புகள்) உள்ளிட்ட 54 நிறுவனங்கள், துறைகள் பற்றியும் தகவல்கள் கிடைத்துள்ளன. இவற்றில் குரூப் 'ஏ' பிரிவில் 14 சதவீதம். 'பி', 'சி', 'டி' பிரிவுகளில் முறையே 15, 17, 18 சதவீதமும் மட்டுமே பிற்படுத்தப்பட்டவர்கள் இருக்கிறார்கள்.

மத்திய அமைச்சரவைக்கான செயலகத்தில் (Cabinet Secretariat) 64 'ஏ' பிரிவு அதிகாரிகளில், ஒருவர்கூட பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர் இல்லை. 60 பேர் திறந்த போட்டியில் வந்தவர்கள் (இவர்கள் பார்ப்பனர், உயர் ஜாதியினர்) பட்டியல் இனப் பிரிவைச் சார்ந்தவர்கள் 4 பேர் மட்டுமே. தகவல் மற்றும் ஒலி/ ஒளி பரப்பு அமைச்சகத்தில் மொத்தமுள்ள 503 'ஏ' பிரிவு அதிகாரிகளில் 25 பேர் மட்டுமே பிற்படுத்தப் பட்டவர்கள்.

2015ஆம் ஆண்டில் இதே சட்டத்தின் கீழ் பெறப்பட்ட தகவலின்படி, 12 அமைச்சகங்கள் 10அரசுத் துறைகள், மற்றும் சட்ட அங்கீகாரமுள்ள நிறுவனங்களில் பிற்படுத்தப்பட்டோருக்குக் கிடைத்த இடங்களின் எண்ணிக்கை 'ஏ' பிரிவில் 10.71 சதவீதம், 'பி' பிரிவில் 7-18 சதவீதம்.

2013ஆம் ஆண்டு பெறப்பட்ட தகவலின்படி 55 மத்திய அரசின் கீழ் உள்ள அமைப்புகளில் பிற்படுத்தப் பட்டோர் எண்ணிக்கை 9.43 சதவீதம் மட்டுமே.

சென்னையைச் சார்ந்த சமூக செயல்பாட்டாளர் முனைவர் ஈ. முரளிதரன், இந்த தகவல்களைப் பெற்றுள்ளார். முனைவர் முரளிதரன், சென்னை அய்.அய்.டி.யில் படித்து, முனைவர் பட்டம் பெற்றவர். சமூக நீதிக்காகக் குரல் கொடுத்தக் காரணத்தால் அய்.அய்.டி. பார்ப்பன நிர்வாகம் பழி வாங்கியது. அய்.அய்.டி. வளாகத்துக்குள்ளேயே அவர் நுழையக் கூடாது என்று உயர்நீதிமன்றம் வழியாக அய்.அய்.டி. நிர்வாகம் தடை வாங்கியது. தொடர்ந்து பார்ப்பன நிறுவவனங்களுக்கு எதிராக அவர் போராடி வருகிறார். ஏற்கனவே அய்.அய்.டி. நிறுவனங்களில் இடஒதுக்கீடுகள் மறுக்கப்பட்டதை தகவல் அறியும் உரிமை சட்டத்தின்கீழ் வெளிச்சத்துக்கு கொண்டு வந்தவர் முனைவர் முரளீதரன்.

இப்போது மத்திய வேலை வாய்ப்புத் துறை அமைச்சகம் தந்துள்ள தகவல்கள் குறித்து அவர் தெரிவித்த கருத்துகள் மிகவும் முக்கியமானவை.

“இப்போது தரப்பட்டிருக்கும் தகவல்கள் கூட முழுமையானவை அல்ல. இவற்றில் 11 அமைச்சகங்கள் தகவல் தெரிவிக்க மறுத்துவிட்டன. இந்தத் துறைகள்தான் வேலை வாய்ப்புகள் மிக அதிகமாக இருக்கும் துறைகள், தொடர்வண்டித் துறை, பாதுகாப்புத் துறை, உள்துறை, நிதித்துறை போன்றவை தகவல் தெரிவிக்க மறுத்துவிட்டன. மத்திய அரசின் மொத்த வேலை வாய்ப்புகளில் 91.25 சதவீத வேலை வாய்ப்புகள் இந்தத் துறைகளில்தான் இருக்கின்றன. இப்போது தகவல் தெரிவித்துள்ள 24 அமைச்சகங்களில் மொத்த வேலைகளில் 8.75 சதவீதம் வேலைகள் மட்டுமே உள்ளன. 2011 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி தொடர்வண்டித் துறையில் மத்திய அரசுப் பணியாளர்களாக பதிவு செய்தவர்கள் 13,28,199. இவர்கள் நிரந்தரப் பணியாளர்கள். இவர்களில் பிற்படுத்தப்பட்டோர், பட்டியல் இனப் பிரிவினர் குறித்த எந்தத் தகவலும் இல்லை.

**மத்திய அரசுப் பணிகளில் 31 இலட்சம் பேர் பணியாற்றுகிறார்கள். ஆனால், இப்போது தகவல் அறியும் சட்டத்தின் கீழ் நாம் பெற்றிருக்கும் தகவல் 2 இலட்சத்து 31 ஆயிரத்து 735 ஊழியர்களைப் பற்றி மட்டுமே.**

2015ஆம் ஆண்டில், நான் தகவல் கேட்டபோது, 40 அமைச்சகங்கள், 48 மத்திய அரசுத் துறைகள், பிற்படுத்தப்பட்டோர் எண்ணிக்கைக் குறித்து, தகவல் தர மறுத்து விட்டன.

மத்திய வேலை வாய்ப்பு, பொது மக்கள் குறை தீர்ப்பு மற்றும் ஓய்வூதியத் துறை, 2013ஆம் ஆண்டு டிசம்பர் 19ஆம் தேதி, ஒரு தாக்கீதை பிறப்பித்தது. (O.M. No.43011.10.2002 Estt. Res) இதன்படி ஒவ்வொரு துறையிலும் பணியாற்றும் பட்டியல் இனம், பழங்குடி மற்றும் இதர பிற்படுத்தப் பட்டோர் எண்ணிக்கை பிரதிநிதித்துவம் குறித்தத் தகவலைத் தெரிவிப்பது கட்டாயக் கடமை’ என்று இந்த தாக்கீது அறிவுறுத்தியது. ஆனால் அது கிடப்பில் போடப்பட்டது.

2013 ஜுன் மாதம் மத்திய வேலை வாய்ப்பு அமைச்சகம் விரிவான ஒரு தாக்கீதைப் பிறப்பித்தது. (No.36038/1(i) 2013 Estt. Res) அதில் பட்டியல் இனப் பிரிவினர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட் டோருக்கான நிரப்பப்படாத பணியிடங்களை, விரைவாகக் கண்காணித்து, உயர்மட்ட அளவில் முடிவுகளை உடனடியாக எடுக்க வேண்டும் என்று கூறியது. 6 மாதத்துக்குள் பணியிடங்களை நிரப்புவதற்கான விரைவான செயல்பாடுகளை முடுக்கிவிட வேண்டும். அதற்காகத் தேவைப்பட்டால், விதிகளிலிருந்து விலக்குகளை வழங்கலாம் என்றும் தாக்கீது அறிவுறுத்தியது.

**மத்திய அமைச்சரவைக்கான செயலகத்தில் (Cabinet Secretariat) 64 ‘ஏ’ பிரிவு அதிகாரிகளில், ஒருவர்கூட பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர் இல்லை.**

இதைத் தொடர்ந்து மத்திய வேலை வாய்ப்புத் துறை இணை அமைச்சர் ஜிதேந்திரசிங் நாடாளுமன்றத்தில் ஒரு அறிவிப்பை வெளியிட்டார். சமூக நீதித் துறைஅமைச்சகத்தின் பரிந்துரைப்படி இடஒதுக்கீட்டுப் பிரிவினருக்கான நிரப்பப்படாத இடங்களை நிரப்புவதற்கான முனைப்பான செயல்பாடுகள் 2014 நவம்பர் 11இல் தொடங்கி, ஆகஸ்டு 2016க்குள் முடிக்கப்படும் என்றார்.

இதற்கான செயல் திட்டங்களும் உருவாக்கப் பட்டன. அந்த செயல் திட்டங்கள் செயலாக்கம் பெற்றிருக்குமேயானால் இவ்வளவு மோசமான நிலை ஏற்பட்டிருக்காது. தாக்கீதுகளோ, செயல் திட்டங்களோ முழுமையாக அலட்சியப்படுத்தப் பட்டதைத்தான் இந்த புள்ளி விவரங்கள் காட்டுகின்றன, என்றார் முனைவர் முரளீதரன்.


“காலி இடங்களை நிரப்புவதில் சுழற்சி முறை பின்பற்றப்படாதது தான் இதற்குக் காரணம்” என்று பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் முன்னாள் உறுப்பினர் எஸ்.கே.கார்வேந்தன் கூறினார்.

அகில இந்திய பிற்படுத்தப்பட்ட ஊழியர் நலச் சங்கத்தின் செயலாளர் கே. தனசேகர் கூறுகையில்,

“23 வயதில் மத்திய அரசுப் பணியில் நுழையும் பிற்படுத்தப்பட்டோர் மட்டுமே பதவி உயர்வுக்கான தகுதிகளைப் பெற்று, உதவி செயலாளர் அல்லது கீழ்நிலை செயலாளர் நிலைக்கு பதவி உயர முடியும். பலரும் 30 வயதில்தான் பணியில் சேருவதால் அவர்கள் ஓய்வு பெறும்போது கீழ்நிலை செயலாளர் என்ற நிலையைத் தாண்ட முடியவில்லை; இட ஒதுக்கீடு முறையாக அமுல்படுத்தப்படாததே இதற்குக் காரணம்” என்றார்.

இடஒதுக்கீடு சட்டமாக இருந்தாலும் அதை நிறைவேற்றும் அதிகார மய்யம் பார்ப்பன அதிகார வர்க்கத்தின் பிடியில் இருப்பதால் சமூகநீதி சட்டங்கள் சவக்குழிக்கு அனுப்பப்படுகின்றன. ●

***பசு பாதுகாப்புக் குழு என்ற பெயரில் சமூக விரோதிகள் அப்பாவி மக்கள் மீது நடத்திய வன்முறைகளின் தொகுப்பு.***



# 'கோமாதா' பெயரால் கொல்லப்பட்ட அப்பாவி மக்கள்

- *கடந்த 2015ஆம் ஆண்டு செப்டம்பரில், உத்தரபிரதேச மாநிலம் தாத்ரி என்ற ஊரில், வீட்டிலிருந்த குளிர்சாதனப் பெட்டியில் பசு மாமிசம் வைத்திருந்தார் என்று கூறி முகமது அக்லக் என்பவரை வீட்டிலிருந்து இழுத்து வந்து தெருவில் அடித்தே கொன்றது இந்து மதவெறி குண்டர் படை. பின்னர் நடந்த விசாரணையில் அக்லக் வீட்டிலிருந்தது மாட்டுக் கறி அல்ல என்பது நிரூபிக்கப்பட்டது.*
- *2015 அக்டோபர் 9-ஆம் தேதி காஷ்மீர் மாநிலம், உதம்பூரில் செத்த மாடுகளை எடுத்துச் சென்ற லாரிகளை வழிமறித்த இந்துமத வெறிக் கூட்டம் ஒன்று, லாரி ஓட்டுநர் ஜாகித் அகமது மற்றும் அவருடன் வந்த இன்னொரு இஸ்லாமிய இளைஞரையும் கொடூரமாக தாக்கியது. இதில் ஜாகித் அகமது பத்து நாட்களுக்குப் பின்னர் இறந்து போனார். இத்தாக்குதல் சம்பவம் ஜம்மு-காஷ்மீர் முழுவதும் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தி, போராட்டங்கள் வெடித்தன. காஷ்மீர் மாநிலத்தில் பா.ஜ.க. மக்கள் தேசிய கட்சி கூட்டணி ஆட்சி நடக்கிறது. மெகபூபா தலைமையிலான கூட்டணி அரசு பதவிக்கு வந்த பிறகு, இந்துத்துவா கும்பல் வெறியாட்டங்கள் அதிகரித்து உள்ளன.*
- *2015, அக்டோபர் 8ஆம் தேதி, ஜம்மு-காஷ்மீர் சட்டசபையில் சுயேட்சை எம்.எல்.ஏ., ஷேக் அப்துல் ரஷீத், சட்ட மன்ற எம்.எல்.ஏ. விடுதியில் மாட்டிறைச்சி விருந்து தந்தார் என்று, பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர்களால் தாக்கப்பட்டார். உதம்பூர் தாக்குதல் நடந்த நேரத்தில் இமாச்சல பிரதேச மாநிலம் சகரன்பூர் அருகே மாடுகளைக் கடத்திச் செல்ல முயன்றதாக இருபது வயது இளைஞர் ஒருவரை அடித்தே கொன்றது இந்துத்துவா குண்டர் படை.*
- *2016 ஜனவரியில் மராட்டிய மாநிலம் ஹர்தா மாவட்டத்தில் உள்ள கிர்க்கியா இரயில்வே நிலையத்தில் பயணிகள் சிலரைக் கண்மூடித்தனமாக தாக்குகிறது, இந்து பரிவார அமைப்பான கோரக்ஷன சமிதியைச் சேர்ந்த குண்டர் படை ஒன்று. மறுநாள் உள்ளூர் பத்திரிகைகள் பசு மாமிசத்தைக் கடத்திய முஸ்லீம் பயணிகளை கோரக்ஷன சமிதி தாக்கியதாக செய்தி வெளியிட்டன. எனினும் பின்னர் நடந்த காவல் துறை விசாரணைகளில் கைப்பற்றப்பட்ட மாமிசம் பசுவினுடையது அல்ல; எருமைக் கறி என்று தடயவியல் சோதனை மூலம் வெளிவந்தது.*
- *2016 மார்ச்சு மாதம் ஜார்கண்ட் மாநிலம் லாத்தேகர் மாவட்டத்தில் இரண்டு முஸ்லீம் கால்நடை வியாபாரிகளை இந்துத்துவா மதவெறியர்கள் அடித்துக் கொன்று மரத்தில் தொங்கவிட்டனர். கொல்லப்பட்டவர்கள் மஸ்லூம் அன்சாரி மற்றும் இம்தியாகான் என அடையாளம் காணப்பட்டனர். இவர்கள் லாத்தேகர் மாவட்டத்தில் நடக்கும் புகழ்பெற்ற கால்நடைச் சந்தையில் இருந்து வளர்ப்பதற்காக ஆடு மாடுகளை வாங்க வந்தவர்கள் என்பது பின்னர் விசாரணையில் தெரியவந்தது.*
- *2016, ஏப்ரல் 5ஆம் தேதி ஹரியானா மாநிலத்தைச் சேர்ந்த முஸ்டெய்ன் அப்பா என்கிற 27 வயது வாலிபர் விவசாயத்திற்காக காளை மாடுகளை வாங்கிவிட்டுத் திரும்பும் வழியில் கோரக்ஷாதள் என்கிற பரிவார் அமைப்பைச் சேர்ந்தவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.*
- *2016, ஜூன் மாதம் சுமார் 40 பேர் கொண்ட பஜ்ரங்தள் குண்டர்கள் கர்நாடக மாநிலம் கோப்பா அருகே தலித் குடும்பம் மாட்டுக் கறி வைத்திருப்பதாக குற்றம்சாட்டி கொலைவெறித் தாக்குதலைக் கட்டவிழ்த்துவிட்டது. கொடூரமான இத்தாக்குதலில் அந்த தலித் குடும்பம் மரணக் காயங்களுக்கு உள்ளானது.*

2016 ஜூலை மாதம் குஜராத் மாநிலம் உனாவில் செத்த மாட்டின் தோலை உரித்தார்கள் எனக் குற்றம்சாட்டி தலித் இளைஞர்களைக் கொடூரமாகத் தாக்கியது இந்துத்துவ கும்பல். இச்சம்பவம் சமூக ஊடகங்களில் வெளியான நிலையில் குஜராத் மாநிலம் முழுக்க தலித் மக்கள் கொந்தளித்து எழுந்தனர். செத்த மாட்டை சுமக்க மாட்டோம்; உரிக்க மாட்டோம் என்று தீர்மானித்த குஜராத் தலித் மக்கள், அரசு அலுவலகங்களை செத்த மாடுகளால் நிறைத்தனர். பல வாரங்கள் தொடர்ந்த இந்தப் போராட்டங்களால் அதிர்ச்சி அடைந்த இந்துத்துவ கும்பல், தலித் வாக்குகளை இழந்து விடுவோம் என்ற அச்சத்தில் ஆழ்ந்தன.

- பா.ஜ.க. ஆளும் மத்திய பிரதேச மாநிலத்தில், 2016 ஜூலை மாதத்தில் பஜ்ரங்தள் அமைப்பைச் சேர்ந்த குண்டர் படை ஒன்று, மாண்ட்சோர் மாவட்ட இரயில்வே நிலையத்தில் மாட்டுக் கறி வைத்திருப்பதாகக் குற்றம் சாட்டி இரண்டு இஸ்லாமியப் பெண்களைத் தாக்கியது. 2016 ஆகஸ்டு மாதம், ஆந்திராவில் மோகதி எலிசா, லாசர் எலிசா ஆகிய இரண்டு தலித் சகோதரர்கள் இறந்த மாட்டின் தோலை உரித்துக் கொண்டிருக்கும்போது, கோரக்ஷா சமிதியைச் சேர்ந்த நூறு குண்டர்களால் தாக்கப்பட்டனர்.

- 2017 ஏப்ரல் ஒன்றாம் தேதி ஹரியானா மாநிலத்தில் முறையாக அனுமதி பெற்று மாடுகளை ஏற்றி வந்த டெம்போ வாகனங்களை வழிமறித்த பஜ்ரங்தள் குண்டர்கள், மாடுகளை ஏற்றி வந்த 15 இஸ்லாமியர்களைக் கொடூரமாகத் தாக்கினர். இந்தத் தாக்குதலில் பெஸ்லுகான் என்கிற முதியவர் கொல்லப்பட்டார்.

  2017 ஏப்ரல் 21ஆம் தேதி ஜம்மு-காஷ்மீர் ரியாசி மாவட்டத்தில் கால்நடைகளுடன் இடம் பெயர்ந்த நாடோடிக் குடும்பம் ஒன்றை வழிமறித்த கோரக்ஷக் குண்டர் படை கொடூரமாகத் தாக்கி உள்ளது. இந்த ஏப்ரல் 21ஆம் தேதி, புதுடெல்லி கால்காஜி பகுதியில் எருமைகளைக் கடத்த முற்பட்டதாகப் பொய்யாகக் குற்றம் சுமத்தி மூன்று முஸ்லீம் இளைஞர்கள் தாக்கப்பட்டனர். கடுமையான தாக்குதலோடு இரவு முழுவதும் மயங்கிய நிலையில் கிடந்த இளைஞர்களை மறுநாள் எழுப்பி விசாரித்த காவல்துறையினர், அவர்கள் மேல் மிருகவதைத் தடைச் சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

- ராஜஸ்தான் மாநிலத்தில் ஜெய்சல்மார் நகரில் 50 பசுக்களை தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத்துறை அதிகாரிகள் மத்திய அரசின் இனவிருத்தித் திட்டத்துக்காக விலைக்கு வாங்கி இருந்தனர். அவற்றை தமிழகத்திற்கு கொண்டு செல்ல அந்த மாநில காவல்துறையிடம் முறைப்படி தடையில்லா சான்றுகளையும் பெற்றனர். பின்னர் ஜூன் 11 ஆம் தேதி மாலை 5 வாகனங்களில் பசுக்களை ஏற்றிக் கொண்டு தமிழகத்திற்குப் புறப்பட்டனர். அப்போது பசுப் பாதுகாவலர்கள் என்ற அமைப்பைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்டோர் திடீரென வாகனங்களை சூழ்ந்து கொண்டு கல்வீச்சில் ஈடுபட்டனர். ஒரு கட்டத்தில் தமிழக அதிகாரிகள் மீதும் தாக்குதல் நடத்த முற்பட்டனர். வாகனங்களுக்கு தீ வைக்கவும் முயற்சி செய்தனர். மேலே கூறப்பட்டுள்ள நிகழ்வுகள் அனைத்தும் ஊடகங்களில் பத்திரிகைகளில் வெளி வந்தவை. வெளியே தெரியாத சம்பவங்களின் பட்டியல் மிக நீளமானது ஆகும்.

- உத்திரபிரதேச மாநிலத்தில் மட்டும் 2015 மற்றும் 2016 ஆகிய இரண்டு ஆண்டுகளில் சிறிதும் பெரிதுமாக சுமார் 317 மதக் கலவரங்கள் நடந்து உள்ளன. இந்தத் தகவலைக் கடந்த பிப்ரவரி மாதம் நாடாளுமன்றத்தில் கேள்வி ஒன்றுக்கான பதிலில், உள்துறை இணை அமைச்சர் கிரென் ரிஜ்ஜூ தெரிவித்தார்.

- உத்தரபிரதேச மாநிலத்தில் சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பு இந்துத்துவா கும்பல் நடத்திய மதக் கலவரங்கள் இஸ்லாமிய வெறுப்புப் பிரச்சாரங்கள் மற்றும் மாட்டு அரசியல் காரணமாகவே அங்கு பா.ஜ.க. ஆட்சிக்கு வரும் வாய்ப்பை உருவாக்கியதாக ஆர்.எஸ்.எஸ்., சங் பரிவார் கூட்டம் நினைக்கிறது. தற்போது உ.பி. மாநிலத்தில் ஆர்.எஸ். எஸ்., யோகி ஆதித்ய நாத்தை முதல்வர் பதவிக்குக் கைகாட்டியது. அவரும் திடீரென்று நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவர் முதல்வர் பதவியில் திணிக்கப்பட்டுள்ளார். உ.பி.யில் பா.ஜ.க. வெற்றிக்குப் பின்னர், பசுப் பாதுகாப்புப் படை உள்ளிட்ட ஆர்.எஸ். எஸ்., பரிவாரங்கள் புதிய உத்வேகம் அடைந்துள்ளன. உத்திரபிரதேச மாநிலம் ஆக்ராவை அடுத்த ஃபதேபூர் சிக்ரியைச் சேர்ந்த முஸ்லீம் காய்கறிக் கடையைக் கொள்ளையடித்துள்ளனர்.

  காவல்துறையினர் வன்முறைக் கும்பல் மீது வழக்குப் பதிவு செய்ததால் ஆளும் பா.ஜ.க., ஆர்.எஸ். எஸ்., கூட்டம் ஃபதேபூர் சிக்ரி காவல்நிலையத்தில் நுழைந்து தாக்கி உள்ளனர்; காவல் நிலையத்தில் இருந்த கண்காணிப்பாளரைக் குறி வைத்து அடித்துள்ளனர். இந்தச் சம்பவம் நடப்பதற்கு இருபது நாட்களுக்கு முன்பு, சகரான்பூரில் முஸ்லீம்களுக்கு எதிராக இந்துத்துவா அமைப்பினர் நடத்திய கலவரத்தின்போது ரோந்து வந்த மூத்த காவல்துறை கண்காணிப்பாளர் லவகுமாரைத் தாக்கி உள்ளனர். சகரான்பூரைச் சேர்ந்த தலித்துகளும், முஸ்லீம் களும் இணைந்து கடந்த ஏப்ரல் 14ஆம் தேதி அம்பேத்கர் பிறந்த நாள் விழாவைக் கொண்டாடி உள்ளனர். இதற்குப் போட்டியாக இந்துத்துவக் கும்பல் நடத்திய ஊர்வலம் வன்முறைக் கலவரமாக வெடித்தது.

• உச்சநீதிமன்றத்தில் 'ஆதார்' தொடர்பாக நடந்து வரும் வழக்கில் மத்திய அரசு தாக்கல் செய்துள்ள மனு மோடி அரசின் 'மாட்டு அரசியல்' உச்சத்தைத் தொட்டுள்ளது. "இந்தியா முழுவதும் உள்ள ஒவ்வொரு மாட்டுக்கும், மாட்டு வம்சத்தைச் சேர்ந்த கால்நடைகளுக்கும் ஆதார் எண்" வழங்கப்பட உள்ளது என்று அந்த மனுவில் மத்திய அரசு கூறியது. நாடெங்கும் உள்ள சுமார் 8.8 கோடி மாடுகள் மற்றும் எருமைகளின் காதுகளில் ஆதார் எண் பதியப்பட்ட பிளாஸ்டிக் வில்லைகளைப் பொருத்த சுமார் ஒரு இலட்சம் பணியாளர்கள் தேர்வு செய்யப்பட்டு, பயிற்சி அளிக்கப்பட்

# மாட்டிறைச்சி ஏற்றுமதியாளர்கள் யார்?

மாட்டிறைச்சி ஏற்றுமதி தொழிலில் ஈடுபடும் மிகப் பெரும் நிறுவனங்களின் உரிமையாளர்கள் உயர்ஜாதி இந்துக்கள் தான். அது குறித்த சில விவரங்களைப் பார்ப்போம்:

• மாட்டிறைச்சி ஏற்றுமதி வர்த்தக நிறுவனங்களை நடத்தும் பெரிய நிறுவனங்களின் பட்டியலைப் பார்த்தால் அவர்கள் இஸ்லாமியர்களோ, கிறிஸ்துவர்களோ, தலித்துகளோ அல்ல. அத்தனை பேரும் 'இந்து'க்கள். கடந்த தேர்தலில் பா.ஜ.க.வுக்கு அதிகமாக தேர்தல் நிதி கொடுத்தவர்களும் இவர்கள்தான்.

இதோ மாட்டிறைச்சி ஏற்றுமதியில் முன்னணியில் உள்ள நிறுவனங்களின் பட்டியல்:

• ஆண்டுதோறும் 19,30,000 டன் மாட்டிறைச்சி ஏற்றுமதி செய்து உலக மாட்டிறைச்சி ஏற்றுமதி சந்தையில் 16 சதவீத இடத்தைப் பிடித்திருக்கிறது இந்தியா. உலகில் இந்தியா மூன்றாவது இடத்தில் நிற்கிறது.

**அல்கபீர் எக்ஸ்போர்ட்ஸ் பிரைவேட் லிமிடெட்:** இந்தியாவிலேயே அதிக அளவு மாட்டிறைச்சி ஏற்றுமதி செய்யும் அந்த கம்பெனியின் பெயர் மட்டும்தான் முஸ்லிம் அடையாளம். இதை நடத்தும் முதலாளி சதீஷ்சபேர்வால் என்ற இந்து. தெலுங்கானா மாநிலத்தில் ருத்ராக் எனும் கிராமத்தில் 400 ஏக்கர் பரப்பளவில் இவரது இறைச்சி வெட்டும் வளாகம் அமைந்துள்ளது. பல உலகநாடுகளில் இதன கிளைகள் செயல்படுகின்றன.

**அரேபியன் ஏற்றுமதி நிறுவனம் :** உரிமையாளர் பெயர் சுனில் கபூர் என்ற இந்து. மும்பையில் தலைமை அலுவலகம் இயங்குகிறது.

**எம்.கே.ஆர். ஃப்ரோஸன் ஃபுட் பிரைவேட் லிமிடெட் :** உரிமையாளர் மதன் அபோத் - டெல்லியைச் சார்ந்தவர்.

**அல்நூர் எக்ஸ்போர்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் :** முஸ்லிம் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள இதன் உரிமையாளர் சுனில் சூட் என்ற இந்து. இந்து சாமியார் ஆதித்யநாத் முதலமைச்சராக உள்ள உ.பி. - முசாஃபர் மாவட்டத்திலுள்ள ஷெர் நகர் கிராமத்தில் தான் இவரது மாட்டிறைச்சி வெட்டும் வளாகம் அமைந்துள்ளது.

உ.பி. உனானோ மாவட்டத்தில் **ஏ.ஓ.பி. எக்ஸ்போர்ட் பிரைவேட் லிமிடெட்** என்ற மாட்டிறைச்சி நிறுவனம் செயல்படுகிறது. உரிமையாளர் ஓ.பி. சுரார என்ற இந்து. இந்த உனானா கிராமத்தில் தான் மாட்டிறைச்சி வெட்டியதாக தலித்துகள் சங்கிகளால் கொல்லப்பட்டனர்.

**ஸ்டான்டர்ட் ஃப்ரோசன் ஃபுட்ஸ் பிரைவேட் லிமிடெட்** என்ற மாட்டிறைச்சி ஏற்றுமதி நிறுவனம், உ.பி. மாநிலம் சந்தப்பூர் கிராமத்தில் செயல்படுகிறது. உரிமையாளர் கர்னல் வர்மா என்ற இந்து.

மகாராஷ்டிராவில் மாட்டிறைச்சி ஏற்றுமதி வணிகத்தில் முன்னணியில் நிற்கும் நிறுவனம், **மகாராஷ்டிரா ஃபுட் பிராசசிங் லிமிடெட்** என்று நிறுவனம். இதன் பங்குதாரர்களில் ஒருவரான சுனில்கத்தார் என்ற இந்து 'தர்ம் அவுர் தந்தா' என்ற தத்துவத்தைப் பேசுபவர். அதாவது மதம் என்பது வேறு; வணிகம் என்பது வேறு; இரண்டையும் ஒன்றாக்கக் கூடாது என்பது இவரது கொள்கை.

ஆனால் பசு மாட்டிறைச்சி சாப்பிடும் இஸ்லாமியர், கிறிஸ்துவர், தலித் மக்கள் - இந்துமத விரோதிகள், புனிதமற்றவர்கள் என்றும், இந்துக்கள் பசுவை புனிதமாகக் கருதுகிறவர்கள்; மாட்டிறைச்சிச் சாப்பிடாதவர்கள் என்றும் பொதுப் புத்தியில் சங் பரிவாரங்கள் தவறான கருத்தைத் திணித்து வைத்துவிட்டன.

வடகிழக்கு மாநிலங்களில் வாழும் மக்கள் மாட்டிறைச்சி உணவுக் கலாச்சாரத்தில் மூழ்கிப் போனவர்கள். அங்கெல்லாம் பா.ஜ.க. மாட்டிறைச்சிப் பிரச்சினைப் பற்றி வாய் திறப்பதே இல்லை.

டுள்ளதாம். சுமார் 150 கோடி ரூபாய் செலவில் நடைமுறைப்படுத்தப்பட உள்ள இத்திட்டத்தின் மூலம் கால்நடைகளின் சட்டவிரோத நடமாட்டத்தைக் கண்காணிப்பது சாத்தியமாகும் என்று மத்திய அரசு தெரிவித்தது.

அதாவது கன்று ஈனும் வயதைக் கடந்த பால் வழங்க முடியாத வயதான மாடுகளைக் கைவிடுவது அல்லது மாடுகள் அறுப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கும் மாநிலங்களுக்கு அடி மாடாக அனுப்புவது போன்ற முடிவுகளை எடுக்கும் விவசாயிகளையும் கூட இனிமேல் இத்திட்டத்தின் விளைவாக குற்றவாளிகளாக்க முடியும். இந்துத்துவ அரசியலால் மாட்டிறைச்சி உணவுப் பழக்கம் கொண்ட இஸ்லாமியர், தலித் துக்கள் மட்டுமின்றி மற்ற சாதியினருக்கும் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள அனைத்து மக்களுக்குமே எதிரானது என்பதை மோடி அரசு உறுதிப்படுத்தி உள்ளது.

2017ஆம் ஆண்டு மே மாதம் மிருகவதை பாதுகாப்பு என்ற பெயரில் மத்திய அரசு சந்தைகளில் கால்நடைகளை விற்பதற்கோ வாங்குவதற்கோ கடும் கட்டுப்பாடுகளை விதிக்கும் சட்டம் ஒன்றைக் கொண்டு வந்தது. கால்நடைகளை விற்பனை செய்யும் வணிகர்கள் கடும் பாதிப்புக்கு உள்ளாக்கிய சட்டம் இது. ஒரு கால்நடையை சந்தைக்கு விற்பதற்குக் கொண்டு வந்தால், கால்நடை உரிமையாளரின் கையொப்பச் சான்றிதழைக் கொண்டு வரவேண்டும். அது விற்பனைக்கானது என்ற சான்று வேண்டும். விற்பவரின் முகவரி - அடையாள அட்டை - புகைப்படங்களை விண்ணப்பத்தில் இணைந்திருக்க வேண்டும். கால்நடையின் அங்க அடையாளங்களைப் பதிவு செய்ய வேண்டும். அது வெட்டப்படுவதற்காக விற்கப்படவில்லை என்ற உறுதிமொழிப் பத்திரத்தை எழுதித் தரவேண்டும் என்ற ஏராளமான கெடுபிடிகள் அமுல்படுத்தப்பட்டன. கால்நடை வளர்ப்பை தங்கள் வாழ்வாதாரமாகக் கொண்டு வாழ்ந்த மக்கள் கடும் பாதிப்புக்கு உள்ளானார்கள். உச்சநீதிமன்றம் தலையிட்டு இந்த அடக்குமுறைச் சட்டத்துக்கு தடை போட்டது, பசுப் பாதுகாவலர்கள் என்ற பெயரில் ஆர்.எஸ்.எஸ். மதவெறியர்கள் சட்டத்தைக் கையில் எடுத்துக் கொண்டு கொலை வெறியாட்டம் போட்டனர். 2010லிருந்து 2018ஆம் ஆண்டு வரை பசுப் பாது காப்பு என்ற பெயரில் 80 வன்முறை சம்பவங்கள் நடந்தன. இதில் 29 பேர் கொல்லப் பட்டார்கள். 271 பேர் படுகாயமடைந்தனர். 2017ஆம் ஆண்டு இது மிகவும் மோசமான நிலை அடைந்தது. 37 வன்முறை சம்பவங்களில் 152 பேர் கடும் பாதிப்புக் குள்ளானர்கள். 11 பேர் கொல்லப் பட்டனர். குற்றம் செய்தவர்களில் ஒருவர்கூட நீதிமன்றத்தால் தண்டிக்கப்படவில்லை. கொல்லப்பட்டவர்கள் இஸ்லாமியர் மற்றும் தலித் மக்கள் தான். **– இரா**

## இந்தியா இனி 'இந்தி'யா?

2011ஆம் ஆண்டு நாடாளுமன்ற நிலைக்குழு சமர்ப்பித்த இந்தி மொழி தொடர்பான பரிந்துரை களுக்குக் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி இப்போது ஒப்புதல் அளித்துள்ளார். இந்தி பேசாத மாநிலங்களின் மீது இடியைப்போல் இறங்கியிருக்கும் இந்தப் பரிந்துரைகள் கீழ்வருமாறு...

1. ஜனாதிபதி, பிரதமர், மத்திய மந்திரிகள் உள்ளிட்ட தலைவர்கள், குறிப்பாக யாருக்கெல்லாம் இந்தி தெரியுமோ, அவர்கள் இனி நாடாளுமன்றத்திலும் பொது விழாக்களிலும் இந்தியில்தான் பேச வேண்டும்
2. விமானங்களில் இந்தியில்தான் அறிவிப்புகளை வெளியிட வேண்டும். அதைத் தொடர்ந்து, ஆங்கிலத்தில் அறிவிப்புகள் வெளியிடப்பட வேண்டும்.
3. இனி, விமானங்களில் வழங்கப்படுகிற செய்தித் தாள்கள் மற்றும் பத்திரிகைகள் 50 சதவிகிதம் இந்தி மொழியில் இருக்க வேண்டும். ஏர் இந்தியா விமான நிறுவனத்தின் டிக்கெட்டுகளிலும் இந்தி பெருமளவு பயன்படுத்தப்பட வேண்டும்.
4. மத்திய அரசின் டேராடூன் ஐ.ஏ.எஸ். பயிற்சி நிலையத்தில் அனைத்துப் பயிற்சி ஏடுகளும் இந்தி, ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளைக்கொண்டதாக இருக்க வேண்டும்.
5. பள்ளிக் கல்வித்திட்டத்தில் இந்தி கட்டாயப் பாடமாகச் சேர்க்கப்படவேண்டும். முதல் கட்டமாக சி.பி.எஸ்.இ மற்றும் கேந்திரிய வித்யாலயா பள்ளிக்கூடங்களில் 10ஆம் வகுப்பு வரையில் இந்தி கட்டாயப் பாடமாக வைக்கப்படவேண்டும். இது தொடர்பாக மாநில அரசுகளுடன் மத்திய அரசு ஆலோசனை நடத்தி, கொள்கை வகுக்க வேண்டும்.
6. இந்தி மொழி பேசாத மாநிலங்களில் அமைந்துள்ள பல்கலைக்கழகங்கள், கல்வி நிறுவனங்களில், தேர்வுகள் மற்றும் நேர்முகத் தேர்வுகளில் இந்தியில் பதில் அளிப்பதை விருப்புரிமைத் தேர்வாகக் கொள்ள வேண்டும்.

இந்தப் பரிந்துரைகள் அனைத்தும் ஆறு ஆண்டு களுக்கு முன்பு, அதாவது காங்கிரஸ் ஆட்சியின்போது அமைக்கப்பட்ட நாடாளுமன்ற நிலைக்குழுவால் முன் மொழியப்பட்டவை. இந்த நிலைக்குழுவின் தலைவரே, தமிழகத்தைச் சேர்ந்த, முன்னாள் நிதியமைச்சர் ப.சிதம்பரம்தான். இந்தியைத் திணிப்பதற்கான காங்கிரஸ் பரிந்துரைகளை பாரதிய ஜனதா கட்சியின் ஆட்சியில், 'இந்தி'யாவின் ஜனாதிபதி ஏற்றுக்கொண்டு ஒப்புதல் வழங்கியிருக்கிறார் என்பதுதான் உண்மை. பல்வேறு மொழிகள், தேசிய இனங்கள், பண்பாடுகளை அழித்து, இந்தி என்ற ஒற்றைமொழியை அனைத்துமட்டங்களிலும் கொண்டுவரும் நடவடிக்கைதான் இது.

"காங்கிரஸ் இல்லாத இந்தியாவை உருவாக்குவோம்" என்றார் மோடி. ஆனால், இதையெல்லாம் பார்க்கும் போது, இந்தி தவிர்த்த பிறமொழிகள் இல்லாத இந்தியாவை உருவாக்குவதுதான் நோக்கம்போலத் தெரிகிறது. நாம் அனைவரும் 'இந்தியர்' என்று இதுவரை சொல்லிவந்ததன் உண்மையான அர்த்தம், இனி 'இந்தி'யர் என்பதுதானோ?

இனி, ஆனந்தவிகடன் தலையங்கமாவது தமிழில் இருக்கலாமா, அல்லது இதுவும் இந்தியில்தான் இருக்கவேண்டுமா?

**நன்றி : ஆனந்தவிகடன் தலையங்கம், 3.5.2017**

*தலித் மக்களின் வளர்ச்சிக்கான நிதியை படிப்படியாகக் குறைத்த மோடி ஆட்சி, மாணவர் கல்விக்கான உதவித் தொகையிலும் கை வைத்தது. தலித் மக்கள் மீதான தாக்குதல்களும் அதிகரித்தது.*

*பட்டியல் இனப் பிரிவு மேம்பாட்டுக்காகவும் நலனுக்காகவும் அவர்களுக்கான மக்கள் தொகை அடிப்படையில் ஒவ்வொரு துறையிலும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். ஆனால் பா.ஜ.க. ஆட்சியில் நிதி ஒதுக்கீடு மிக மிகக் குறைவு என்பதையே புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. 22.5 சதவீத நிதி ஒதுக்கீட்டுக்கு பதிலாக 2014-15ஆம் ஆண்டுக்கு 8.79 சதவீதம்; 2015-16இல் 6.63 சதவீதமும், 2016-17இல் 7.06 சதவீதமும், 2016-17இல் 8.91 சதவீதமும், 2017-18இல் 6.55 சதவீதமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டன. மிகக் குறைவாக ஒதுக்கப்பட்ட நிதியும்கூட பட்டியலினப் பிரிவினருக்கு நேரடியாகப் பயன்தரக் கூடிய திட்டங்களுக்கு செலவிடப்பட வில்லை.*

# தலித் மக்களுக்கு மோடி ஆட்சியின் அநீதிகள்

*ஏற்கனவே அமுல்படுத்தி வரும் பட்டியல் இனப் பிரிவினருக்கான நல்வாழ்வுத் திட்டங்களை செயற்படுத்துவதற்கான நிதியும் மோடி ஆட்சியில் கணிசமாக வெட்டப்பட்டது. தனித்தனியாக நேரடி பயன்தரக்கூடிய திட்டத்துக்கான நிதி ஒதுக்கீட்டில் 50.69 சதவீதமும், பொதுவான சமூகநலத் திட்டங்களுக்கு 49.3 சதவீதமும் ஒதுக்கீடு செய்யப்பட்டன. அதாவது தேவையான முழு ஒதுக்கீட்டில் பாதியளவுகூட ஒதுக்கப்படவில்லை. அது மட்டுமின்றி பட்டியலினப் பிரிவுனருக்காக ஒதுக்கப்பட்ட நிதியை வேறு திட்டங்களுக்கு மடை மாற்றமும் செய்யப்பட்டுள்ளது. இந்த நிதியிலிருந்து ரூ. 6312 கோடியை நோய் தடுப்புத் திட்டத்துக்கும், 244.50 கோடியை காற்றாலை மின் உற்பத்தி திட்டத்துக்கும், ரூ. 857.92 கோடியை சூரிய மின் உற்பத்தித் திட்டத்துக்கும் திருப்பி விடப்பட்டது. இது அப்பட்டமான முறைகேடு. (ஆதாரம் ; நாடாளுமன்றத்தில் 2.1.2018இல் இணை அமைச்சர் **விஜய் சாம்ப்ளா** தந்த தகவல்)*

**உயர் கல்வி நிதி வெட்டு**

*தலித் மாணவர்கள் உயர் கல்விக்கு உதவித் தொகை வழங்கும் திட்டம் காங்கிரஸ் ஆட்சி காலத்திலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2017-18ஆம் ஆண்டு இத்திட்டத்துக்கான நிதி ஒதுக்கீட்டில் 348 கோடி ரூபாயை அரசு குறைத்துவிட்டது. அதுவும் ஏற்கனவே 51,03,243 தலித் மாணவர்கள் இந்த உதவித் தொகைக் கிடைக்காமல் அவதிப்பட்டுக் கொண்டிருந்த சூழலில் ஒதுக்கப்பட வேண்டிய நிதியை மேலும் குறைத்தார்கள். உதவித் தொகைக் கிடைக்காத நிலையில் ஏராளமான தலித் மாணவர்கள் உயர் கல்வியை பாதியிலேயே கைவிடும் நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்.*

*குடியரசுத் தலைவர் பதவிக்கு ராம்நாத் கோவிந்த் என்ற தலித் வேட்பாளரை நிறுத்தி, தலித் ஆதரவு நாடகம் நடத்தும் மோடி ஆட்சியில் தலித் மக்களுக்கு பாதுகாப்பு இருக்கிறதா? அவர் களுக்கான உரிமைகள் பாதுகாக்கப்படுகிறதா?*

**மோடி அரசாங்கம் மத்தியில் மூன்றாண்டுகளை நிறைவு செய்திருக்கிறது.**

*மிகவும் விளிம்பு நிலையில் உள்ள சமூகத்தினரான, தலித்துகள், பழங்குடியினர் மற்றும் மதச்சிறுபான்மையினர் மீதான தாக்குதல்கள் அதிகரித்துள்ளன. அவர் களுக்கான முன்னுரிமை என்பது 'பசு'விற்குக் கொடுப்பதை விட குறைவேயாகும். தலித்துகள், பழங்குடியினர், மதச்சிறுபான்மை யினர் மீதான தாக்குதல்கள் குறித்து நாட்டிலுள்ள ஊடகங்கள் வாயே திறப்பதில்லை.*

*2014 பொதுத்தேர்தலின்போது பாஜக வெளியிட்ட தேர்தல் அறிக்கையையும் கடந்த காலங்களில் அது அமல்படுத்தியுள்ளவற்றையும் ஒப்பிட்டுப் பார்த்தாலே பாஜகவின் மோசமான ஆட்சியை நன்கு புரிந்துகொள்ள முடியும், 'பாஜக மனிதர் மலத்தை மனிதர் சுமக்கும் கொடுமைக்கு முற்றுப்புள்ளி வைத்திட உறுதி பூண்டிருக்கிறது' என்று தேர்தல் அறிக்கையில் கூறியிருந்தது.*

*ஆனால், இந்த உறுதிமொழிக்கும் எதார்த்த நிலைக்கும் தொடர்பே கிடையாது. உண்மையில், 2017-18இல் சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையில், மனித மலத்தை சுமந்திடும் மனிதருக்கு மாற்று வேலைகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதியின் அளவு பத்து கோடி ரூபாய் அளவிலிருந்து ஐந்து கோடி ரூபாயாக, அதாவது பாதியாகக் குறைக்கப்பட்டுவிட்டது. 2011 மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி நாட்டில் உலர் கழிப்பிடங்கள் 26,07,612 இருக்கின்றன.*

இதற்கு சுமார் 2 இலட்சம் சுத்தம் செய்யும் தொழிலாளர்கள் தேவை.

இத்துடன் இரயில்வே மற்றும் பொது இடங்களில் உள்ள கழிவறைகளைச் சுத்தம் செய்வோரையும் சேர்த்தால் இவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகமாகும். இவ்வாறு மலம் அள்ளும் தொழிலாளிக்கு மாற்றுப்பணி அளிப்பதற்காக ஒரு நபருக்கு ரொக்க ஊக்கத்தொகையாக 40 ஆயிரம் ரூபாய் அளிக்கப்பட வேண்டும் என்று கணக்கிட்டால், மொத்தம் 800 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. ஆனால் 2016 பிப்ரவரி 15 வரையிலும் 7,573 நபர்களுக்கு மட்டுமே மாற்றுப்பணி அளிக்கப்பட்டிருக்கிறது. 1,92,427 பேர் மாற்றுப்பணி எதுவும் அளித்திடாமல் நிர்க்கதியாய் விடப்பட்டிருக்கிறார்கள். மோடியின் 'தூய்மையான பாரதம்' திட்டத்தின்கீழ் எத்தனை உலர் கழிப்பிடங்கள் அகற்றப்பட்டிருக்கின்றன என்பதற்கான தரவு எதுவும் கிடையாது.

**தாக்குதல்கள்**

'நாங்கள் (பாஜக) தலித்துகள்/பழங்குடியினருக்கு எதிரான அட்டூழியங்களைத் தடுத்திடுவதற்கும், அவர்களுக்கு உரிய பாதுகாப்பை அளித்திடுவதற்கும் உச்சபட்ச முன்னுரிமை அளித்திடுவோம்' என்பது மற்றுமொரு தேர்தல் வாக்குறுதியாகும்.

இவர்களின் ஆட்சியில் தலித்துகள் மீதான வன்கொடுமைகள் அதிகரித்திருக்கின்றன. உத்தரப்பிரதேசம் மாநிலம், சகரன்பூர் மாவட்டம், சப்பிர்பூரில் நடைபெற்றுள்ள தலித்துகள் மீதான தாக்குதல்கள் என்பது, எப்போதெல்லாம் தலித்துகள் தங்கள் மனிதகுல கண்ணியத்தை உயர்த்திப் பிடித்திட வேண்டும் என்று முயற்சிக்கிறார்களோ அப்போதெல்லாம் சாதி வெறியர்களால் தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்படுவார்கள் என்பதற்கான சான்றாகும். தலித்துகள் தங்களுடைய சந்த் ரவிதாஸ் கோவிலில் அம்பேத்கரின் மார்பளவு சிலையை நிறுவிட விரும்பியதே, ஆதிக்க சாதியினருக்கு அவர்கள்மீது ஆத்திரத்தைக் கிளப்பியதற்கான காரணமாகும்.

2017 மே 5 அன்று உயர்சாதி தாக்கூர்கள் மகாராணா பிரதாப் சிலையை நிறுவுவதற்காக ஊர்வலமாகச் செல்லத் திட்ட மிட்டிருந்தபோது, அவர்கள் சப்பிர்பூர் வழியாக வருகையில் தலித்துகள் அவர்களிடம் மோசமாக நடந்து கொள்ளப் போவதாக ஒரு வதந்தி பரப்பப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஊர்வலத்தில் சென்றவர்கள் வாள்கள் ஏந்தி ஊர்வலமாகச் சென்று, தலித்துகளைத் தாக்கி இருக்கின்றனர், அவர்களின் வீடுகளுக்குத் தீ வைத்திருக்கின்றனர். தலித்துகளுக்கு எதிராக அட்டூழியங்கள் நடைபெறும் அத்தனை இடங்களிலும் இதேபோன்ற பாணி திரும்பத் திரும்பப் பின்பற்றப்படுகிறது. மற்றுமொரு கொடுமையான நிகழ்வு என்பது உனா என்னுமிடத்தில் பசுப் பாதுகாப்புக் குழுவினர் என்ற பெயரில் மதவெறியர்கள் மேற்கொண்ட அட்டூழியங்களாகும்.

இறந்த மாடுகளை அப்புறப்படுத்திய நான்கு தலித் இளைஞர்களை அவர்கள் போலீசாரின் தடியால் தெருவில் அடித்தே இழுத்துச் சென்றனர். இதற்கு போலீசாரும் உடந்தையாக இருந்திருக்கிறார்கள். ஒவ்வோராண்டும் நாட்டில் நடைபெற்ற குற்றங்கள் குறித்து ஓர் அறிக்கை உள்துறை அமைச்சகத்தால் தரப்படுகிறது. தலித்துகளுக்கு எதிரான அட்டூழியங்கள் அதிகரித்திருக்கின்றன என்று ஊடகங்கள் செய்திகள் வெளியிட்டு வரும் அதே சமயத்தில், தலித்/பழங்குடியினர் (வன்கொடுமை தடைச்) சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளோ குறைந்திருப்பதையும் பார்க்க முடிகிறது. இந்தச் சட்டத்தின்கீழ் 2013ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டிருந்த வழக்குகள் 13,975 ஆகும். ஆனால் இது 2015இல் 6,005ஆக குறைந்திருக்கிறது.

அதாவது 133 சதவீதம். தலித்துகளுக்கு எதிராக அநேகமாக இதர குற்றங்கள் அனைத்துமே அதிகரித்திருப்பாக தரவுகள் காட்டுகின்றன. இதற்கு, தலித்/பழங்குடியினர் (வன்கொடுமை தடைச்) சட்டத்தின்கீழ் வழக்குகளைப் பதிவு செய்வதைத் தவிர்த்திடுமாறு காவல்துறையினருக்கு அறிவுறுத்தப்பட்டிருப்பதே காரணம் என்று தெரியவருகிறது. இப்படி இல்லை என்றால், தலித்துகளுக்கு எதிராக இதர குற்றங்களின்கீழ் வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருப்பது அதிகரித்திருக்கும்போது, 2014க்குப் பின் வன்கொடுமைத் தடைச் சட்டத்தின்கீழ் மட்டும் வழக்குகள் திடீரென்று எப்படிக் குறைவாக இருந்திடும்?

**2011-2015க்கு இடையே**
**தலித்துகள் மீதான குற்ற நிகழ்வுகள்:**

தலித்துகள் மேம்பாடு குறித்து தம்பட்டம் அடித்திடும் பாஜக அரசாங்கம் அரசுத்துறைகளில் காலியாகவுள்ள தலித்துகளுக்கான இடங்களை நிரப்பிட உருப்படியான கொள்கை எதையும் கொண்டு வரவில்லை. காலியாகவுள்ள தலித்/பழங்குடியினர் பணியிடங்களை நிரப்பிட, 2008ஆம் ஆண்டில்தான் கடைசியாக சிறப்புத் தேர்வு நடைபெற்றது. **– இரா**

**ஊழல் அதிகார முறைகேடுகளை வெளிச்சத்துக்குக் கொண்டு வருவதற்கு மிகப் பெரும் ஆயுதமாகத் திகழ்வது 2005ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட தகவல் பெறும் உரிமைச் சட்டம். இந்தத் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை சீர்குலைக்கும் அத்தனை முயற்சிகளிலும் கடந்த 5 ஆண்டு மோடி ஆட்சி செயல்பட்டிருக்கிறது.**




# ஆட்சியை நடுங்க வைத்த 'ஆர்.டி.அய்.' சட்டம்

- ஒரு கல்லூரியில் பட்டப் படிப்பு 3 ஆண்டு படித்தால் எவரும் பட்டம் பெறலாம். எத்தனை பேர் இப்படிப் பட்டம் பெற்றார்கள் என்ற தகவல் - தகவல்கள் அறியும் உரிமைச் சட்டம் வருவதற்கு முன்பே எளிதாகக் கிடைத்துதான் வந்தது. ஆனால் மோடி பிரதமரான பிறகு ஓர் அதிசயம் நடந்தது; அது என்ன தெரியுமா?
- 1978ஆம் ஆண்டு டெல்லி பல்கலைக் கழகத்தில் 3 ஆண்டு பட்டப் படிப்பை முடித்து பட்டம் பெற்றதாக மோடி நாடாளுமன்றத்தில் போட்டியிடுவதற்கான வேட்பு மனுவில் குறிப்பிட்டிருந்தார். அவர் 1978இல் பட்டம் வாங்கியது உண்மையா? என்பதை அறிய அந்த ஆண்டு டெல்லி பல்கலையில் பட்டம் வாங்கியவர்கள் விவரங்களை குறித்த தகவல் பெறும் உரிமைச் சட்டத்தில் ஒருவர் கேட்டார். தகவல் ஆணையம் தகவல் தர மறுக்கவே, தகவல் கேட்டவர் மேல்முறையீடு செய்தார். தகவல் ஆணையர் தகவல் தர உத்தரவிட்டார். தகவல் தெரிவிக்க முடியாது என்று டெல்லி பல்கலைக் கழக நிர்வாகம், டெல்லி உயர்நீதிமன்றத்தில் தகவல் ஆணையருக்கு எதிராக வழக்கு தொடர்ந்தது. வழக்கில் வாதாட மூத்த வழக்கறிஞர்கள் அரசு செலவில் நியமிக்கப் பட்டனர். டெல்லி பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றவர்கள் பற்றிய விவரங்களை வெளியிடத் தேவையில்லை என்று தகவல் பெறும் உரிமைச் சட்டத்திலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது. மோடி உண்மையில் பட்டம் வாங்கினாரா என்ற தகவல் வெளிப்படுத்த முடியாத நாட்டின் இரகசியமாக்கப் பட்டது.
- மோடி பிரதமரானவுடன் தலைமை தகவல் அதிகாரி பதவி காலியாக இருந்தது. அந்தப் பதவிக்கு அதிகாரியை நியமிக்காமல் மோடி ஆட்சி கிடப்பில் போட்டது. டெல்லி உயர்நீதிமன்றமும் உச்சநீதிமன்றமும் தலையிட்டு உத்தரவிட்ட பிறகே 10 மாத இடைவெளிக்குப் பிறகு தலைமை ஆணையாளர் நியமிக்கப் பட்டார். அந்த 10 மாத காலமும் மேல்முறையீட்டுக்கு வந்த அந்த விண்ணப்பங்களும் கிடப்பிலேயே போடப்பட்டன. தகவல் பெறும் ஆணையத்தில் பதவிகள் காலியான போதெல்லாம் நீதிமன்றங்கள் தலையீட்டுக்குப் பிறகே மோடி ஆட்சி அதிகாரிகளை நியமித்தது குறிப்பிடத்தக்கது. பல மாநிலங்களில் தகவல் ஆணையர் பதவிகள் நிரப்படுவதே இல்லை. 2016ஆம் ஆண்டு காலியான பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கேட்டு விளம்பரம் தந்தார்கள். அவ்வளவுதான்; பதவிகளை நிரப்பும் முயற்சிகள் ஏதும் எடுக்கப்படவில்லை.
- தகவல் கேட்டு விண்ணப்பித்தவர் இறந்து விட்டால் தகவல் தர வேண்டிய அவசியமில்லை என்று 2017இல் ஒரு திருத்தம் கொண்டு வந்தது மோடி ஆட்சி. இதனால் தகவல் வெளிவந்துவிடக் கூடாது என்று நினைக்கும் மோசடிப் பேர் வழிகள், தகவல் கேட்போரை தீர்த்துக் கட்டத் தொடங்கினர்.
- தகவல் கேட்டு மேல் முறையீடு செய்தவர்கள், விரும்பினால் முறையீட்டைத் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம் என்று மோடி ஆட்சி சட்டத்தில் ஒரு திருத்தம் கொண்டு வந்தது. இதனால் மேல்முறையீடு செய்தவர்களை மிரட்டி இலஞ்சம் கொடுத்து, விண்ணப்பத்தைத் திரும்பப் பெற வைக்கும் முயற்சிகள் தொடங்கின.
- தலைமை தகவல் ஆணையர், உச்சநீதிமன்ற தலைமை நீதிபதிக்கு இணையாகக் கருதப்பட்டு தலைமை நீதிபதிக்கு உரிய ஊதியம் நிர்ணயிக்கப்

பட்டிருந்தது. மோடி ஆட்சி, அமைச்சரவையைக் கூட்டி விவாதிக்காமலே தலைமை தகவல் ஆணையரின் ஊதியத்தைக் குறைத்தது.

- ஆணையம், அனைத்து தகவலையும் 'டிஜிட்டல்' மயமாக்கியது. ஒளிவு மறைவின்றி எல்லா தகவல்களையும் கணினியைப் பயன்படுத்தி பார்க்கலாம்; இதைத் தடுப்பதற்காக 'அட்மின் லாக் இன்' என்ற முறையைக் கொண்டு வந்து தகவல்களை பதிவிறக்கம் செய்ய முடியாமல் மோடி ஆட்சி தடுத்து விட்டது.

- தகவல் பெறும் உரிமை சட்டத்தைப் பயன்படுத்தி ஊழல் முறைகேடுகளை அம்பலப்படுத்தி வந்த சமூக செயல்பாட்டாளர்கள் 70 பேர் வரை கொலை செய்யப்பட்டார்கள். இந்த அச்சுறுத்தலைத் தடுக்க முந்தைய காங்கிரஸ் தலைமையிலான 15ஆவது நாடாளுமன்றம், 2014 மே மாதத்தில் தகவல் பெறுவோர் பாதுகாப்புச் சட்டம் ஒன்றை நாடாளுமன்றத்தில் கொண்டு வந்தது. அதற்கு குடியரசுத் தலைவர் ஒப்புதலும் கிடைத்தது. தொடர்ந்து ஆட்சிக்கு வந்த மோடி ஆட்சி சட்டத்தை இதுவரை கெசட்டில் வெளியிடவில்லை. நடைமுறைக்கு வராத சட்டமாக மோடி ஆட்சி மாற்றி விட்டது. கடைசியாக 2018ஆம் ஆண்டு மே மாதம் ஒரு தகவல் பெறும் சமூக செயல்பாட்டாளர் படு கொலை செய்யப்பட்டார். நிறைவேற்றப்பட்ட சட்டத்தை முடக்கிய மோடி ஆட்சி பிறகு அந்த சட்டத்தை பலவீனமாக்க மேலும் பல திருத்தங்களைக் கொண்டு வந்து, அதை பொது மக்கள் விவாதத்துக்குக் கொண்டு வராமலேயே மூடி மறைத்து மே 11, 2015இல் நாடாளுமன்றத்தில் திருத்தப்பட்ட மசோதாவை திடீரென்று அறிமுகப்படுத்தியது.

- மோடி ஆட்சி ஊழல் எதிர்ப்புப் பற்றி வாய் கிழியப் பேசுகிறது. ஆனால் தேர்ந்தெடுக் கப்பட்ட பிரதிநிதிகள் - அரசு அதிகாரிகள் - அமைச்சர்கள் - பிரதமர் உள்ளிட்ட எவர் மீதும் ஊழல் புகார் கூறவும் அதை விசாரிக்கவும் லோக்பால் - லோக் அயுக்தா என்ற இரண்டு ஊழல் விசாரணை அமைப்புகள், முந்தைய அய்க்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சி உருவாக்கி 2013 டிசம்பரில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. 2014 ஜனவரி முதல் தேதி சட்டம் கெசட் மூலம் அறிவிக்கப்பட்டது. சட்டம் அமுலுக்கு வந்து நான்கு ஆண்டுகளுக்குப் பிறகும் ஒரு 'லோக்பால்' ஊழல் விசாரணை அமைப்பைக் கூட மோடி ஆட்சி அமைக்கவில்லை. லோக்பால் சட்டப்படி இதில் நியமிக்கப்படும் விசாரணை அதிகாரிகள் ஆளும் கட்சிக்காரராக இருக்க முடியாது. பிரதமர், சபாநாயகர், எதிர்கட்சித் தலைவர், உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் பிரபல சட்ட நிபுணர் ஆகியோரைக் கொண்ட குழு தான் தேர்வு செய்ய வேண்டும். ஆனால் தேர்வுக் குழுவை மோடி ஆட்சி அமைக்கவே இல்லை. உச்சநீதிமன்றம் தலையிட்டு உடனடியாக 'லோக்பால்' அமைப்பை உருவாக்க உத்தரவிட்டும் மோடி ஆட்சி கண்டுகொள்ளவில்லை. அரசியல் தலைவர்கள், காபினட் அமைச்சர்கள் மீது ஏராளமான ஊழல் புகார்கள் குவிந்து வருகின்றன. லோக்பால் அமைப்பிடம் இந்த புகார்கள் வந்திருந்தால் அது குறித்த விசாரணைகள் நடந்திருக்கும். அந்த வாய்ப்புக் கதவுகளை இழுத்து மூடிவிட்ட மோடி ஆட்சி, இந்த ஊழல் புகார்களை வெளியிடும் ஊடகங்கள் மீது 'அவதூறு' வழக்குகளைத் தொடர்ந்து அச்சுறுத்துகிறது. ரபேல் விமான பேரத்தில் நடந்த முறைகேடுகளை பாரதி பதிப்பகம் ஒரு நூலாக வெளியிடுவதற்குக்கூட தமிழகத்தில் பறக்கும் படையைப் பயன்படுத்தி தடைவிதித்து நூல்களை பறிமுதல் செய்தார்கள். பிறகு தேர்தல் ஆணையம் தலையிட்டு பறிமுதல் செய்த நூல்களை திருப்பித் தர உத்தரவிட்டது. 'கொட நாடு' கொலைகள் பற்றி எதிர்க்கட்சித் தலைவர் ஸ்டாலின் பேசுவதற்கு தடைபோடக் கூறி தமிழக அரசு நீதிமன்றம் போகிறது. இது தமிழக அரசு நடவடிக்கை என்றால் ஊழல் இல்லாத ஆட்சியை நடத்துவதாக முழங்கும் மோடி 'லோக்பால்' அமைப்பை அமைக்க அஞ்சுகிறது?

- 2011ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டது. ஒவ்வொரு குடிமகனுக்கும் தனக்குக் கிடைக்க வேண்டிய சேவை திட்டங்களின் பயன் கிடைக்காவிட்டால் ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் அதைக் கோரிப் பெறுவதற்கு வழி வகுக்கும் சட்டம். பஞ்சாயத்து நகரசபைகளில் பிரச்சினைகளை ஒரு குறிப்பிட்ட காலத்துக்குள் தீர்த்து வைக்கும் அதிகாரி நியமிக்கப்படுவார். குறைகள் தீர்க்கப் படாவிட்டால் பாதிக்கப்பட்டவர் இழப்பீடு கேட்கவும் அதிகாரிகளைத் தண்டிக்கவும் இந்தச் சட்டத்தில் இடம் உண்டு. 15ஆவது நாடாளு மன்றம் முடிவுக்கு வந்ததால் இந்த மசோதா சட்டமாகவில்லை. பா.ஜ.க. மீண்டும் ஆட்சிக்கு வந்தால் இதை சட்டமாக்கியே தீருவோம் என்று அப்போது பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினர் களும், மாநிலங்களவை உறுப்பினர்களாக இருந்த அருண்ஜெட்லி, ரவிசங்கர், பிரசாத் போன் றோரும் உறுதி கூறினர். பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தது. ஆனால் சட்டம் அப்படியே கிடப்பில் போடப்பட்டுவிட்டது.

**– இரா**

மாநிலங்களவையில் பா.ஜ.க. வுக்கு போதுமான எண்ணிக்கை பலம் இல்லை என்பதால் மாநிலங்களவையையே புறக்கணிக்கும் செயல்பாடுகளை மோடி ஆட்சி அரங்கேற்றியது. கடந்த 2017 பிப்ரவரி மாதம் நாடாளுமன்றத்தில் நிதியமைச்சர் அருண் ஜெட்லி தாக்கல் செய்த நிதிநிலை அறிக்கைக்கு நாடாளுமன்றத்தில் ஏற்பு வாங்கப்பட்டபோது, கடைசி நேரத்தில் 40 திருத்தங்களைக் கொண்டு வந்து நிறைவேற்றி விட்டார்கள். இந்த திருத்தங்களை மாநிலங்களவைக்கே கொண்டு செல்லவில்லை. நிதி தொடர்பான மசோதாக்களுக்கு நாடாளுமன்றத்தின் ஒப்புதல் மட்டுமே போதுமானது என்ற சட்டம் தந்துள்ள வாய்ப்பை இப்படி குறுக்கு வழியில் முறைகேடாகப் பயன்படுத்தியிருக்கிறது மோடி ஆட்சி.

# கார்ப்பரேட் நிறுவனங்களைக் காப்பாற்றக் குறுக்கு வழியை கண்டுபிடித்த **மோடி ஆட்சி**

இந்த திருத்தங்களில் ஒன்று - வருமான வரித்துறை அதிகாரிகளுக்கு வழங்கப்படும் எல்லை மீறிய அதிகாரங்களாகும். நடுவண் ஆட்சி, அரசியல் எதிரிகளை ஒழிப்பதற்குப் பயன்படுத்தும் வலிமையான அதிகார அமைப்புகளில் ஒன்று வருமான வரித் துறை. புதிய திருத்தத்தின்படி, இனி வருமான வரித் துறை அதிகாரிகள், தேவையான ஆதாரங்கள், தடயங்கள் இல்லாமல், சந்தேகத்தின் அடிப்படையிலேயே சோதனையிடவும், சொத்துகளைப் பறிமுதல் செய்யவும் உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. சோதனையிடப்படுவதற்கான காரணங்களை மேல்முறையீட்டு தீர்ப்பாயம் உள்ளிட்ட எந்த அமைப்புக்கும் அதிகாரிகள் தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை. பார்ப்பன அதிகார மய்யமாக திகழும் வருமானவரித் துறையை ‘ஒரு இராணுவ சர்வாதிகாரி’ போல செயல்படுவதற்கான அதிகார அமைப்பாக்கிவிட்டார்கள். அந்த அதிகாரம்தான் இப்போது எதிர்கட்சிகளை அச்சுறுத்தப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

மோடி குஜராத் முதல்வராக இருந்தபோது ‘சகாரா’, ‘ஆதித்யா பிர்லா’ குடும்பங்களில் வருமான வரித்துறை நடத்திய சோதனைகளில் மோடிக்கு நன்கொடை தந்ததற்கான ஆவணங்கள் கைப்பற்றப்பட்டு, அந்த ஆதாரங்கள் வருமான வரித்துறையின் பதிவேடுகளிலேயே இடம் பெற்றிருந்ததை சுட்டிக்காட்டி நடவடிக்கைக் கோரி உச்சநீதிமன்ற வழக்கறிஞர் பிரசாந்த் பூஷன் ஆதாரங்களோடு வழக்கு தொடர்ந்தார். மோடி மீது நடவடிக்கை எடுக்காமல் இருந்ததற்காகவே, வருமான வரித் துறை அதிகாரியாக இருந்த கே.பி. சவுத்திரி என்பவருக்கு, இலஞ்ச ஒழிப்புத் துறைத் தலைவர் என்ற உயர்ந்த பதவி பரிசாக அளிக்கப் பட்டதையும் பிரசாந்த் பூஷன் சுட்டிக் காட்டியிருந்தார்.

மற்றொரு முக்கிய திருத்தமும் கொண்டு வரப்பட்டது. கார்ப்பரேட் கம்பெனிகள் இனி அரசியல் கட்சிகளுக்கு நன்கொடைகளை வழங்குவதற்கு உச்சவரம்பு எதுவும் கிடையாது என்பதே இந்த புதிய திருத்தம். தற்போதுள்ள சட்டத்தின்படி ஒரு கார்ப்பரேட் நிறுவனம் தனது நிகர இலாபத்தில் 7.5. சதவீத அளவில் மட்டுமே அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை வழங்க முடியும். அது மட்டுமின்றி வழங்கப்பட்ட தொகை, வழங்கிய கட்சிகளின் பெயர்களையும் அறிவித்தாக வேண்டும். இப்போது வரம்பு நீக்கப்பட்டதோடு வழங்கிய கட்சிகளின் பெயர்களையும் வெளியிடத் தேவை இல்லை என்கிறது புதிய திருத்தம். ஏற்கெனவே அரசியல் கட்சிகள் கார்ப்பரேட் நிறுவனங்களின் பிடிக்குள் வந்துவிட்டன. கார்ப்பரேட் நிறுவனங்களோ பார்ப்பன அதிகார வர்க்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்றன. அதை மேலும் உறுதிப்படுத்தி யிருக்கிறது மோடி ஆட்சி. தமிழ் நாட்டில் ஆர்.கே. நகர் தொகுதியில் கோடி கோடியாக பணம் புரண்டதற்கான காரணங்களில் ஒன்று, கார்ப்பரேட் கம்பெனிகளிடமிருந்து பெற்ற இலஞ்சம். ஸ்டேட் வங்கி மூலம் பத்திரங்கள் வழியாக நன்கொடை வழங்கலாம் எனும் இத்திட்டத்தின் கீழ் வெளிநாட்டு நிறுவனங்கள் தொழிலதிபர்கள் - 1000 கோடி மதிப்பிலான பத்திரத்தை பா.ஜ.க.வுக்கு வழங்கியிருப்பது ஆர்.டி.அய். மூலம் வெளி வந்திருக்கிறது. இலஞ்சத்துக்கு கதவு திறந்துவிடும் பா.ஜ.க.வுக்கு அரசியல் ஊழல்களைப் பற்றிப் பேச என்ன தார்மீக உரிமை இருக்கிறது என்று கேட்கிறோம்.

**ஒரு கார்ப்பரேட் நிறுவனம் தனது நிகர இலாபத்தில் 7.5. சதவீத அளவில் மட்டுமே அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை வழங்க முடியும். இப்போது வரம்பு நீக்கப்பட்டதோடு வழங்கிய கட்சிகளின் பெயர்களையும் வெளியிடத் தேவை இல்லை என்கிறது புதிய திருத்தம். ஏற்கெனவே அரசியல் கட்சிகள் கார்ப்பரேட் நிறுவனங்களின் பிடிக்குள் வந்துவிட்டன.**

மற்றொரு திருத்தம் - தீர்ப்பாயங்களை முடக்கியிருப்பதாகும். இந்தத் தீர்ப்பாயங்கள் நீதித் துறைக்குரிய அதிகாரங்களுடன் செயல் படக்கூடிய அமைப்புகள். அரசின் தலையீடு களுக்கு இதில் இடமில்லை. நீதிமன்ற ஆணைப்படி உருவாக்கப்பட்ட தீர்ப்பாயங் களும் உண்டு. தீர்ப்பாயங்களுக்கு தலைவர்கள், உறுப்பினர்கள், அரசு நிர்வாக அமைப்பு களுக்கு அப்பாற் பட்டவர்கள் என்று உச்சநீதிமன்றம் 2014இல் திட்டவட்டமாக கூறியிருக்கிறது. ஆட்சியாளர்களையே சம்மன் செய்து விசாரிக்கும் உரிமை கொண்டவை. இப்போது தேவையில்லை என்று ஆட்சியாளர் விரும்புகிற தீர்ப்பாயங்களை கலைக்கவும், சில தீர்ப்பாயங்களின் தனித்துவமான உரிமைகளைப் பறித்து, வேறு சிலவற்றுடன் இணைக்கவும் சட்டத்தைத் திருத்தியிருக்கிறார்கள்.

வரி, அரசு வாங்கும் கடன், அரசு செல வினங்கள், கடன் பத்திரங்கள் போன்ற அம்சங்கள் மட்டுமே நிதி மசோதாவின் கீழ் வரக்கூடியவை. மோடி ஆட்சி, வருமான வரித் துறை, கார்ப்பரேட் கம்பெனிகள் சட்டம், தீர்ப்பாயங்கள் போன்றவற்றையும் நிதி மசோதாவுடன் இணைத்து மாநிலங்களவை விவாதத்துக்கு உட்படுத்தாமல் 40 திருத்தங்களை செய்திருப்பது மிகப் பெரும் ஜனநாயகப் படுகொலை.

மாநிலங்களின் உரிமைகளை பறிப்பது மட்டுமின்றி, மாநிலங்களின் அவையையும் முடக்கி விட்டார்கள். ஒற்றை ஆட்சி ஒற்றை கலாச்சாரம் எனும் இந்துத்துவா ஆயுதத்தை மக்களுக்கு எதிராக கூர் தீட்டி வருகிறது மோடி ஆட்சி.

- 'எக்னாமிக் அண்ட் பொலிட்டிக்கல் வீக்லி' கட்டுரைத் தழுவல்

அறிவியலுக்கு எதிராக பிரதமர் மோடியிலிருந்து அவரது அமைச்சர்கள் சகாக்கள் வரை உளறிக் கொட்டிய நகைச்சுவை வெடிகள் நாட்டுக்கே தலைகுனிவை ஏற்படுத்தின. அறிவியலாளர்கள் அதிர்ந்து போனார்கள். அரசு அமைப்பான 'சயின்ஸ் காங்கிரஸ்' மாநாட் டிலேயே பேசப்பட்ட இந்த உளறல்களைக் கண்டு ஆத்திரமடைந்த நோபல் பரிசு பெற்ற தமிழ்நாட்டைச் சார்ந்த விஞ்ஞானி வெங்கட்ராமன் இராமகிருஷ்ணன், இனி இத்தகைய மாநாட்டில் பங்கேற்கவே போவதில்லை. சயின்ஸ் காங்கிரசில் சர்க்கஸ் காட்டுகிறார்கள் என்று கூறினார்.

# சயின்ஸ் காங்கிரசா? சர்க்கஸ் கூடாரமா?

- பம்பாயில் கூடிய 'அறிவியல் காங்கிரஸ்' மாநாட்டில் பேசிய மோடி வேத காலத்திலே பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை நம்மிடமிருந்தது. அதற்கு சான்று விநாயகன். மனித உடலோடு யானைத் தலையை ஒட்ட வைத்து நடந்த சிகிச்சை அது என்றார். உலகம் முழுதும் பல பத்திரிகைகள் மோடியை கேலி செய்து கட்டுரைகளையும் கார்ட்டூன்களையும் வெளியிட்டன.
- வேத காலத்திலே கண்டம் விட்டு கண்டம் பாயும் போர் விமானங்கள் நம்மிடம் இருந்தன. இராவணன் 38 விமானத் தளங்களை வைத்திருந்தான். கவுரவர்கள் சோதனைக் குழாய் குழந்தைகளாக பிறந்தவர்கள் என்று விஞ்ஞான காங்கிரஸ் மாநாட்டில் ஆய்வு அறிக்கைகளை சமர்ப்பித்தார்கள்.
- சத்யபால் சிங் என்ற மத்திய அமைச்சர், டார்வின் தத்துவம் பொய்; குரங்கிலிருந்து மனிதன் வந்தான் என்றால் மனிதன் குரங்காகியிருக்கிறானா? என்று கேட்டார். சிம்பன்சிக்கும் மனிதருக்கும் ஒரே மூதாதையர் என்ற அறிவியல் கோட்பாட்டை இப்படி அபத்தமாகப் புரிந்து கொண்டு தனது அறியாமையை வெளிப்படுத்தினார், அந்த அமைச்சர். கல்லூரி, பள்ளிப் பாட நூல்களில் டார்வினின் பரிணாம வளர்ச்சி கோட்பாட்டை நீக்க வேண்டும் என்றார் அவர். அமைச்சரின் கருத்தை இந்தியாவின் பல அறிவியல் அமைப்புகள் கண்டித்து அறிக்கை வெளியிட்டன.
- அமைச்சர்கள் என்ற அதிகாரத்தைப் பயன்படுத்தி அறிவியலுக்கு எதிராகப் பேசியதோடு அமைச்சர்கள் சாமியார்களோடு நெருங்கி

அவர்களை குருவாக்கிக் கொண்டார்கள். அறிவியல் ஆய்வுக்கான நிதி ஒதுக்கீடுகளும் கணிசமாக குறைக்கப்பட்டன.

- பசுவின் மூத்திரம் - பசுவின் சாணம் - அது தரும் பால் - அதிலிருந்து எடுக்கப்படும் தயிர், வெண்ணெய் ஆகிய பஞ்சகவ்யங்களில் அடங்கி யுள்ள நோய் தீர்க்கும் மூலப் பொருள்களை ஆய்வு செய்ய இந்திய அரசு 14 உறுப்பினர்களைக் கொண்ட கமிட்டி ஒன்றை அமைத்தது. இந்தக் கமிட்டிக்கு தொழில்நுட்பத் துறை அமைச்சர் ஹர்ஷவர்த்தன் தலைவர். இதில் ஆர்.எஸ்.எஸ். விசுவஇந்து பரிஷத் அமைப்பைச் சார்ந்தவர்களும் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டனர். இது குறித்து இந்திய தொழில்நுட்ப நிறுவனமான ‘அய்அய்டி’ யிடம் ஆய்வுக்கான திட்டங்களைத் தயாரிக்குமாறு பணிக்கப்பட்டது. இதற்காக அமைச்சகத்திலிருந்து ரூ.5000 கோடி நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டது.
- ஒய். சுதர்சனராவ் என்ற ஆர்.எஸ்.எஸ்.காரர், உரிய கல்வித் தகுதி ஏதும் இல்லாத நிலையில் இந்திய வரலாற்று ஆய்வு மய்யத்தின் தலைவராக நியமிக்கப்பட்டார். இலங்கைக்கும் தமிழ்நாட்டுக்கு மிடையே இராமன் கட்டிய பாலம் என்று கூறப்படும் பாலம், மனிதர்களால் கட்டப்பட்டதா அல்லது இயற்கையாகவே தோன்றியதா என்பது குறித்து தொல்லியல் ஆய்வு நடத்தப் போவதாக அறிவித்தார். அறிவியலாளர்கள் இந்த அறிவிப்பை எள்ளி நகையாடினர்.
- வேதத்திலே கூறப்படும் சரஸ்வதி நதி காணாமல் போய்விடவில்லை என்றும் இந்தியாவில் ஏதோ ஒரு பகுதிக்குள் அது ஓடிக் கொண்டிருக் கிறது என்பதற்கு அறிவியல் சான்றுகள் இருக்கின்றன என்றும் நீர்வளத்துறை அமைச்சரான உமாபாரதி கூறியதோடு இது குறித்து ஆய்வுக்கான திட்டம் ஒன்றை உருவாக்கி அதைத் தனது அமைச்சக இணையதளத்திலும் வெளியிட்டார்.
- இராமாயணத்தில் அனுமான் சஞ்சீவி மலையையே பெயர்த்து இலங்கைக்கு தூக்கிச் சென்றான் என்ற கதை வருகிறது. அந்த சஞ்சீவி மலையில் இருந்த மூலிகைதான் இராமனின் தம்பி இலட்சுமணனின் நோயைக் குணமாக்கியதாக வால்மீகி இராமாயணம் கூறுகிறது. உத்தரகாண்ட் மாநில பா.ஜ.க. ஆட்சியின் இந்திய மருத்துவத்துறை அமைச்சகம், அனுமான் தூக்கி வந்த மலையிலிருந்த மூலிகையை ஆராய்ச்சி செய்ய ஆயுர்வேத மருத்துவ நிபுணர் குழு ஒன்றை அமைத்து, 2016 ஆகஸ்ட்டில் முதல் கட்டமாக இந்த ஆராய்ச்சிக்கு ரூ.25 கோடி நிதியும் ஒதுக்கியது. 2008இல் பாபா ராம்தேவ் நடத்தும் ‘பதஞ்சலி’ வணிக நிறுவனம் அந்த மூலிகையைத் தாம் கண்டுபிடித்து விட்டதாக அறிவித்து அதை வேறு எவரும் பயன்படுத்தக் கூடாது என்று ‘பேடண்ட்’ உரிமை கேட்டது.
- அறிவியலுக்கு எதிரான ‘வாஸ்து சாஸ்திரத்தை’ கோரக்பூர் அய்.அய்.டி.யில் கட்டிடக் கலைப் பாடத்தில் ஒரு பாடப் பிரிவாக்கப்பட்டது. அதே நிறுவனத்தில் வானியல் மேல்பட்டப் படிப்பில் நவக்கிரக சுழற்சி பற்றிய பாடங்கள் சேர்க்கப் பட்டன.
- போலி அறிவியலை அறிவியலாக்கும் முயற்சிகளில் ஈடுபட்ட மோடி ஆட்சியில் பகுத்தறிவாளர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். மூடநம்பிக்கையை எதிர்த்து பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்த டாக்டர் தபோல்கர் 2013 ஆகஸ்ட் 20ஆம் நாள் சுட்டுக் கொல்லப்பட்டார்.
- மூடநம்பிக்கைகளை எதிர்த்த கோவிந்த் பன்சாரே 2015 பிப். 20இல் சுட்டுக் கொல்லப்பட்டார். அவரது மனைவி தாக்குதலுக்கு உள்ளானார்.
- கன்னட பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும், தீவிர மூடநம்பிக்கை எதிர்ப்பாளருமான எம்.எம். கல்புர்கி, அவரது வீட்டிற்குள்ளேயே 2015 ஆகஸ்ட் 30ஆம் தேதி சுட்டுக் கொல்லப்பட்டார். அவர் எழுதிய நூல் மற்றும் அவரது பகுத்தறிவுப் பேச்சுகளுக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்த விசுவ இந்து பரிஷத், பஜ்ரங்தள், இராம்சேனா போன்ற மதவெறி அமைப்புகள் தொடர்ந்து அவரை மிரட்டி வந்தன.
- பத்திரிகையாளரும் பகுத்தறிவாளரும் இந்துத்துவா எதிர்ப்பாளருமான கவுரி லங்கேஷ் பெங்களூரில் அவரது இல்லத்தில் 2017 செப்டம்பர் 5ஆம் தேதி சுட்டுக் கொல்லப்பட்டார்.
- கருத்துச் சுதந்திரத்துக்கு எதிராக நடத்தப்பட்ட இந்த மதவெறிப் படுகொலைகளை உலக நாடுகளிலிருந்து வெளி வரும் ஏடுகள் கண்டித்து எழுதின. “இந்துத்துவா மதக் கொள்கை இந்தியாவில் தீவிரம் பெற்று வருகிறது. இந்திய ஜனநாயகம் கேள்விக்குள்ளாகி வருகிறது” என்று உலகப் புகழ் பெற்ற ‘ஏசியா டைம்ஸ்’ பத்திரிகை 2015 அக்டோபரில் கண்டனம் தெரிவித்தது.

  இந்தப் படுகொலைகளைச் செய்தவர்கள் ‘சனாதன் சன்ஸ்தா’ என்ற பார்ப்பன பயங்கரவாத அமைப்பைச் சார்ந்தவர்கள் என்று புலன் விசாரணையில் கண்டறியப்பட்டது. ஆனாலும் ‘பயங்கரவாதம்’ பற்றி பேசி வரும் மோடி, அந்த அமைப்பை தடை செய்யவில்லை.
- பகவத்கீதை குறித்து விமர்சனம் செய்ததற்காக விஞ்ஞானியும் பகுத்தறிவாளருமான கே.எஸ். பகவானுக்கு கொலை மிரட்டல் கடிதங்கள் வந்தன. மூடநம்பிக்கைக்கு எதிராக அறிவியல் பிரச்சாரம் செய்த நரேந்திர நாயக் மீது கொலை முயற்சி நடந்தது. அவர் தப்பி விட்டார்.

இந்தப் பட்டியல் நீளும். **– இரா**

# வாழ்வாதாரத்தினை அழிக்கும் 'அய்ட்ரோ கார்பன்' திட்டம்

மீத்தேன் திட்ட செயல்பாட்டுக்கான அனுமதியை ரத்து செய்து விட்டதாக மத்திய அரசு கடந்த 2016ஆம் ஆண்டு அறிவித்தது. இதனால் காவிரி டெல்டாவில் போராட்டங்கள் அடங்கியிருந்தது. இந்நிலையில் புதுக்கோட்டை மாவட்டம், நெடுவாசலில் மீத்தேன், ஷேல் கேஸ் போன்ற இன்னொரு வடிவில் இயற்கை எரிவாயு எடுக்கும் புதிய திட்டத்தை மத்திய அரசு அறிவித்தது. இத்திட்டத்தின் பெயர் ஹைட்ரோ கார்பன் திட்டம் என சொல்லப்படுகிறது. இந்த திட்டத்தை செயல்படுத்தக் கூடாது என நெடுவாசல் பகுதியில் மக்கள் போராட்டத்தில் குதித்தனர். இந்த திட்டம் மீத்தேன் திட்டத்தின் மறு வடிவம் என்று சமூக ஆர்வலர்கள் கூறுகின்றனர்.

இப்போது மோடி அரசு அறிவித்துள்ள ஹைட்ரோ கார்பன் திட்டத்திற்கு முன்னர் திருவாரூர் மாவட்டம் மன்னார்குடியை மையப்படுத்தி 760 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் சுமார் 500 மீட்டர் ஆழத்தில் படிந்துள்ள மீத்தேன் மற்றும் ஷேல் கேஸ் எரிவாயுவை வெளிக்கொணரும் வகையில் காவிரிப் படுகையில் இந்த திட்டத்திற்கான ஒப்பந்தத்தை அளித்திருந்தது மத்திய அரசு. பொதுமக்களின் தொடர் எதிர்ப்பு காரணமாக மத்திய அரசு ரத்து செய்தது.

இதைத் தொடர்ந்து சுமார் 10 ஆயிரம் அடி ஆழத்தில் உள்ள பூமிப் பாறைகளின் இடுக்கில் உள்ள ஷேல் கேஸ் எனப்படும் பாறைப்படிம எரிவாயு எடுக்கும் திட்டத்திற்கு மத்திய அரசு உரிமம் வழங்கியது. இத்திட்டத்தை எதிர்த்து விவசாயிகள் சார்பில் வழக்கும் தொடரப்பட்ட நிலையில் அப்பணியை தொடர முடியாத நிலைக்கு தள்ளப்பட்டது. இந்த சூழ்நிலையில் கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயு உற்பத்தியை அதிகரிக்கவும், இந்த தொழிலில் முதலீடுகளை அதிக அளவில் கவரும் நோக்கத்துடன் கடந்த 10.03.2016 அன்று பிரதமர் நரேந்திர மோடி ஹைட்ரோ கார்பன் (Hydro Carbon Exploration and Licensing Policy – Help) என்ற கொள்கை திட்டத்தை அறிவித்தார். அதில் கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயு உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் ஏற்கனவே கடைபிடித்து வந்த விதிமுறைகளில் மாற்றங்கள் செய்யப்பட்டன. அதன்படி பூமிக்கு அடியில் எந்த வடிவத்தில் ஹைட்ரோ கார்பன் இருந்தாலும் அதனை வெளிக் கொணர ஒரே ஒரு உரிமம் பெற்றால் போதும் என்ற முக்கியத்துவம் வாய்ந்த சலுகை அதில் இடம் பெற்றுள்ளது.

இதன் மூலம் புதுக்கோட்டை மாவட்டம், நெடுவாசல் மற்றும் புதுச்சேரி பிரதேசம் காரைக்கால் போன்ற பகுதிகளில் ஹைட்ரோ கார்பன் எரிவாயு எடுக்கும் திட்டத்திற்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. இந்த பின்னணியில் பார்த்தால் ஏற்கனவே ரத்து செய்வதாக மத்திய அரசால் அறிவிக்கப்பட்டு நிலுவையில் உள்ள மீத்தேன் ஷேல் கேஸ் திட்டத்தையும் செயல்படுத்த இந்த நிறுவனமோ அல்லது இதைச் சார்ந்த நிறுவனங்களோ சமயம் பார்த்து நடவடிக்கை மேற்கொள்ள வாய்ப்பு ஏற்படலாம் என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. ஆயிரக் கணக்கான அடி ஆழத்தில் உள்ள தண்ணீரை வெளியேற்றி எடுக்கப்படும் மீத்தேன் ஷேல் கேஸ் திட்டங்களால் மக்களுக்கு ஏற்படும் நோய் பாதிப்புகள் உள்ளிட்ட அச்சத்தைப் போக்க மத்திய அரசு ஆக்கப் பூர்வமான எந்த நடவடிக்கையும் எடுக்க வில்லை. மாறாக ஹைட்ரோ கார்பனுக்கு என தனிக் கொள்கையை புகுத்தி நாடு முழுவதும் 31 இடங்களைத் தேர்ந்தெடுத்து அவற்றில் முதற்கட்டமாக நெடுவாசல் மற்றும் காரைக்கால் பகுதிகளில் திட்டத்திற்கு அனுமதி அளித்துள்ளதால் மக்கள் போராட்டங்கள் வலுத்தது.

புதுச்சேரி பிரதேசம், காரைக்காலில் இந்த திட்டத்தை அனுமதிக்க மாட்டோம் என்று புதுவை முதலமைச்சர் நாராயணசாமி பகிரங்கமாக அறிவித்துள்ளார். ஆனால் தமிழகத்தில் இப்போது வரை இப்படி ஒரு அறிவிப்பை வெளியிடத் தயாராக இல்லை. இத்திட்டத்திற்கு முழுமையாக பொது மக்களிடமோ, விவசாயிகளிடமோ கருத்து கேட்காமல் அனுமதிப்பதன் மூலம் ஏற்கனவே உள்ள மீத்தேன் ஷேல் கேஸ் திட்டங்களை கொல்லைப்புற வழியாக நிறைவேற்ற மத்திய அரசு முயற்சித்து வருகிறது. எந்த ஒரு வளர்ச்சித் திட்டமும் பொது மக்களின் வாழ்வாதாரங்களைப் பாதிக்காத வகையில் நிறைவேற்றப்பட வேண்டும்.

மக்களின் நீண்ட கால வாழ்வு மற்றும் ஆரோக்கியமான மேம்பாட்டிற்கு ஏற்ற வகையில் திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும். வெறும் வியாபார நோக்கத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டதாக இல்லாமல் தங்களைச் சுற்றியுள்ள இயற்கை வளங்களை மக்கள் அனுபவிக்கும் உரிமையில் கைவைக்காமல் இருக்க வேண்டும். மக்களின் எதிர்ப்புகளையும் மீறி இந்த திட்டம் தொடரப்படுமேயானால் இன்றைய தலைமுறைகளின் உரிமைகள் மட்டுமல்ல; எதிர்கால தலைமுறைகளின் உரிமைகளும் பறிக்கப்பட்டு இயற்கை நீதிக்கு புறம்பானதாக ஆகிவிடும். நெடுவாசல், காரைக்கால் பகுதி மக்கள் மட்டுமல்ல; தமிழக மக்கள் மற்றும் விவசாயிகளின் நலன் கருதி ஹைட்ரோ கார்பன் இயற்கை எரிவாயு எடுக்கும் திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளதை திரும்பப் பெற வேண்டும். ஒட்டுமொத்த மக்களின் எதிர்பார்ப்பு ஹைட்ரோ கார்பன் திட்டம் கூடாது என்பதுதான்.

மோடி ஆட்சி நீடித்தால் இந்த ஆபத்துகள் தொடரவே செய்யும்.

*இஸ்லாமியர்களுக்கு எதிராக வெறுப்பை விதைக்கும் மோடி அமைச்சர்களின் விஷம் கக்கும் பேச்சுகளின் ஒரு தொகுப்பு.*

**மகேஷ் ஷர்மா**

*2015ஆம் ஆண்டில், இந்தியா டுடே தொலைக் காட்சியுடனான ஒரு நேர்காணலின் போது, மத்திய கலாச்சார அமைச்சர் மகேஷ் ஷர்மா, முன்னாள் குடியரசுத் தலைவர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் பற்றிப் பேசும்போது, "முஸ்லிமாக இருந்தபோதும்" அவர் ஒரு "சிறந்த மனிதர்" என்றும், "தேசியவாதி" என்றும், "மனித நேயமுள்ளவர்" என்றும் சொன்னார்.*

# மத்திய அமைச்சர்களின் வெறுப்புப் பேச்சுகள்

*அப்பட்டமான இந்த இனவாதக் கருத்தைச் சொன்னபோதும் அதுவும் இந்தியா மிகவும் நேசிக்கும் முன்னாள் குடியரசுத் தலைவர்களில் ஒருவருக்கு எதிராகச் சொன்னபோதும் பதவி நீக்கம் செய்யப் படுவது இருக்கட்டும், அரசில் இடம்பெற்றுள்ள மூத்த தலைவர்களால் அவர் கண்டிக்கப்படக்கூட இல்லை.*

**அனந்த் குமார் ஹெக்டே**

*2016ஆம் ஆண்டில், திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோருக்கான மத்திய அமைச்சர், அனந்த் குமார் ஹெக்டே, "உலகில் இஸ்லாம் இருக்கும் வரையில், தீவிரவாதம் இருக்கும். இஸ்லாம் மதத்தை ஒழிக்கும் வரையில், நம்மால் தீவிரவாதத்தை அழிக்க முடியாது" என்று சொன்னார். மேலும், "இஸ்லாம், உலக அமைதிக்கு எதிரான வெடிகுண்டு" என்றும் சொன்னார்.*

*ஐந்து முறை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த இவர் இதைச் சொன்ன சில காலத்தில், கர்நாடக மாநிலத் தேர்தலையொட்டி, மத்திய அமைச்சரவையில் கர்நாடக மாநிலத்தின் பிரதிநிதித்துவத்தை அதிகப் படுத்தும் முயற்சியில், மத்திய அமைச்சராக நியமிக்கப்பட்டார்.*

*ஹெக்டேவின் சர்ச்சைக்குரிய பேச்சுக்கள் இதோடு நிற்கவில்லை. கர்நாடகாவின் குடகு மாவட்டத்தில் இந்தாண்டு நடைபெற்ற இந்து ஜக்ரானா வேதிக் அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட விழாவில், "ஒரு இந்துப் பெண்ணைத் தொடும் கைகள் இருக்கக் கூடாது" என்று சொன்னார்.*

*2017ஆம் ஆண்டில், பாஜக அரசாங்கம் ஆட்சியில் இருப்பது "அரசியலமைப்பை மாற்றுவதற்காக" என்றும், அப்போதுதான் அதிலிருந்து 'மதச்சார்பற்ற' என்ற சொல்லை நீக்க முடியும் என்றும் சொன்ன போது, ஹெக்டே மீண்டும் ஒரு சர்ச்சைக்குள் சிக்கினார்.*

**2017 டிசம்பரில், வெறுப்புப் பேச்சு பேசியதற்காக பாஜக அமைச்சர் ஷோபா கரண்ட்லஜே மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது.**

**சாத்வி நிரஞ்சன்**

*உணவு பதப்படுத்துதல் தொழில்துறை மத்திய அமைச்சர், சாத்வி நிரஞ்சன், டிசம்பர் 2014இல் நடந்த டெல்லி சட்டசபை தேர்தலின் பிரச்சாரத்தைத் தொடங்கிவைத்தபோது, வாக்காளர்கள் தங்களுக்கு 'ராம் சாதான்' (ராமரின் வழித்தோன்றல்கள்) வேண்டுமா, 'ஹராம் சாதான்' (சட்ட விரோதமாகப் பிறந்தவர்கள்) வேண்டுமா என்பதைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று சொன்னார்.*

*மேற்கு டெல்லியின் ஷ்யாம் நகர் பகுதியில்தான் இந்தப் பேரணி நடந்தது. "ராமருக்குப் பிறந்தவர்களின் ஆட்சி வேண்டுமா, சட்ட விரோதமாகப் பிறந்தவர்களின் ஆட்சி வேண்டுமா என்பதை நீங்கள்தான் தீர்மானிக்க வேண்டும்" என்று அவர் சொன்னார்.*

*இந்தப் பேச்சுக்கு எதிராகப் பலத்த எதிர்ப்பு கிளம்பிய நிலையில், அவர் அப்படிப் பேசியிருக்கக் கூடாது என்று மோடி நாடாளுமன்றத்தில் ஒப்புக்கொண்டார். ஆனாலும், அவருக்கு எதிராக எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.*

**கிரிராஜ் சிங்**

*மத்திய அரசின் சிறு, குறு, நடுத்தரத் தொழில் துறைகள் அமைச்சரான கிரிராஜ் சிங், ஜார்க்கண்ட் மாநிலத்தில் தேவ்கர் மாவட்டத்தில், 2014, ஏப்ரல் 19 அன்று நடந்த தேர்தல் கூட்டத்தில், நரேந்திர மோடியை எதிர்ப்பவர்கள் எல்லோரும் பாகிஸ்தானுக்குச் செல்ல வேண்டும் என்று சொன்ன தற்காக, உள்ளூர் நீதிமன்றத்தால் கண்டிக்கப்பட்டார்.*

*அவருக்கு எதிராக ஒரு எஃப்.ஐ.ஆர். போடப்பட்டது. பிறகு, ஜாமீனில் வெளியில் வந்தார்.*

*2016ஆம் ஆண்டில், முஸ்லிம்கள் அதிக குழந்தைகள் பெற்றுக் கொள்கின்றனர் வகுப்புவாத அரசியல்வாதி களின் வழக்கமான வாதம் இது என்று குற்றம் சாட்டி, வெறுப்பை உருவாக்கும் வகையில் பேசினார்.*

**சாதனா சிங்**

பாஜக அமைச்சர் சாதனா சிங், எதிர்க்கட்சித் தலைவரான மாயாவதியைப் பற்றி இந்த ஆண்டு பேசினார். அவர் (மாயாவதி) "பெண் இனத்திற்கே களங்கம்" என்றும், "திருநங்கைகளைவிட மோச மானவர்" என்றும் சொன்னார்.

அதன் பிறகு, தான் பேசியதற்கு மன்னிப்பு கோரி அறிக்கை வெளியிட்டார்.

**அனுப்ரியா பட்டேல்**

மோடியின் சபையில் இருக்கும் இளைய மந்திரிகளில் ஒருவரான, மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலன் துறையின் அமைச்சர் அனுப்ரியா பட்டேல், தன்னுடைய ட்விட்டரில் சர்ச்சைக்குரிய, வெறுப்பை உருவாக்கும் வாக்குமூலங்களை வெளியிட்டதற்காகச் சர்ச்சையில் சிக்கினார்:

"நம்முடைய துரோகிகளே நம்மை நாசமாக்கி விட்டனர். இல்லையென்றால், 100 கோடிப் பேர் (இந்தியாவில் இந்துக்களின் எண்ணிக்கை) 20 கோடி முல்லாக்களைக் (முஸ்லிம்களின் எண்ணிக்கை) கண்டு பயப்படுவதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா"

அதற்காக அவர் விசாரிக்கப்பட்டபோது, அம் மாதிரியான ட்வீட்களை வெளியிடப் பயன்படுத்தப்பட்ட அவருடைய ட்விட்டர் கணக்கு போலியானது என்று ஒரு எஃப்.ஐ.ஆர். பதிவு செய்தார். ஆனால், அவர் அமைச்சராகப் பதவி ஏற்றபோது, அதே ட்விட்டர் கணக்கில் அவருக்கு பாஜக அமைச்சர்கள் பலரும் வாழ்த்து தெரிவித்தனர்.

**ஷோபா கரண்ட்லஜே**

2017 டிசம்பரில், வெறுப்புப் பேச்சு பேசியதற்காக பாஜக அமைச்சர் ஷோபா கரண்ட்லஜே மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. அவருடைய ட்வீட் பதிவுகள், "ஆத்திரமூட்டும் வகையில்" இருந்ததாகவும், அதனால் "இரண்டு சமுதாய மக்கள் மோதிக்கொள்ளும் நிலை உருவாகக்கூடும் என்றும், அதனால் அப்பகுதியில் அமைதி பாதிக்கப்படக்கூடும்" என்றும் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

அவர் ட்வீட்டில், அப்போதைய மாநில முதலமைச்சர் சித்தராமையாவை டேக் செய்து, பள்ளி மாணவியைத் துன்புறுத்தியவர்களைக் கைது செய்ய வேண்டும் என்ற பிரச்சனையில், "ஜிகாதிக்களுக்கு" எதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று அவர்மீது குற்றம் சாட்டினார். அப்பெண்ணுக்கு ஏற்பட்ட காயங்கள் எல்லாம், அவளே ஏற்படுத்திக்கொண்டவை என்பது பிறகு தெரியவந்தது.

**யோகி ஆதித்யநாத்**

2015 நவம்பர் மாதத்தில், "ஷாருக் கான், ஹாஃபிஸ் சயீத் ஆகியோர் பேசும் மொழிக்கு இடையில் எவ்வித வித்தியாசமும் இல்லை" என்று உத்தரப் பிரதேச முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் சொன்னார். பாலிவுட் உலகில் பல ஆண்டுகாலமாக நட்சத்திரமாக இருக்கும் ஷாருக் கான், நாட்டில் நிலவும் சகிப்புத் தன்மையின்மைக்கு எதிராகக் குரல் எழுப்பியபோது ஆதித்யநாத் இவ்வாறு பேசினார்.

"வெகுஜன மக்கள்" ஷாருக் கானைப் புறக்கணித்தால், அவரும் தெருக்களில் "சாதாரண முஸ்லிம்" போல நடந்துகொண்டிருப்பார் என்று ஐந்து முறை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவர் சொன்னார். அந்த பாலிவுட் நடிகர் பாகிஸ்தானுக்குச் செல்ல வேண்டும் என்றும் அவர் கூறினார்.

இந்த முதலமைச்சர் வெறுப்புப் பேச்சுக்காக 2007ஆம் ஆண்டிலேயே குற்றம் சுமத்தப்பட்டார், ஆனால், அவராலேயே நடத்தப்படும் உத்தரப் பிரதேச அரசாங்கம், அவர் மீது வழக்குத் தொடுக்கக் காவல்துறை அளித்த அனுமதியை நிராகரித்துவிட்டது. அப்படிப் பேசியதாகக் குற்றம்சாட்டப்படுவதைப் பற்றித் தொலைக்காட்சி பேட்டி ஒன்றில் கேட்கப் பட்டபோது தான் அப்படிப் பேசியதை ஆதித்யநாத் ஒப்புக்கொண்டார் என்றபோதிலும், அலஹாபாத் உயர் நீதிமன்றம் அவர் முடிவை அங்கீகரித்தது.

முஸ்லிம்களுக்கு எதிராகப் பழி தீர்த்துக்கொள்ள வேண்டும் என்ற அவருடைய வெறுப்புப் பேச்சு, கோரக்பூரில் பெரிய அளவிலான இனக் கலவரத்தைத் தூண்டிவிட்டதாக, மனுதாரர்கள் வாதிட்டனர்.

**டி. ராஜா சிங்**

'மதச்சார்பற்ற இந்துக்கள்', 'அகண்ட இந்து ராஜ்ஜிய'க் கனவிற்குத் தடையாக நிற்கிறார்கள் என்று தெலங்கானா சட்டமன்ற உறுப்பினரான பாஜக அமைச்சர் சொன்னார்.

கடந்த ஆண்டு நவம்பரில் ஓர் உரையில், மாட்டிறைச்சி சாப்பிட்டுத் தன் 'உணர்வுகளை' காயப்படுத்தும் முஸ்லிம்கள் தனக்குத் தேவையில்லை என்று தெரிவித்தார். மேலும், அக்பாருத்தின் ஒவைஸியை நோக்கி, அவருடைய தலை "ஐந்து நிமிடங்களில்" தன்னுடைய காலிற்குக் கீழ் இருக்கும் என்றும், அப்படி நடக்காவிட்டால், தன்னுடைய பெயரை மாற்றிக்கொள்வதாகவும் கூறினார். இதோடு, ஒவைஸி ஒரு "தேசத் துரோகி" என்றும், அவரை நாட்டை விட்டே விரட்டப் போவதாகவும் பேசினார்.

**வினய் கத்தியார்**

பஜ்ரங் தள் அமைப்பின் நிறுவனரும், உத்தரப் பிரதேச மாநிலங்களவை உறுப்பினருமான, வினய் கதிரார், "முஸ்லிம்களுக்கு (நிலத்தில்) அவர்கள் பங்கு கொடுக்கப்பட்டுவிட்டது. அவர்கள் பங்களாதேஷ் அல்லது பாகிஸ்தானுக்குச் செல்ல வேண்டும்", என்று சொன்னார்.

மக்கள் தொகையின் அடிப்படையில் நாட்டைப் பிரித்ததற்காக, முஸ்லிம் சமுதாயத்தினரைக் குற்றம் சாட்டினார்.

**ததகதா ராய்**

பாஜகவின் மூத்த தலைவர் மற்றும் மேகாலயாவின் ஆளுநர், சமீபத்தில் காஷ்மீர் மக்களையும் காஷ்மீர் பொருட்களையும் மொத்தமாகப் புறக்கணிக்க வேண்டும் என்று அழைப்பு விடுத்தார்.

"இந்திய ராணுவத்திலிருந்து ஓய்வுபெற்ற ஒரு படைத் தலைவனின் வேண்டுகோளாக" இதை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று ட்விட்டரில் பதிவு செய்தார்.

**விக்ரம் சிங் சைனி**

பாஜகவின் உத்தரப் பிரதேச சட்டமன்ற உறுப்பினரான விக்ரம்சிங் சைனி, 2013ஆம் ஆண்டின் கலவரத்தின் மையப் புள்ளியான, வகுப்புவாதப் பதற்றக் நிறைந்த முசாபர்நகரில் பேசும்போது- "சிந்திக்கத் தெரியாத மூளையுள்ள சில தலைவர்கள் தாடி வைத்தவர்களைத் தங்க அனுமதித்துவிட்டனர். அதனால்தான் இன்று நமக்குப் பிரச்சினை நிலவுகிறது அவர்கள் மட்டும் வெளியேறியிருந்தால் இந்த பூமி முழுவதும் நம்முடையதாக இருந்திருக்கும்", என்று சொன்னார்.

ஜனவரியின் முற்பகுதியில், "இந்தியாவில் பாதுகாப் பற்றும், அச்சுறுத்தப்படுவதாகவும் உணர்கிறவர்கள் வெடிவைத்துக் கொல்லப்பட வேண்டும்", என்று சொல்லி இருந்தார். மேலும், அமைச்சரவையில் இடம் கொடுத்தால், தானே அந்த குண்டுவைப்பு முயற்சியைத் தொடங்குவேன் என்றும் தெரிவித்தார்.

கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும், உயர் பதவியில் / பொறுப்பில் உள்ள அரசியல்வாதிகள் வெறுப்புப் பேச்சில் இறங்குவது 500% அதிகரித்துள்ளது என்று NDTV தரவுகள் சேகரிப்பு குழு தெரிவித்துள்ளது. 1300 கட்டுரைகளை அலசி ஆராய்ந்து, சமூக மதிப்புள்ள நபர்கள் மற்றும் அரசியல்வாதிகளின் 1000க்கும் அதிகமான சமீபத்திய ட்வீட்களைப் படித்து அது இந்த முடிவுக்கு வந்துள்ளது. 2009 முதல் 2014 வரையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் ஆட்சியில், 21 அரசியல்வாதிகளிடமிருந்து 21 வெறுப்புப் பேச்சுகள் வெளிப்பட்டுள்ளன. 2014க்கும் 2018க்கும் இடையில், 44 அரசியல்வாதிகளால் 124 வெறுப்புப் பேச்சுகள் வெளிப்பட்டுள்ளன. ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் காலகட்டத்தில், பாஜக 86% வெறுப்புப் பேச்சிலும், காங்கிரஸ் 14% வெறுப்புப் பேச்சிலும் ஈடுபட்டது. தேசிய ஜனநாயகக் கூட்டணியின் ஆட்சிக் காலத்தில், 124 பாஜகவின் வெறுப்புப் பேச்சுக்களில் பாஜகவின் பங்கு 90%.

**'தி வயர்' இணைய இதழிலிருந்து (விஜய்குமார்)**

# தமிழ்நாட்டுப் பணிகளை வடநாட்டார் பறிக்கிறார்கள்

*தமிழ்நாட்டு வேலை வாய்ப்புகளை வடநாட்டுக்காரர்களுக்கு வாரி கொடுத்ததை மறக்க முடியுமா?*

- *2013 முதல் 2016 வரை மத்திய அரசு தேர்வாணையத்தில் உருவாக்கப் பட்ட பணியிடங்களில் தமிழ்நாட்டில் பணிகளில் அமர்த்தப்பட்ட வடநாட்டுக்காரர்கள் எவ்வளவு பேர் தெரியுமா? 1988 பேர் தமிழர் களுக்குக் கிடைத்தது 110 பணிகள் மட்டுமே. (6 சதவீதம்)*
- *பீகார் – இராஜஸ்தான் மாநிலங்களின் பயிற்சி நிறுவனங்கள் தேர்வாணையத்திடம் 'கள்ளக் கூட்டு' வைத்து தமிழ்நாட்டுக்குள் முறைகேடாக வடநாட்டுக்காரர்களை வேலைகளில் திணித்ததை மறக்க முடியுமா? – இப்படி முறைகேடாக சென்னை வருமான வரித் துறையில் வேலைக்கு வந்த 3 வடநாட்டுக்காரர்கள் கண்டறியப்பட்டு பணி நீக்கம் செய்யப்பட்டனர்.*
- *2014ஆம் ஆண்டு மத்திய தேர்வாணையம் நடத்திய தேர்வுகளில் வட மாநிலத்துக்காரர்கள் இலஞ்சம் கொடுத்து தேர்வில் வெற்றி பெற்றது கண்டறியப்பட்டு, பிறகு தேர்வே இரத்து செய்யப்பட்டது.*
- *அஞ்சல் துறையையும் விட்டு வைக்கவில்லை. கடைநிலை ஊழியர் களுக்கான தேர்வுகளை அந்தந்த மாநில அரசுகளே நடத்தி மாநில மக்களுக்கு வேலை வழங்கி வந்தன. அதையும் அகில இந்திய தேர்வாக மாற்றியது மோடி ஆட்சி. அதனால் தமிழக அஞ்சலகத் துறையில் வடநாட்டுக்காரர்கள் குவிந்தார்கள். தமிழே தெரியாத வடநாட்டுக்காரர்கள் கடுமையான தமிழ்மொழிக்கான தேர்வில் தமிழ்நாட்டைச் சார்ந்தவர்களைவிட கூடுதல் மதிப்பெண் பெற்றார்கள். பிறகு நடந்த மோசடிகள் கண்டுபிடிக்கப்பட்டன. பிறகு அந்தத் தேர்வும் இரத்து செய்யப்பட்டது.*
- *தமிழ்நாட்டில் தேசியமய வங்கிப் பணியாளர்களுக்கான தேர்வுகளில் தமிழ்மொழி தெரிந்தவர்கள் மட்டுமே தேர்வு செய்யப்பட வேண்டும் என்ற விதி இருந்தது. இந்த விதியை மாற்றியது மோடி ஆட்சி. கடந்த ஆண்டு 'ஸ்டேட் பேங்க்' பணியாளர் தேர்வில் ஆங்கில மொழி மட்டுமே அடிப்படைத் தகுதியாக்கினார்கள். அதன் விளைவு ஸ்டேட் வங்கியில் தமிழர் வேலை வாய்ப்புகளை வடநாட்டுக்காரர்கள் பறித்துக் கொண்டு விட்டார்கள். இந்த 'பறிப்பு'களைத் தட்டிக் கேட்க வேண்டிய அ.இ.அ.தி.மு.க. ஆட்சி கேட்டதா? இல்லை; அது மட்டுமல்ல; 'குதிரை கீழே தள்ளியதுமல்லாமல் குழியையும் பறித்தது' என்ற கதைபோல் தமிழக அரசு நடத்தும் தேர்வுகளிலும் வடநாட்டார்கள் குவிந்து வருகிறார்கள். அதிர்ச்சியடையாதீர்கள்!*

– கு. தனசேகர் எழுதிய "மத்திய அரசுப் பணிகளில் தமிழர் உரிமைப் பறிப்பு நூல்"

# காலியாக உள்ள பல இலட்சம் வேலைகள் நிரப்பப்படவில்லை

மோடி ஆட்சி பல இலட்சம் காலியாக உள்ள பதவிகளை நிரப்பவே இல்லை. அரசு தந்த புள்ளி விவரங்களே இதை ஒப்புக் கொள்கின்றன.

மருத்துவ சேவை குறைந்த செலவில் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு அகில இந்திய மருத்துவக் கழகத்தில் (All India Institute of Medical Science), உயர் கல்வி நிறுவனங்களில் 4089 புதிய பதவிகள் உருவாக்க அரசு ஒப்புதல் அளித்தது. ஆனால், போபால், புவனே சுவர், ஜோத்பூர், பாட்னா, ரெய்ப்பூர் மற்றும் ரிஷிகேஷ் 'எய்ம்ஸ்' மருத்துவக் கழகங்களில் 20,221 பேராசிரியர்கள் மற்றும் நிர்வாகிகளுக்கான பணி இடங்கள் காலியாக இருப்பதாக நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்த சுகாதார நலத் துறை அறிக்கை கூறுகிறது.

மத்திய மனித வளத் துறை அமைச்சகத்தின் கீழ் 41 மத்திய பல்கலைக்கழகங்கள் செயல்படுகின்றன. இவற்றில் விரிவுரையாளர்கள் உள்பட 17,092 பதவிகளை நிரப்ப அரசு ஒப்புதல் வழங்கியது. ஆனால் நிரப்பப்பட்ட இடங்கள் 5606 மட்டும்தான். 2018 ஏப்ரலில் மனித வளத் துறை அமைச்சகம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கை இத் தகவல்களைக் கூறுகிறது.

அதே மனித வளத் துறை அமைச்சகத்தின் அறிக்கையில் மத்திய அரசு நடத்தும் தொடக்கப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளில் 10 இலட்சம் ஆசிரியர் பணி இடங்கள் நிரப்பப்படாமல் காலியாக உள்ளதாகக் குறிப்பிடுகிறது. 'சர்வ சிக்ஷ அபியான்' என்ற மத்திய அரசு நடத்தும் பள்ளிகளில் 4,17,057 ஆசிரியர் பணி இடங்களை நிரப்ப அனுமதி கொடுத்திருந்தும் இன்னும் நிரப்பப்படவில்லை.

இந்தியா முழுதும் பல்வேறு மாநிலங்களில் உள்ள உயர்நீதிமன்றங்களில் 388 நீதிபதிகள் பதவிகளும், கீழமை நீதிமன்றங்களில் 5135 மாஜிஸ்திரேட் பதவிகளும் நிரப்பப்படாமல் இருப்பதாக மத்திய சட்ட அமைச்சகம் அண்மையில் தாக்கல் செய்த அறிக்கை கூறுகிறது.

மத்திய ரிசர்வ் போலீஸ் படையில் 22,746 பணி இடங்களும் எல்லை பாதுகாப்புப் படையில் 19,320 பணி இடங்களும், மத்திய தொழில் பாதுகாப்புப் படைப் பிரிவில் 5,165 இடங்களும், சீமா பால் என்ற படைப் பிரிவில் 19,175 இடங்களும், இந்தோ-திபேத்தியர்கள் எல்லைப் பாதுகாப்புப் படைப் பிரிவில் 6,398 இடங்களும், 'அசாம் ரைஃபில்' என்ற பாதுகாப்புப் படைப் பிரிவில் 3774 இடங்களும் நிரப்பப்படாமல் இருக்கின்றன என்ற தகவலை உள்துறை அமைச்சகத்தின் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கை கூறுகிறது. இரயில்வே துறையில் பாதுகாப்பு தொடர்பான பிரிவில் 1,51,348 பதவிகள் காலியாக உள்ளன. ஏப்.2018 நிலவரப்படி, இரயில்வேயில் கெசட்டட் நிலை பெறாத 2,50,410 பதவிகள் நிரப்பப்படவில்லை.


கடந்த டிசம்பர் மாதம் மத்திய வேலை வாய்ப்புத் துறை சார்பில் மாநிலங்களவையில் சமர்ப்பித்துள்ள அறிக்கையில் மார்ச் 1, 2016 வரை மத்திய அரசு நிர்வாகப் பதவிகளில் நிரப்பப்படாமல் இருக்கும் காலி இடங்கள் குறித்த தகவல்கள் வெளியிடப் பட்டுள்ள. குரூப் 'ஏ' பிரிவில் 15,284 இடங்களும், 'பி' பிரிவில் (கெசட்டட் நிலை பதவிகள்) 26,310 இடங்களும் கெசட்டட் நிலை இல்லாத பதவிகள் 49,740 இடங்களிலும் குரூப் 'சி' பிரிவில் கெசட்டட் நிலை இல்லாத பிரிவுகளில் 3,21,418 பதவிகளும் நிரப்பப்படாமல் காலியாக உள்ளன.

அனைத்து மாநிலங்கள் யூனியன் பிரதேசங்களில் காவல் துறைகளில் நிரப்பப்படாமல் காலியாக உள்ள பதவிகள் 4,43,524. காவல்துறை ஆய்வு மற்றும் மேம்பாட்டுக் கழகம் தந்துள்ள தகவல் இவை. மத்திய பண்பாட்டுத் துறை அமைச்சக அறிக்கை 4000 இடங்கள் நிரப்பப்படாமல் இருப்பதை சுட்டிக் காட்டுகிறது. ஏராளமான அஞ்சலகங்களில் 57,574 பதவிகள் காலியாக உள்ளன.

ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்குவோம் என்ற உறுதிமொழி யோடு மோடி பதவிக்கு வந்தார். வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்காக பிரதமர் வேலை உருவாக்கத் திட்டம், தீனதயாள் உபாத்யாயா கிராமின் கவுசல்யா யோஜனா, தீனதயாள் அந்தோதயா - தேசிய நகர்ப்புற வாழ்வாதார மய்யம் என்ற அமைப்புகள் உருவாக்கப் பட்டன. கடந்த நான்கரை ஆண்டுகளில் இந்த அமைப்புகள் உருவாக்கிய வேலை வாய்ப்புகள் 27 இலட்சம் மட்டுமே. மோடியின் உறுதிமொழிப்படி சுமார் 8 கோடி வேலை வாய்ப்புகளை உருவாக்கி யிருக்க வேண்டும். புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்காதது மட்டுமல்ல, ஏற்கனவே காலியாக உள்ள 28 இலட்சம் வேலை வாய்ப்புக்கான இடங் களையும் நிரப்பாமல் கிடப்பில் போட்டுள்ளது, மோடி ஆட்சி!

இந்த நிலையில் உயர்ஜாதியில் ஏழைகளுக்கு 10 சதவீத இடஒதுக்கீட்டை உறுதி செய்வதற்கு அவசர அவசரமாக கொண்டு வந்துள்ள சட்டத்திருத்தம் கண் துடைப்பு நடவடிக்கை என்பதோடு இட ஒதுக்கீட்டின் அடிப்படையையே தகர்க்கும் ஆபத்தான திட்டமாகும்.

தகவல் : 'பிசினஸ்லைன்'



# அமித்ஷா வழக்கை விசாரித்த நீதிபதியின் மர்ம மரணம்

சோராபுதீன் ஷேக் என்கவுண்டர் வழக்கை விசாரித்த சிபிஐ, அமித் ஷா உள்ளிட்ட 38 பேர் மீது ஜூலை 2010இல் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தது. சிபிஐ தனது குற்றப் பத்திரிகையில், இந்தக் கொலையின் மூளையாகச் செயல்பட்டவர் அமித் ஷா என்று குறிப்பிட்டிருந்தது. ஏற்கெனவே இவ்வழக்கின் புலனாய்வு நடந்து கொண்டிருந்தபோது, சாட்சிகளைக் கலைக்க அமித் ஷா மேற்கொண்ட முயற்சிகளைச் சுட்டிக்காட்டி, வழக்கின் விசாரணையை குஜராத்திலிருந்து வேறு மாநிலத்துக்கு மாற்ற வேண்டும் என்று சிபிஐ உச்சநீதிமன்றத்தை அணுகியது. சிபிஐயின் கோரிக்கையை ஏற்ற உச்சநீதிமன்றம், செப்டம்பர் 2012இல் இவ்வழக்கை மும்பை நீதிமன்றத்துக்கு மாற்றியது.

***மே 2014இல் மோடி பிரதமராகப் பொறுப்பேற்றார். ஓரிரு மாதங்களில் அமித் ஷா பா.ஜ.க. தலைவரானார். அதன் பின் இந்த வழக்கு தலைகீழ் மாற்றங்களைக் கண்டது.***

அமித் ஷா மீதான வழக்கை ஜேடி உத்பத் என்ற நீதிபதி விசாரித்துக் கொண்டிருந்தார். வழக்கு விசாரணைக்கு ஒருமுறைகூட அமித் ஷா ஆஜராகவில்லை. அவரது வழக்கறிஞர்கள் எப்போதும் அமித் ஷாவுக்கு அரசியல் வேலை இருக்கிறது, அவசர வேலை இருக்கிறது என்று மனுத் தாக்கல் செய்து கொண்டிருந்தார்கள். ஒரு நாள் எரிச்சலடைந்த நீதிபதி உத்பத், ‘எப்போது பார்த்தாலும் ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி அமித்ஷா வர மறுக்கிறார். இதை இப்படியே தொடர அனுமதிக்க முடியாது’ என்று கூறினார். இது நடந்தது 6 ஜூன் 2014 அன்று. வழக்கை 26 ஜூன் 2014க்கு ஒத்தி வைத்தார் உத்பத். 25 ஜூன் 2014 வழக்கு விசாரணைக்கு முந்தைய நாள். அந்த நாளில் அவர் வேறு நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டார்.

வழக்கை குஜராத்திலிருந்து மகாராஷ்டிராவுக்கு மாற்றிய உச்சநீதிமன்றம் தனது தீர்ப்பில் ஒரு முக்கியமான விஷயத்தைக் குறிப்பிட்டிருந்தது. அது இதுதான். ‘இந்த வழக்கின் விசாரணையைத் தொடக்கம் முதல் முடிவு வரை ஒரே நீதிபதி விசாரிக்க வேண்டும்.’ ஆனால் இதையும் மீறி நீதிபதி ஜேடி உத்பத் மாற்றப்பட்டார். அவருக்குப் பிறகு இந்த வழக்கைக் கையாள நியமிக்கப்பட்டவர்தான்

*நீதிபதி ப்ரிஜ்கோபால் ஹர்கிஷண் லோயா.*

*மாவட்ட நீதிபதிகளின் மாறுதல்களைக் கையாள, ஒவ்வொரு மாநில நீதிமன்றத்திலும் நிர்வாகக் கமிட்டி ஒன்றுஇருக்கும். அந்த கமிட்டிதான் மாறுதல்களை முடிவு செய்யும். அமித் ஷா வழக்கை விசாரிக்க ஒரு நேர்மையான நீதிபதியை நியமிக்க வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டபோது, அப்போது மும்பை உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக இருந்த மொகித் ஷா, அந்தக் கூட்டத்தில் பங்கேற்கவில்லை. அவரும் குஜராத்தைச் சேர்ந்தவராக இருந்த காரணத்தால் எதற்கு சிக்கல் என்று நினைத்தோ என்னவோ அதில் பங்கேற்கவில்லை. ஆனால் அதே மொகித் ஷா, ஒரு வருடம் கழித்து நீதிபதி உத்பத்தை மாறுதல் செய்து உத்தரவிட்டார்.*

*31 அக்டோபர் 2014 அன்று இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது, வழக்கம்போல அமித் ஷாவின் வழக்கறிஞர்கள் அவரால் இன்று நீதிமன்றத்துக்கு வர இயலாது என்று கூறினார். அப்போது நீதிபதி லோயா, 'அமித் ஷா இன்று மும்பையில்தானே இருக்கிறார்? ஏன் வரவில்லை' என்று கேள்வி எழுப்பினார். பிறகு வழக்கு விசாரணையை 15 டிசம்பர் 2014க்கு தள்ளி வைத்தார். அந்தச் சமயத்தில் நீதிபதி லோயா அந்த ஒரே ஒரு வழக்கை மட்டும்தான் விசாரித்துக் கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.*

*1 டிசம்பர் 2014 அன்று நாக்பூரில் சக நீதிபதியின் மகள் திருமணத்துக்காகச் சென்றிருந்த லோயா, மாரடைப்பால் காலமானார் என்று அறிவிக்கப்பட்டது. நீதிபதி லோயாவோடு வேறு இரண்டு நீதிபதிகளும் சென்றிருந்தனர். ஊடகங்களில் இது பெரிய செய்தியாகவில்லை. இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளேடு மட்டும், 'மாரடைப்பால் இறந்திருந்தாலும், லோயா அதற்கு முன் நல்ல உடல் நலனோடு இருந்தார்' என்று குறிப்பிட்டிருந்தது. நாடாளுமன்றத்தில் திரிணாமுல் காங்கிரஸ் எம்.பி.க்கள் இது குறித்து பிரச்சினை எழுப்பினார்கள். ஆனால் சில நாட்களில் இது மறக்கப்பட்டது.*

*லோயாவின் தங்கை மகள் நுபுர் பயானிதான் 2016ஆம் ஆண்டில் 'கேரவன்' இதழில் செய்தியாளரைச் சந்தித்து இது குறித்து சந்தேகத்தை எழுப்புகிறார். நவம்பர் 2017இல், 'கேரவன்' இதழ் லோயா மரணம் குறித்து ஒரு விரிவான புலனாய்வுக் கட்டுரையை வெளியிட்டது. அதன் பிறகுதான் லோயாவின் மரணத்தில் உள்ள மர்மங்கள் ஒவ்வொன்றாக வெளியே வரத் தொடங்கின.*

*30 நவம்பர் 2014 அன்று, நாக்பூரில் இருந்து லோயா தன் மனைவி சர்மிளாவிடம் பேசுகிறார். அன்று தனக்கு என்னென்ன வேலைகள் இருந்தன என்பதை விவரிக்கிறார். நாக்பூரில் தங்கியிருப்பதாகவும், திருமணம் முடிந்ததும் வருவதாகவும் கூறுகிறார். அதுதான் நீதிபதி லோயா பேசிய கடைசி உரையாடல். மறுநாள் லோயாவின் குடும்பத்தினருக்கு அவர் மாரடைப்பால் இறந்தார் என்ற தகவல் தெரிவிக்கப்படுகிறது.*

*லோயாவின் தங்கை மகள் லோயாவின் உடலைப் பார்த்தவுடனேயே தனக்குச் சந்தேகம் வந்தது என்று கூறினார். லோயாவின் சட்டையில் இரத்தக் கறை இருந்ததை தான் கண்டதாக அவர் கூறினார். அவர் அணிந்திருந்த பேண்டின் பெல்ட் திரும்பி இருந்தது. கழுத்தில் இரத்தக்கறை இருந்தது. தலையின் பின்புறம் காயம் இருந்தது என்றார். இதை வெறும் சந்தேகமாக எடுத்துக் கொள்ள முடியாது.*

*ஏனென்றால், அமித் ஷா சம்பந்தப்பட்ட சோராபுதீன் ஷேக் வழக்கை மூடி மறைக்கவும், விசாரணை நடத்தப்படாமல் தடுக்கவும் தொடக்கம் முதலே அனைத்து முயற்சிகளையும் அமித் ஷா மேற்கொண்டார்.*

*லாட்டூரில் இருந்த லோயாவின் தந்தை ப்ரிஜ்கிஷனுக்கு லோயாவின் மரணம் குறித்து தகவல் அளித்தவர் தன்னை ஆர்.எஸ்.எஸ். சேவகர் என்று அறிமுகப்படுத்திக் கொண்ட ஈஷ்வர் பகேத்தி. லோயாவின் தந்தையை அழைத்த அவர், பிரேதப் பரிசோதனை முடிந்து விட்டது என்றும், உடல் அவர்கள் வீட்டுக்கு வருவதற்கான ஏற்பாடுகளை அவரே செய்வதாகவும் கூறியுள்ளார். ஒரு நீதிபதி இறந்துள்ள நிலையில், அரசு அதிகாரிகளோ, வேறு யாருமோ உடன் இல்லாமல் சம்பந்தம் இல்லாத ஒரு ஆர்.எஸ்.எஸ். தொண்டர் ஏன் லோயாவின் தந்தையை அழைத்து இறப்புத் தகவலைக் கூறினார் என்பதும் ஒரு பெரும் மர்மம்.*

*லோயாவின் உடல் அவர் வீட்டை வந்தடைந்தபோது, அந்த ஆம்புலன்ஸ் ஓட்டுனரைத் தவிர ஒருவரும் உடன் வரவில்லை. சொல்லப் போனால் லோயாவுக்கு அந்தத் திருமணத்துக்கு செல்வதற்கே விருப்பம் இருந்ததில்லை. அவருடன் பணி செய்த இரண்டு நீதிபதிகளின் வற்புறுத்தலின் பேரிலேயே நாக்பூருக்குச் சென்றிருந்தார். அந்த இரண்டு நீதிபதிகள்கூட லோயாவின் உடலோடு உடன் வரவில்லை.*

*லோயாவோடு நாக்பூர் நீதிபதிகள் ஸ்ரீகாந்த் குல்கர்னி மற்றும் மோடக் ஆகியோரின் கூற்றுப்படி நள்ளிரவு 12.30 மணிக்கு நெஞ்சு வலிக்கிறது என்று கூறுகிறார் லோயா. உடனடியாக அவரை அருகாமையில் உள்ள ஒரு மருத்துவமனைக்கு*

அழைத்துச் சென்றுள்ளனர். லோயாவின் மொபைல் போன் அவரிடம்தான் இருந்தது. மிக மிக எளிதாக அவர் குடும்பத்தை அழைத்து தகவலைச் சொல்லியிருக்கலாம். ஆனால் அவர்கள் செய்யவில்லை.

நீதிபதி லோயா தங்கியிருந்தது ரவி பவன் அழைக்கப்படும் நாக்பூரின் விருந்தினர் மாளிகை. உடன் இருந்த இரண்டு நீதிபதிகள் தான் அவரை ஆட்டோவில் அழைத்துச் சென்றுள்ளனர். ஆட்டோவில் முதலில் அருகாமையில் இருந்த தாந்தே மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார் லோயா. பின்னர் அங்கிருந்து மெடிட்டிரேனா என்ற பெரிய தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றிருக்கிறார்கள். அந்த மருத்துவமனையில் அவர் ஏற்கெனவே இறந்து விட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கட்டத்திலாவது குடும்பத்தினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அப்போதும் தெரிவிக்கப்படவில்லை.

ரவி பவன் என்பது அரசினர் விருந்தினர் மாளிகை. அது அரசு விருந்தினர் மாளிகை பகுதி என்பதால் அதன் அருகே ஆட்டோ ஸ்டாண்ட் போன்றவற்றுக்கு அனுமதி கிடையாது. பகலில் ஆட்டோ வேண்டுமென்றால்கூட இரண்டு கிலோ மீட்டர் நடந்து சென்றுதான் ஆட்டோ பிடிக்க வேண்டும். நள்ளிரவு 12.30 மணிக்கு லோயாவை அழைத்துச் செல்ல அந்த ஆட்டோவைப் பிடித்தார்கள். எப்படிப் பிடித்தார்கள் என்பதும் புரியாத புதிர்.

நமக்கு மிகவும் நெருங்கிய அல்லது அந்த அளவு நெருக்கமில்லாத ஒரு நண்பருக்கு இதுபோல மாரடைப்பு ஏற்பட்டு மரணம் சம்பவித்தால் நாம் முதலில் செய்யும் காரியம், அவரது குடும்பத்தினருக்குத் தகவல் தெரிவிப்பதே. ஆனால் சட்டம் பயின்ற இரண்டு நீதிபதிகள் ஏன் லோயாவின் மரணத்தைக் குடும்பத்தினருக்குத் தெரியாமல் மறைத்தார்கள் என்பதும் ஒரு புதிர்.

மெடிட்டிரேனா மருத்துவமனையில் லோயா இறந்து விட்டார் என்று கூறிய பின்னர் லோயாவின் உடல், நாக்பூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு பிரேதப் பரிசோதனை நடத்தப்படுகிறது.

சாதாரணமாக மருத்துவமனைக்குச் சென்று இறந்தவர்களின் உடலை பிரேதப் பரிசோதனைக்கு அனுப்புவதில்லை. அதுவும் ஒரு நீதிபதியின் உடலைப் பிரேதப் பரிசோதனைக்கு அனுப்புவது எப்போதும் நடப்பது இல்லை. ஆனால் லோயா இறந்துபோன தகவல் அவர் குடும்பத்தினருக்குத் தெரிவிக்கப்படும் முன்னதாகவே, பிரேதப் பரிசோதனை நடந்து முடிந்திருக்கிறது.

பிரேதப் பரிசோதனை அறிக்கையின்படி லோயாவின் இறப்பு நேரம் காலை 6.15. ஆனால், நள்ளிரவே பிரேதப் பரிசோதனை நடந்தது என்று நாக்பூர் அரசு மருத்துவமனையில் இருந்தவர்கள் தெரிவித்துள்ளனர். மேலும், நள்ளிரவே உடலைப் பார்த்ததாக சித்தபர்த்தி காவல்நிலையத்தைச் சேர்ந்தவர்களும் சொல்லியிருக்கிறார்கள்.

லோயாவின் மரணத்துக்குக் காரணம் மாரடைப்பு என்று பிரேதப் பரிசோதனை அறிக்கை சொல்கிறது. லோயாவின் தந்தைக்கு வயது 85. தாயாருக்கு வயது 80. இருவரும் ஆரோக்கியமாக வாழ்ந்து கொண்டுள்ளனர். அவர்கள் யாருக்கும் இரத்த அழுத்தமோ நீரிழிவு நோயோ கிடையாது. மரணிக்கையில் லோயாவுக்கு வயது 48 தான். அவருக்கும் இரத்த அழுத்தமோ நீரிழிவு நோயோ கிடையாது. புகை, மது போன்ற கெட்ட பழக்கங்களும் அவருக்கு இல்லை. தினந்தோறும் உடற்பயிற்சி செய்து உடலை ஆரோக்கியமாக வைத்திருந்தார் லோயா என்று அவர் குடும்பத்தினர் கூறுகின்றனர்.

'கேரவன்' இதழில் நீதிபதி லோயாவின் மர்ம மரணம் குறித்த கட்டுரைகள் வெளியானதும், ஒவ்வொருவராகத் தொடர்ந்து பேசத் தொடங்கினார்கள். லோயாவின் சகோதரி அனுராதா பயானி ஒரு மருத்துவர். மும்பை உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக இருந்த மொகித் ஷா, அமித் ஷாவுக்கு சாதகமான தீர்ப்பை வழங்கினால் 100 கோடி கொடுக்கப்படும் என்று தெரிவித்ததாகக் கூறினார். ஒரு தீபாவளி தினத்தன்று, குடும்பத்தினர் அனைவரும் கூடியிருக்கையில் இந்தத் தகவலை லோயா தன்னிடம் கூறியதாக பயானி விவரித்தார். நீதிபதி லோயாவின் தந்தையும் இத்தகவலை உறுதி செய்தார்.

நீதிபதி லோயாவின் மரணம் தொடர்பாகக் கிடைத்த பூர்வாங்க தகவல்களின் அடிப்படையிலும், அவர் குடும்பத்தினர் மற்றும் உறவினர்களின் அடிப்படையிலும் முழுமையான ஒரு விசாரணை நடைபெற்றிருக்க வேண்டும். ஏனெனில் இறந்தவர் ஒரு சிபிஐ நீதிமன்றத்தின் நீதிபதி. ஒரு வேளை லோயா கொலை செய்யப்பட்டிருக்கிறார் என்றே வைத்துக் கொள்வோமே. இந்தியாவில் ஒரு நீதிபதிக்கே பாதுகாப்பு இல்லை என்ற அவப்பெயர் தீராத கரும்புள்ளியாக நம் மீது விழுந்திராதா?

ஆனால் மோடியின் இந்தியாவில் நியாயமான விசாரணை நடைபெற விட்டுவிடுவாரா என்ன?

**நன்றி : சவுக்கு சங்கர் எழுதிய 'மோடி மாயை' நூல்**

பொருளாதாரத் துறையில் மோடி அரசின் தோல்விகள் : அவர்களே ஒருவரை ஒருவர் திட்டிக் கொண்ட வேடிக்கை.

பொருளாதாரத் துறையில் மோடி அரசு படு முட்டாள்தனமாகவும் பொறுப்பற்ற திமிருடனும் நடந்து கொண்டு இந்திய மக்கள் மீது கடும் சுமைகளைச் சுமத்தியதை நடு நிலையான பொருளியல் அறிஞர்களும், இடதுசாரிச் சிந்தனையாளர்களும் மட்டும் சொல்லவில்லை. பாஜக தலைவர்களில் ஒருவரும் வாஜ்பேயி அமைச்சரவையில் நிதி அமைச்சராக இருந்தவருமான யஷ்வன்த் சின்ஹாவும் இதை அம்பலப்படுத்திக் கண்டித்தார்.

தனக்குப் பதவி அளிக்காமல் நாடாளுமன்றத் தேர்தலில் தோற்றுப்போன அருண்ஜேட்லிக்கு நிதித்துறை மட்டுமின்றி மேலும் மூன்று துறைகளின் பொறுப்பை (ஆக மொத்தம் 4 துறைகள்) அளித்த கடுப்பில் சின்ஹா இதை எல்லாம பேசியபோதும் அவர் வைத்த விமர்சனங்கள் முற்றிலும் சரியானவை. பொருளாதாரம் போன்ற முக்கியமான துறையின் அமைச்சருக்கு மேலும் இரண்டு மூன்று துறைகளின் பொறுப்பை அளிப்பது என்பதெல்லாம் மோடியின் எதேசாதிகாரத் தன்மைக்கு மட்டுமல்லாமல் திறமை இன்மைக்கும் சான்றாக அமைந்தது.

மோடி அரசின் திறமை இன்மை மற்றும் பொருளாதாரத் துறையில் அடைந்த பின்னடைவு ஆகியவற்றிற்கு மேலும் சில எடுத்துக் காட்டுக்களைக் காண்போம்.

40 இலட்சம் ஊழியர்களைக் கொண்ட இந்திய டெலிகாம் துறை கடன் மற்றும் பொருளாதார நெருக்கடியில் உள்ளது என 2018ஆம் ஆண்டு பொருளாதார சர்வே (Economic Survey 2018) படம் பிடித்துக் காட்டியது. அதன் கடன் சுமையின் அளவு சுமார் 7 லட்சம் கோடி எனச் சொல்லப்படுகிறது. சுமார் 1.5 லட்சம் வேலை இழப்புகள் ஏற்பட்டுள்ளன. டெலிகாம் நிறுவனங்கள் மூடப்படுவதும், ஒடோபோனும், ஐடியாவும் இணைக்கப்பட்டதும் இந்த ஆட்குறைப்புக்குக் காரணமாய் இருந்தன.

உற்பத்தித் திறன் குறைந்த காலாவதியாகிப் போன எந்திரங்களுடன் கூடிய 'டெக்ஸ்டைல்' துறையில் ஜன 2018ல் ஏற்றுமதி வீழ்ச்சி ஆண்டுக்குப் 13 சத அளவு தொடங்கியது. எஃகு இரும்புத் துறைதான் கார்பொரேட்களின் அதிக அளவு வாராக் கடனுக்குக் காரணமாகியது என்கிறது IBC. ஒரு 45 வாராக் கடன்களில் மட்டும் 57,000 கோடி ரூபாய் முடங்கி உள்ளது.சீனா, தென் கொரியா, உக்ரேன் முதலான நாடுகளிலிருந்து இங்கு இறக்குமதியாகும் இரும்பு உள்நாட்டு உற்பத்தியைப் பெரிய அளவு பாதித்தது.

தகவல் தொழில்நுட்பத் துறையைப் பொருத்த மட்டில் 2016ல் தொடங்கப்பட்ட 40 சத தொழில்கள்

**40 இலட்சம் ஊழியர்களைக் கொண்ட இந்திய டெலிகாம் துறை கடன் மற்றும் பொருளாதார நெருக்கடியில் உள்ளது என 2018ஆம் ஆண்டு பொருளாதார சர்வே படம் பிடித்துக் காட்டியது.**

# மோடியின் ஆணவமும் – ஜெட்லியின் திறமையின்மையும்

தோல்வி அடைந்தன. 2017ம் ஆண்டின் முதல் பாதியில் தொடங்கப்பட்ட 53% சிறு முயற்சிகளும் வீழ்ந்தன.

MSME எனப்படும் மிகச் சிறிய, சிறிய மற்றும் நடுத்தர தொழில்துறைதான் (Micro, Small & Medium enterprises) மோடி அரசின் பண மதிப்பீட்டு நீக்கம் மற்றும் GST கொள்கையால் பெரிதும் பாதிக்கப் பட்டது. ரிசர்வ் வங்கியின் Mint Street அறிக்கையின்படி (2018 ஆகஸ்ட்) இந்தத் தொழில்களில் கடன் வரவுகள் மேலும் குறையத் தொடங்கின. இன்னொரு பக்கம் GST வரி ஏற்றுமதிகளைப் பெரிய அளவில் பாதித்தது. இந்தத் துறையில் 6.3 கோடி நிறுவனங்கள் உள்ளன. 11.1 கோடிப் பேர் வேலை செய்கின்றனர். மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 30 சதம் இதன் மூலமே உற்பத்தியாகிறது. 43% உற்பத்தியும் இதன் மூலம்தான்.மொத்த ஏற்றுமதியிலும் 40 சதம் இதன் மூலம்தான். நோட்டுகளைச் செல்லாமலாக்கியதன் மூலமும் GST வரிவிதிப்பின் மூலமும் இவை எல்லாமும் பெரிய அளவில் பாதிப்பிற்கு உள்ளானதோடு அதிக அளவு வேலை இழப்பிற்கும் காரணமாகியது..

சமீப காலங்களில் மோடி தலைமையில் இந்த அமைச்சரவை அமைந்தபோதுதான் உலக அளவில் கச்சா எண்ணையின் விலை குறைந்து மிகச் சாதகமான பொருளாதாரச் சூழல் அமைந்தது. மன்மோகன் அரசு இருந்த காலத்தில் உலக அளவில் பொருளாதாரப் பின்னடைவு (recession) ஏற்பட்டபோது (2008) அது இந்தியாவை பெரிய அளவில் தாக்காது தடுக்கப் பட்டது. ஆனால் ஓரளவு சாதகமான பின்புலம் அமைந்தும் இந்தியா பொருளாதாரத் துறையில் தோல்வி அடைந்துள்ளதற்கு மோடியின் திமிர், அருண்ஜேட்லியின் திறமையின்மை ஆகியவை காரணமாக இருந்தன.

யஷ்வந்த் சின்ஹா மட்டுமல்ல பாஜகவின் இன்னொரு கூட்டணிக் கட்சியான சிவசேனாவும் இதை ஒட்டிக் கடுமையாக மோடி அரசைத் தாக்கியது.

முன்னதாக தம் ஆட்சியில் GDP வளர்ச்சி 5.7 சதம் என நரேந்திர மோடி சொன்ன போது மன்மோகன் சிங்கும் சிதம்பரமும் அது வெறும் 3.7 சதம்தான் என்பதை நிறுவினர். அதைச் சுட்டிக் காட்டிய சிவசேனா இப்போது அதையே யஷ்வந்த் சொல்கிறாரே என்ன சொல்கிறாய் எனக் கேட்டது. ஆது மட்டுமல்ல "விகாஸ்" என நீ பெருமை அடித்துக் கொண்டாயே அதைப் பைத்தியக்காரத் தனம் என அப்போது ராகுல் சொன்னதல்லவா இப்போது உண்மை ஆகிவிட்டது என்றும் சிவசேனா மோடிக்கு சவால் விட்டது.

"உனது பண மதிப்பு நீக்கம் பொருளாதாரத்தை மேல் நோக்காமல் கீழ் நோக்கியல்லவா தள்ளியது. அதனால் உற்பத்தி குறைந்தது. பணவீக்கம் எகிறியது. காஸ், டீசல் எல்லாம் விலை கூடியது. வேலை வாய்ப்புகள் குறைந்தன. முதலீடுகள் சரிந்தன. வங்கித் துறை தத்தளிக்கிறது.

நாங்கள் ஓராண்டுக்கு முன்னால் இதைச் சொன்ன போது துரோகி என்றீர்களே, இப்போது என்ன சொல்கிறீர்கள்?" - என சிவசேனா மடக்கியபோது,

நரேந்திர மோடி வழக்கம்போல மௌனம் காத்தார்.

# சிந்தனையாளர்கள் மீது பாய்ந்த அடக்குமுறைகள்

புனேயில் உள்ள பீமா கொரேகான் என்னுமிடத்தில் பேஷ்வா அரசுப் படைகளை ஆங்கிலேயப் படைகளுடன் தலித் படைவீரர்கள் வீழ்த்திய நினைவுச் சின்னம் ஒன்று உள்ளது. நூறாண்டுகளுக்கு முன் 1917 டிச 31 அன்று அண்ணல் அம்பேத்கர் அஞ்சலி செய்த நினைவுச் சின்னம் அது. சென்ற 2017 டிசம்பர் 31 அன்று தலித்கள் மற்றும் பொதுமைச் சிந்தனை உடையவர்கள் அங்கு கூடி 'எட்கார் பரிஷத்' எனும் நிகழ்ச்சியை நடத்தினர். பேஷ்வா அரசை எதிர்த்து தலித் படை ஒன்று வெற்றிபெற்றதைக் கொண்டாடிய இந்த நிகழ்வில் ஆர்.எஸ்.எஸ். அமைப்பினர் புகுந்து குழப்பம் விளைவித்தனர்.

இந்த வெற்றிக் கொண்டாட்ட நிகழ்ச்சியை ஏற்பாடு செய்ததில் மாவோயிஸ்டுகளின் பங்கு இருந்ததாகச் சொல்லி சென்ற ஜூன் 2018இல் சுரேந்திரா காட்லிங், சுதிர் தவாலே, பேராசிரியை ஷோமாசென், மகேஷ் ராவத், ரோனா வில்சன் முதலான தலித் மற்றும் மனித உரிமைச் செயல்பாட்டாளர்களை மகாராஷ்டிர அரசு கைது செய்தது. அவர்கள் இன்று 'சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின்' (UAPA) கீழ் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

அந்தக் கைதைக் கண்டித்த செயல்பாட்டாளர் களான வழக்குரைஞரும் பி.யூ.சி.எல் அமைப்பின் தேசியத் தலைவருமான சுதா பரத்வாஜ், எழுத்தாளரும் மனித உரிமைப் போராளியுமான கௌதம் நவ்லக்கா. தலித் அறிவுஜீவியும் எழுத்தாளருமான ஆனந்த் டெல்டும்டே, செயல்பாட்டாளர் சூசன் ஆப்ரஹாம், ஜார்கன்டில் பழங்குடி மக்கள் மத்தியில் வேலை செய்யும் திருச்சியைச் சேர்ந்த பாதிரியார் ஸ்டான் சாமி, ஆந்திரக் கவிஞர் வரவர ராவ், வழக்குரைஞர் அருண் ஃப்ரெய்ரா ஆகியோரது வீடுகள் ஆக. 28, 2018 அன்று சோதனை இடப்பட்டது. இவர்களில் சிலரும் பின்னர் கைது செய்யப்பட்டனர்.

இப்படி எழுத்தாளர்கள், சிந்தனையாளர்கள், மனித உரிமைப் போராளிகள் முதலானோர் கொடும் தடுப்புக் காவல் சட்டங்களில் கைது செய்யப்படுவதை உலகளவில் அறிவுஜீவிகள் கண்டித்தனர்.

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள சுதா பரத்வாஜ், கவுதம் நவ்லக்கா, வெர்னான் கோன்சால்வ்ஸ், அருண் ஃப்ரெய்ரா, வரவரராவ் ஆகிய ஐவர் மீதும் தொடுக்கப்பட்டுள்ள வழக்கைத் தகர்த்து அவர்களை உடன் விடுதலை செய்யச் சொல்லி உலக அளவில் புகழ்பெற்ற வரலாற்று அறிஞர் ரொமிலாதாபர் மற்றும் பொருளியல் வல்லுனர் பேரா பிரபாதப் பட்நாயக், மூத்த பொருளியல் அறிஞர் தேவகி ஜெயின், காமன்வெல்த் மனித உரிமை அமைப்பின் மூத்த ஆலோசகர் மாஜா தாருவாலா ஆகியோர் உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவை சென்ற செப்டம்பர் 2018இல் தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா தலைமையிலான மூன்று நீதிபதிகள் அமர்வு தள்ளுபடி செய்தது. அது மட்டுமல்ல மகாராஷ்டிர காவல்துறை இதை விசாரணை செய்தால் இவ்வழக்கில் நீதி கிடைக்காது என்பதால் ஒரு சிறப்பு விசாரணைக் குழு (SIT) அமைக்க வேண்டும் என்கிற இவ் அறிஞர்களின் கோரிக்கையையும் அது தூக்கி எறிந்தது.

எனினும் தீபக் மிஸ்ரா உள்ளிட்ட இரு பெரும்பான்மை நீதிபதிகளின் தீர்ப்பிற்கு மாறாக நீதியரசர் சந்திர சூட் முன்வைத்த மாறுபட்ட கருத்துக்கள் பா.ஜ.க அரசும் அவர்களின் காவல் துறையும் எத்தனை வன்மமாக கருத்து மாறுபடும் அறிவுஜீவிகளைக் கையாளுகின்றனர் என்பதற்குச் சான்றாக அமைகின்றன. அவரது தீர்ப்பின் ஒரு சில அம்சங்கள் மட்டும் இங்கே:

1. இந்த நீதிமன்றம் சென்ற ஆக.29 அன்று மகாராஷ்டிர அரசு மற்றும் இதர பிரதிவாதிகளுக்கு விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்புவது என முடிவெடுத்த அடுத்த சில மணி நேரங்களில் புனே காவல்துறை இணை ஆணையர் ஷிவார்ஜிராவ் ஒத்கே ஒரு பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்றை நடத்தினார். கைது செய்யப்பட்ட ஐவரையும் புனே கொண்டு செல்லக் கூடாது எனவும் இவர்கள் தத்தம் வீடுகளிலேயே காவலில் வைக்கப்பட வேண்டும் எனவும் இந்த நீதிமன்றம் யாரைச் சொன்னதோ அவர்கள் ஐவர் மீதும் மேலும் அதிகமான குற்றங்கள் செய்துள்ளதற்கான சான்றுகள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் அந்தப் பத்திரிகை யாளர் சந்திப்பில் அவர் கூறினார். இவரது இந்தச்

செயல் மிகவும் கவலைக்குரிய ஒன்று. நீதிமன்றம் அன்று இட்ட ஆணைக்குப் பதிலளிக்கும் முகமாக எலக்ட்ரானிக் ஊடகத்தை இப்படிப் பயன்படுத்தி யுள்ளார் இந்த இணை ஆணையர்.

2. வழக்கு தொடர்பான இப்படியான சர்ச்சைக்குரிய தகவல்களை இந்த இணை ஆணையரும், சட்டம் ஒழுங்கு டி.ஜி.பியும் ஊடகங்களின் மூலம் வெளிப் படுத்தி உள்ளனர். நடுநிலையான விசாரணை என்பது இதன் மூலம் இப்போது கேள்விக்குறியாகி உள்ளது. விசாரணை நடந்து கொண்டுள்ளபோதே பொதுக் கருத்தில் இப்படியான ஐயங்களை விதைப்பது, குற்றம் சுமத்தப்பட்டவர்களின் மரியாதையைக் குறைக்கும் வண்ணம் கருத்தை உருவாக்குவது என்பதெல்லாம் விசாரணையின் நடுநிலைத் தன்மையைக் கேள்விக்குள்ளாக்குகிறது. குற்றத்தை உறுதி செய்வதோ தீர்ப்பளிப்பதோ போலீசின் வேலையல்ல. துரதிர்ஷ்டவசமாக இப்படியான நடவடிக்கை (நீதிமன்ற விசாரணைக்கு அப்பால்) ஒரு மீடியா விசாரணைக்கு (media trial) இன்று வழிவகுத்துள்ளது.

3 சுதா பரத்வாஜ் தோழர் பிரகாஷுக்கு எழுதிய கடிதம் என ஒன்று மீடியாவுக்குக் கொடுக்கப் பட்டுள்ளது. அந்தக் கடிதத்தின் உண்மைத்தன்மை குறித்துக் காத்திரமான பல கேள்விகள் உள்ளன. தேதியில்லாத கடிதம் அது. ஈமெயில் தலைப்பு விவரமும் அதில் இல்லை. இந்தக் கடிதம் பொய்யாக உருவாக்கப்பட்டது என்கிற கருத்துடன் ஒரு அறிக்கை நீதிமன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளது. யாரோ மராத்தி மொழியை விவரமாகப் பேசக் கூடிய ஒருவர் இட்டுக்கட்டிச் செய்த வேலைதான் இக்கடிதம் என அது கூறுகிறது. இக்கடிதத்தில் 17 இடங்களில் தேவநாகிரி எழுத்துக்களில் சொற்கள் எழுதப்பட்டுள்ளன. சுதா பாரத்வாஜ் மகாராஷ்டிரத்தைச் சேர்ந்தவர் அல்ல. மராத்தி பேசுபவரும் அல்ல. மராத்தி மொழி இலக்கண விதிகளுக்கிணங்க தேவநாகிரி எழுத்துக்களில் அவர் எழுதியிருப்பதற்கு வாய்ப்பில்லை.

4. CrPC 41B-யின்படி ஒருவரைக் கைது செய்யும் பொது அதற்கு சாட்சியாக நிறுத்தப்படுபவர் ஒரு சுதந்திரமான நபராக இருக்க வேண்டும். ஆனால் இங்கு காட்டப்படும் இரு சாட்சிகளும் புனேயிலிருந்து கொண்டு வரப்பட்டவர்கள். புனே முனிசிபல் கார்பொரேஷனில் பணி செய்பவர்கள்.

5. நீதியின் மேல் உள்ள பற்றின் அடிப்படையிலும், புலனாய்வு செய்யப்படும் விதத்தில் தீவிரமான ஐயங்கள் ஏற்பட்டுள்ள நிலையிலும் இந்தப் புலனாய்வை ஒரு சிறப்புப் புலனாய்வு முகமை அல்லது குழுவிடம் ஒப்படைபது அவசியம் எனக் கருதுகிறேன். அப்போதுதான் இவ்வழக்கில் எவ்வித் சமரசத்துக்கும் ஆட்படாது நீதி கிடைக்கும்.

6. இவர் மீதும் தொடுக்கப்பட்டுள்ள வழக்கை ரத்து செய்யக் கோரியுள்ள இம்மனுதாரர்கள் யாரோ முகவரி அற்றவர்கள் அல்ல. தனிப்பட்ட நலன் களுக்காகவோ, அரசியல் காரணங்களுக்காகவோ இவர்கள் இந்த மனுவைத் தாக்கல் செய் துள்ளார்கள் என யாரும் சொல்ல இயலாது.

7. இவர்கள் மீதான மனித உரிமை மீறல்கள் அவர்களின் கண்ணியத்தைப் பாதித்துள்ளது என்பதில் ஐய மில்லை. இதனை எந்த இழப்பீடும் ஈடுசெய்துவிட இயலாது. இந்தப் புலனாய்வு பொருளற்றுப் போகாமல் இருக்க வேண்டுமானால் ஒரு சிறப்புப் புலனாய்வும் குழுவிடம் இவ்வழக்கு விசாரணையை ஒப்படைக்க வேண்டும் என்பதே என் கருத்து.

# மோடி–அம்பானி–அதானி கூட்டு களவாணிகள்

மோடி அரசாங்கம் பெரும் கார்ப்பரேட்டு களுடன் சேர்ந்து கூட்டு களவாணி முதலாளித்துவம் அமலாக்கியது என்பது அனைவரும் அறிந்த ஒன்று! குறிப்பாக தனது வெளிநாடு பயணங்களின் பொழுது அதானிக்கும், அனில் அம்பானிக்கும் இலாபம் கொழிக்கும் பல ஒப்பந்தங்களை மோடி நேரடியாகவே உருவாக்கித் தந்தார்.

அதன் விவரங்கள்:

| மோடி சென்ற தேசம் | தேதி | பலன் பெற்ற முதலாளி | ஒப்பந்தம்/ பொருள் | மதிப்பு/ரூபாய் |
|---|---|---|---|---|
| பிரான்ஸ் | 09-12.04.2015 | அனில் அம்பானி | ரபேல் விமானம் | 58,000 கோடி |
| ஸ்வீடன் | 22.03.2015 | அனில் அம்பானி | கடற்படைக்கு ஆளில்லா விமானம் | 1,000 கோடி |
| ஸ்வீடன் | 15/16.04.2015 | அதானி | ஒற்றை இஞ்சின் போர் விமானம் | 60,000 கோடி |
| இஸ்ரேல் | 4-6.07.2017 | அதானி | ஆளில்லா விமானம் | 1,500 கோடி |
| இஸ்ரேல் | 4-6.07.2017 | அனில் அம்பானி | வான் வழி ஏவுகணை | 65,000 கோடி |
| ரஷ்யா | 02.07.2017 | அம்பானி | இராணுவ ஆயுத உற்பத்தி | 50,000 கோடி |
| அமெரிக்கா | 05/06.05.2016 | அனில் அம்பானி | அமெரிக்க ஏழாவது கப்பற்படை பராமரிப்பு பணி | 15,000 கோடி |
| ஜப்பான் | 30.08/03.09.2016 | அதானி | சரக்கு இரயில் | தகவல் இல்லை |
| ஆஸ்திரேலியா | 14/16.09.2014 | அதானி | நிலக்கரி உற்பத்தி | 6,200 கோடி |
| மலேசியா | 21/22.09.2015 | அதானி | மலேசிய துறைமுகம் விரிவாக்கம் | 2,15,000 கோடி |
| ஈரான் | 22/23.05.2016 | அதானி | சபார் துறைமுகம் | 4,000 கோடி |
| மொசாம்பிக் | 07.07.2016 | அதானி | பருப்புவகை இறக்குமதி | தகவல் இல்லை |
| ஓமன் | 11/12.02.2018 | அதானி | ஓமனில் பொருளாதார மண்டலம் உருவாக்குதல் | தகவல் இல்லை |
| பங்களாதேஷ் | 06/07.06.2015 | அதானி | மின்சார உற்பத்தி நிலையம் அமைத்தல் | 10,000 கோடி |
| பங்களாதேஷ் | 06/07.06.2015 | அனில் அம்பானி | மின்சார உற்பத்தி நிலையம் அமைத்தல் | 20,000 கோடி |
| பாகிஸ்தான் | 25.12.2015 | அதானி | மின்சார உற்பத்தி நிலையம் அமைத்தல் | 25,000 கோடி |
| மியான்மர் | 06/07.09.2017 | அதானி | மின்சாரம் விற்பனை | 3,350 கோடி |
| சீனா | 14/16.05.2015 | அதானி | 36 ஒப்பந்தங்கள் | 1,48,000 கோடி |

- அனில் அம்பானிக்கு பெற்று தந்த ஒப்பந்தங்களின் மதிப்பு 1,86,000 கோடி
- அதானிக்கு பெற்று தந்த ஒப்பந்தங்களின் மதிப்பு 4,92,000 கோடி
- பாகிஸ்தானுக்கு எதிரான சர்ஜிக்கல் தாக்குதலின் பொழுதும் மோடியின் நண்பர் அதானி பாகிஸ்தானுக்கு மின்சாரம் தந்தார். என்னே நமது சவுக்கிதாரின் பரந்த மனம்!
- சீனாவுடன் போர் வெறி ஒரு புறத்தில்; மறுபுறத்தில் அதானிக்கு 1,48,000 கோடி சீன ஒப்பந்தம்.
- கூட்டு களவாணி முதலாளித்துவத்தின் தலைசிறந்த உதாரணம் மோடி-அம்பானி-அதானி உறவு!
- இந்திய மக்களுக்கு எதிரான இந்த கூட்டு களவாணி முதலாளித்துவ உறவை முறியடிக்க பா.ஜ.கவும்- அ.இ.அ.தி.மு.க. கூட்டணி தோற்கடிக்கப்படுவது மிக மிக அவசியம்.

‘தீக்கதிர்’ இதழிலிருந்து

பிப் 19, 2019 – The Hindu நாளிதழில் பாதுகாப்புத்துறை ஆய்வறிஞர் ஹாப்பி மோன் ஜேகப் தரும் சில முக்கிய தகவல்கள்:



# பாதுகாப்புத் துறையிலும் படுதோல்விகள்

1. நம் இந்திய ஜவான்கள் 40 பேர்களைக் கொன்ற இந்தத் தற்கொலைத் தாக்குதலை நடத்திய ஜெய்ஷ் - ஏ- முஹம்மட் (JeM) தீவிரவாதி அடில் அஹமட் தர் (22) எனும் இளைஞன் பாக் தீவிரவாதி அல்ல. அவன் உள்ளூர் காஷ்மீரி. பயன்படுத்தப்பட்ட வாகனமும் உள்ளூர் வாகனமே. காஷ்மீர் இளைஞர்கள் மத்தியில் இந்திய அரசு, இராணுவம் ஆகியவற்றின் மீதான வெறுப்பு இன்று அதிகரித் துள்ளது. கடந்த நாலரை ஆண்டுகளில் இந்த அந்நியப் படல் அதிகரித்துள்ளது கவனத்துக்குரியது.

2. காங்கிரஸ் ஆட்சியின்போது 2013ல் உள்ளூர் இளைஞர்களில் வெறும் 6 பேர்கள் மட்டுமே தீவிரவாதப் பாதையை நோக்கிச் சென்றனர். அடுத்த நான்காண்டுகளில், அதாவது 2018ல் இந்த எண்ணிக்கை 200 ஐ எட்டியது.

3. நரேந்திர மோடி அரசு அதிகாரத்திற்கு வந்த இந்த நாலரை ஆண்டுகளில் தாக்குதல் நிறுத்த மீறல்கள் (Ceasefire Violations) 5 மடங்குகள் அதிகரித்துள்ளன.

4. எல்லை தாண்டிய ஊடுருவல் முயற்சிகள் இரண்டு மடங்குகளுக்கு மேல் அதிகரித்துள்ளன.

5. தீவிரவாத அடிப்படையிலான வன்முறைகள் பல மடங்கு அதிகரித்துள்ளன.

6. இப்படிச் சூழ்நிலை மோசமாகிக் கொண்டே போனாலும் பா.ஜ.க அரசு அதிருப்தியாளர்களுடன் எந்தப் பேச்சுவார்த்தையையும் தொடர முயற்சிக்கவில்லை.

7. பா.ஜ.க + PDP அரசின் அணுகல்முறை மென்மையான பிரிவினைவாதக் குரல்களை ஒடுக்கி அவற்றின் இடத்தை இத்தகைய வன்முறைச் செயல்பாடுகள் ஈடுசெய்ய வழிவகுத்தது.

8. இந்த அரசின் முரட்டுத்தனமான அணுகல்முறைகள் (aggressive tactics) காஷ்மீர வெகுஜன மனநிலையை இந்தியாவிற்கு எதிராகத் திருப்புவதற்குக் காரணமாயின.

9. இன்று அனைத்துக் கட்சிகளும் தேசம் முழுக்கவும் இந்திய அரசின் பின்னால் நிற்கிற போதும் மோடி அரசு தனது அடுத்த கட்ட நடவடிக்கைகளின் போது தங்களது முந்தைய அணுகல்முறை ஒரு தோல்வி என்பதை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை.

10. இறுதியாக, பாஜக அரசின் உளவுத்துறை படுதோல்வி அடைந்துள்ளதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். ஏற்கனவே கவனத்துக்கு உரியவனாக இருந்த இந்த உள்ளூர் இளைஞன் ஒரு வாகனம் நிறைய கொடும் வெடிமருந்துகளுடன் ஒரு தேசிய நெடுஞ்சாலையில் இப்படியான ஒரு நெருக்கடியான காலகட்டத்தில் வருவதற்கு எப்படி அனுமதிக்கப்பட்டான்? CRPF வீரர்களை ஏற்றிச் சென்ற 78 வாகனங்களும் ஒரே தொடராகச் (Convoy) செல்ல ஏன் அனுமதிக்கப்பட்டன?

ஜேக்கப்பின் இந்தக் கேள்விகள் மிக அடிப்படையானவை. மத்தியில் இப்போது நாங்கள் ஆள்கிறோம். காங்கிரசல்ல. கிழித்துவிடுவோம் என்றெல்லாம் அமித்ஷாவும் மற்றவர்களும் தொங்கிப்போன மீசையை முறுக்குவதற்கு முன்னால் மக்கள் முன் பதில் சொல்ல வேண்டும்!

**பேராசிரியர் அ. மார்க்ஸ், இணையத்தில் எழுதியது**

**இதழில் இடம் பெற்றுள்ள கட்டுரைக்கான ஆதாரங்கள்:**

- புரட்சிப் பெரியார் முழக்கம் இதழ்கள்
- ‘பிரண்ட் லைன்’
- Dismantiling India - A Four Year Rule
- ‘தி வொயர்’
- ‘தி பிரின்ட்’
- ‘மோடி மாயை’ – சவுக்கு சங்கர்
- அ. மார்க்ஸ் இணைய கட்டுரைகள்
- எக்னாமிக் அண்ட் பொலிட்டிக்கல் வீக்லி
- ‘கேரவான்’
- ஆங்கில நாளேடுகள் – இணையங்கள்

# பிறந்து பிறந்து சாகிறது புதிய இந்தியா!



**கவிஞர்**
**பழனி பாரதி**

விவசாயிகளுக்கு
**'வாய்க்கரிசி'** போடுவதுதான்
புதிய இந்தியா

நெசவாளர்களுக்கு
**'சவத்துணி'** நெய்வதுதான்
புதிய இந்தியா

சில்லறை வணிகர்களுக்கு
**'நெற்றிக்காசு'** வைப்பதுதான்
புதிய இந்தியா

மாட்டுக்கறி உண்பவரைக்
கொன்று
கொன்று
**'மனிதக்கறி'** உண்பதுதான்
புதிய இந்தியா

இல்லாதவனின்
**'கோவணத்தைப் பிடுங்கி'**
இருக்கிறவனுக்கு
கம்பளம் விரிப்பதுதான்
புதிய இந்தியா

மருத்துவமனைகளில்
**'மழலைகளின் மூச்சறுத்து'**
வீடுகளில்
**'கிருஷ்ண பாதம்'** வரைவதுதான்
புதிய இந்தியா

மாநிலக் கல்வி உரிமை பறித்து
சமூகநீதி புத்தகம் **'கிழித்து'**
உலக மூலதனத்துக்கு
விசிறி விடுவதுதான்
புதிய இந்தியா

பெண்களின் **'தீட்டுத்துணிக்கும்'**
வரிவிதித்து
பத்து லட்சம் ரூபாய் 'கோட்டு' அணிந்து
சுதந்திரக்கொடி ஏற்றுவதுதான்
புதிய இந்தியா

செத்துச் செத்துப் பிறக்கிறது
புதிய இந்தியா
பிறந்து பிறந்து சாகிறது
புதிய இந்தியா.

Printed by K.RAJENDRAN. Published and Owned by K.RAJENDRAN and Printed at BEAUTIFUL PRINTER, 27/65, Devaraj Street, Royapettah,Chennai-600014 and Published at Old No.29, New No.16, Ist Street, Journalists Colony, Srinivasapuram, Thiruvanmiyur, Chennai-600041. Editor:K.RAJENDRAN